# இஸ்லாம்

## ஆசிரியர் வழிகாட்டி

## தரம் - 10

**(2015 ஆம் ஆண்டிலிருந்து நடைமுறைப்படுத்தப்படவுள்ளது)**

சமயங்கள் மற்றும் விழுமியங்கள் கல்வித் துறை

தேசிய கல்வி நிறுவகம்

ஸ்ரீலங்கா

www.nie.lk

இஸ்லாம்

தரம் 10
ஆசிரியர் வழிகாட்டி

முதலாம் பதிப்பு 2015

© தேசிய கல்வி நிறுவகம்

ISBN :

சமயங்கள் மற்றும் விழுமியங்கள் கல்வித் துறை

தேசிய கல்வி நிறுவகம்

ஸ்ரீலங்கா

இணையத் தளம் : www.nie.lk
மின்னஞ்சல் info@nie.lk

பதிப்பு :
தேசிய கல்வி நிறுவகம்

## பணிப்பாளர் நாயகம் அவர்களின் செய்தி

இலங்கையின் இடைநிலைக் கல்வியில் புதிய தேர்ச்சி மையப் பாடத்திட்டத்தின் முதற் கட்டம் 2007 ஆம் ஆண்டு அறிமுகப்படுத்தப்பட்டது. எட்டு ஆண்டுகளுக்கொருமுறை மேற்கொள்ளப்படும் கலைத்திட்ட மறுசீரமைப்பின் மூலம் இது அறிமுகப்படுத்தப்பட்டது. தேசிய மட்டத் தேர்ச்சிகளை அபிவிருத்தி செய்யும் நோக்கின் அடிப்படையில் தேசிய கல்வி ஆணைக்குழுவின் விதப்புரைகளுக்கமைய அப்போது நடைமுறையிலிருந்த உள்ளடக்கம் சார்ந்த கல்வி முறைமை இதன் மூலம் மாற்றியமைக்கப்பட்டது.

தேர்ச்சி மையக் கலைத்திட்டத்தின் இரண்டாம் கட்ட மறுசீரமைப்பானது 2015ஆம் ஆண்டிலிருந்து தரம் 6, 10 ஆகிய வகுப்புக்களுக்கு அமுல்படுத்தப்படவுள்ளது. இந் நோக்கத்தை அடையும் பொருட்டுத் தேசிய கல்வி நிறுவகம் ஆய்வை அடிப்படையாகக் கொண்ட பேறுகளையும் ஆர்வலர்களுடைய பல்வேறு ஆலோசனைகளையும் பலதரப்பட்டவர் களிடமிருந்தும் பெற்றுக்கொண்டது. அவற்றின் அடிப்படையில் நியாயப்படுத்தப்பட்டதொரு செயன்முறையை அறிமுகப்படுத்தியதுடன் அதற்கமைவான பாடத்திட்டங்களையும் மேற்படி தரங்களுக்காக விருத்தி செய்துள்ளது.

இந்த நியாயப்படுத்தற் செயன்முறையிற் கலைத்திட்ட மறுசீரமைப்பின் போது நிலைக்குத்தான ஒருங்கிணைப்பு முறை பயன்படுத்தப்பட்டு, கீழிருந்து மேல்நோக்கிய அணுகுமுறையில் அனைத்து பாடங்களுக்குமான தேர்ச்சி மட்டங்கள் முறைமையாக விருத்தி செய்யப்பட்டுள்ளன. மேலும்,அடிப்படை விடயங்களிலிருந்து உயர் மட்டத்தை நோக்கிச் செல்லும் வகையில் அவை ஒழுங்குபடுத்தப்பட்டும் உள்ளன. பாட உள்ளடக்கத்திற் காணப்படும் கூறியது கூறல் மற்றும் பாட உள்ளடக்கச் சுமை என்பவற்றை இழிநிலைக்கு இட்டுச் செல்லவும் மாணவர் நேயமானதும் நடைமுறைக்கேற்றதுமான கலைத்திட்டமொன்றை உருவாக்கும் நோக்கிலும் கிடையான ஒருங்கிணைப்பானது பயன்படுத்தப்பட்டுள்ளது.

ஆசிரியர்களுக்குத் தேவையான வழிகாட்டல்களை வழங்கவும் பாடத்தைத் திட்டமிடவும் கற்பிக்கவும் செயற்பாடுகளை முன்னெடுக்கவும் அளவீடு மற்றும் மதிப்பீடுகளை மேற்கொள்ளவும் உதவுமுகமாக ஆசிரியர் வழிகாட்டியிற் புதிய வடிவமைப்பு அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது. இவ் வழிகாட்டல்கள் ஆசிரியர்கள் வகுப்பறையில் மென்மேலும் உற்பத்தித் திறனுள்ளதும் விளைதிறன் மிக்கதுமான வகையிற் துலங்குவதற்கு உதவும்.

புதிய ஆசிரியர் வழிகாட்டிகள் மாணவர்களது தேர்ச்சிகளை விருத்தி செய்யும் வகையிற் தர உள்ளீடுகளையும் மேலதிக செயற்பாடுகளையும் தெரிவு செய்வதில் ஆசிரியர்களுக்குச் சுதந்திரத்தை வழங்கியுள்ளது. இப்புதிய ஆசிரியர் வழிகாட்டிகள் பாட உள்ளடக்கச் சுமையை விடுத்து, விதந்துரைக்கப்பட்ட பாடநூல்களின் மூலம் பாட உள்ளடக்கத்தைப் பூரணப் படுத்தியுள்ளது. ஆகவே, ஆசிரியர்கள் புதிய ஆசிரியர் வழிகாட்டிகளைப் பயன்படுத்தும் அதேவேளை கல்வி வெளியீட்டுத் திணைக்களத்தினாற் தயாரிக்கப்பட்ட பாடநூல்களையும் பொருத்தமான வகையிற் பயன்படுத்துதல் வேண்டும்.

ஆசிரியர் மையக் கல்வி முறைமையிலிருந்து மாணவர் மையக் கல்வி முறைமைக்குத் தளமாற்றம் செய்வதும் வேலையுலகிற்கு ஏற்ற வகையிற் பொருத்தமான மனித வளங்களை விருத்தி செய்வதும் தேவையான தேர்ச்சிகளையும் திறன்களையும் பாடசாலையிலிருந்து வெளியேறும் மாணவர்கள் பெற்றுக்கொள்வதற்குத் தேவையான செயற்பாடு சார்ந்த கல்வி முறைமையை விருத்தி செய்வதும் மேற்படி நியாயப்படுத்தப்பட்ட பாடத்திட்டம் மற்றும் ஆசிரியர் வழிகாட்டியின் புதிய வடிவமைப்பு என்பவற்றின் அடிப்படை நோக்கங்களாகும்.

புதிய ஆசிரியர் வழிகாட்டியை உருவாக்குவதிற் பங்களிப்புச் செய்த தேசிய கல்வி நிறுவகத்தின் கல்விசார் அலுவல்கள் சபை மற்றும் பேரவை உறுப்பினர்களுக்கும் அனைத்து வளவாளர் களுக்கும் எனது நன்றிகள் உரித்தாகின்றன.

பணிப்பாளர் நாயகம்
தேசிய கல்வி நிறுவகம்

## பிரதிப் பணிப்பாளர் நாயகத்தின் செய்தி

கற்றல் என்பது பரந்து விரிந்து செல்வதொன்றாகும். அது வாழ்க்கையை மேம்படுத்தவும் எளிமைப்படுத்தவும் வல்லது. மனிதன் கற்கும் ஆற்றலில் உச்ச நிலையில் உள்ளான். மனித, சமூக அபிவிருத்தியை மையமாகக் கொண்ட ஒரு நாடும் அதன் சமூகமும் அறிவாற்றலினால் இனங்கண்ட, நியமமற்றவற்றைக் களைவதற்கும். நல்லவற்றைப் பண்படுத்திப் புத்துலகைப் படைப்பதற்கான கருவியாய் அமைவது கல்வியாகும்.

கற்றலுக்காகப் பெறுமதிமிக்கவை எவையோ அவையும், கற்றல் முறையியல்களும் வசதிகளும் கல்வியைச் சூழ உருவாதல் வேண்டும். கலைத்திட்டம், பாடத்திட்டம், வழிகாட்டிகள், வசதி செய்வோர் போன்றவையெல்லாம் இவ்வகையிலேயே கல்வித்துறையிற் சேர்ந்து கொள்கின்றன.

இலங்கை, நவீன செல்நெறிகளையும் பண்டைய அருஞ்செல்வங்களையும் கலக்கச் செய்து தமது கல்விக்கோலத்தை உருவாக்கிக்கொண்டுள்ளது. சமகாலத் தேவைகளுக்கமைய மறுசீரமைப்புகளினூடாக எட்டு ஆண்டுகளுக்கொருதடவை இற்றைப்படுத்தப்படும் கலைத்திட்டத்துக்குரிய ஒரு கற்றல் வளமாக இவ்வாசிரியர் வழிகாட்டிகள் தயாரிக்கப்படுகின்றன.

பாடக் குறிக்கோள்களின் ஒத்ததன்மையை தேசிய மட்டத்தில் பேணுவது அவசியமாகும். எனினும், ஆசிரியர் வழிகாட்டியிற் தரப்பட்டுள்ள கற்றல் முறையியல்கள் சற்றேனும் பிசகாது அச்சொட்டாகப் பயன்படுத்துவதற்குரிவையன்று. பாடத்திட்டத்தின் தேர்ச்சிகள், தேர்ச்சி மட்டங்களை அடைவதற்காகப் பாடவிடயங்களின் மூலம் கற்றற் பேறுகளை அண்மிப்பதற்காகக் கற்றல் முறையியல்களை ஆக்கபூர்வமானதாக மாற்றியமைத்துக் கொள்வதற்கான சுதந்திரம் வசதி செய்து கொடுப்போருக்கு உண்டு என்பதில் ஐயமில்லை. மாணவரது அடைவுச் சதவீதத்தை உயரிய மட்டத்திற்கு இட்டுச் செல்ல உதவும் மற்றும் அதற்கான வசதிகளைச் செய்து கொடுக்கும் ஆசிரியரது வகிபாகத்திற்கு உந்துதலளிப்பதற்காகத் தயாரிக்கப்பட்டுள்ள ஆசிரியர் வழிகாட்டியை ஆசிரியர்கள் மட்டுமன்றி மாணவரும் பெற்றோரும் கூட பயன்படுத்தலாம். குறித்த பாடத்தின் பாடநூலுக்குத் துணையாக அமையும் ஒரு சாதனமான இவ்வாசிரியர் வழிகாட்டி, மற்றுமொரு பாடநூல் அன்று என்பதை அறிந்து பாடநூல், ஆசிரியர் வழிகாட்டி ஆகிய இரண்டையும் ஆசிரியர்கள் பயன்படுத்த வேண்டும்.

அந்தந்தப் பாடத்தின் அடைவு தொடர்பில், தேசிய நிலைப் பரீட்சகர்களால் எதிர்பார்க்கப்பெறும் அடைவுகளை, மாணவர்கள் அடைந்துள்ளனரா என்பது பற்றிப் பாடநிறைவில் வகுப்பறையில் வசதி செய்து கொடுப்பவர்களால் மதிப்பிடப் பெறுதல் வேண்டும். களிப்பூட்டத்தக்க செழுமையான பண்பாட்டைக் கட்டியெழுப்புவதற்கான ஒரு கருவியாக இவ்வாசிரியர் வழிகாட்டி அமைய வேண்டுமெனப் பிரார்த்திக்கின்றேன்.

பீடாதிபதி, பிரதிப் பணிப்பாளர் நாயகம்
மொழிகள், மானுடவியல் மற்றும் சமூக விஞ்ஞான பீடம்
தேசிய கல்வி நிறுவகம்

**வளப்பங்களிப்பு**

**வழிகாட்டலும் அனுமதியும்**

**கல்வி சார் அலுவல்கள் சபை**
**தேசிய கல்வி நிறுவகம்**

**இணைப்பாக்கம்**

**அஷ்ஷெய்க் ஜே.எம்.ஜெஸார்**
விரிவுரையாளர்
சமயங்கள் மற்றும் விழுமியக் கல்வித் துறை
தேசிய கல்வி நிறுகவம்

**விடய ஆலோசனை**

**கலாநிதி எம்.ஏ.எம்.சுக்ரி**
பணிப்பாளர்
நளீமிய்யா இஸ்லாமிய கலாபீடம், பேருவளை

**அஷ்ஷெய்க் ஏ.ஸீ. அகார் முஹம்மத்**
பிரதிப் பணிப்பாளர்
நளீமிய்யா இஸ்லாமிய கலாபீடம், பேருவளை

**மௌலவி ஏ.எல்.எம். அலியார்**
பிரதிநிதி, கல்விக் குழு,
அகில இலங்கை ஜம்இய்யதுல் உலமா

**மௌலவி எம்.டீ. இக்பால்**
ஆசிரிய ஆலோசகர் - இஸ்லாம்
கொழும்பு கல்வி வலயம்

**எழுத்தாளர் குழு**

**உள்ளக** **அஷ்ஷெய்க் ஜே.எம்.ஜெஸார்**
தேசிய கல்வி நிறுவகம்

**வெளியக** **எம்.எச்.எம். நாளிர்**
ஓய்வுபெற்ற ஆசிரியர்.

**எம்.எச்.எம். புஹாரி**
ஆசிரிய ஆலோசகர்.

**எம்.எஸ்.எம். அனஸ்**
ஆசிரியர், அலுத்கம்வீதிய தேசிய பாடசாலை.

**எம்.எம்.பஸ்லுர் ரஹ்மான்**
பாபுஸ்ஸலாம் முஸ்லிம் வித்தியாலயம், நாம்புளுவ.

**எஸ்.ஏ.எம். றிஸ்வி**
ஆசிரியர், அல்ஹுதா மு. மகா வித்தியாலயம், ரிதீகம.

**எஸ்.எம்.ஆர். சூதீன்**
ஓய்வுபெற்ற பிரதம செயற்றிட்ட அதிகாரி, தே.க.நி.

**எம்.எப்.எம்.பாஹிம்**
ஆசிரிய ஆலோசகர், மினுவன்கொடை கல்வி வலயம்.

**எம்.ஏ ஜெம்ஸீத்**
ஆசிரியர், அல்ஹிதாயா மகா வித்தியாலயம், கொழும்பு 10

# ஆசிரியர் வழிகாட்டியைப் பயன்படுத்துவதற்கான ஆலோசனைகள்

ஆசிரியர் வழிகாட்டி, பாடத்திட்டத்தை உரிய முறையில் அமுல்படுத்தும் செயன்முறையை உறுதிப்படுத்துவதை இலக்காகக் கொண்டு தயாரிக்கப்பட்டுள்ளது. மறு சீரமைக்கப்பட்ட பாடத்திட்டம் மாணவர்களிடம் எதிர்பார்க்கும் அடைவு மட்டங்களையும் அதனை அடைந்து கொள்ளுவதற்கு பயன்படுத்தக்கூடிய செயன்முறையையும் இது விளக்குகிறது. மேலும் எதிர்பார்க்கப்பட்ட அடைவுகள் குறித்து மதிப்பிடுவதற்கும் ஆசிரியருக்கு இது உதவுகிறது.

இந்த ஆசிரியர் வழிகாட்டி கற்றல் கற்பித்தல் செயற்பாட்டை திட்டமிடும் பொறுப்பை முழுமையாக ஆசிரியரிடம் ஒப்படைக்கிறது. எனவே குறிக்கப்பட்ட கற்றல் பேறுகளை அடைந்து கொள்வதற்காக ஆசிரியர் பொருத்தமான கற்பித்தல் முறையொன்றைப் பயன்படுத்திக்கொள்ளுவதற்கான சுதந்திரத்தை இது வழங்குகின்றதுது.

இஸ்லாம் பாட கற்றல் கற்பித்தல் செயன்முறையைத் திட்டமிடும்போது அறிவு, திறன் மாத்திரமன்றி மனவெழுச்சி சார் கூறுகளில் மாற்றங்களை ஏற்படுத்துவதை இலக்காகக் கொள்ள வேண்டும் என எதிர்பார்க்கப்படும் அதேவேளை இவ்வாசிரியர் வழிகாட்டி அதற்குத் தேவையான அடிப்படை அம்சங்கள் குறித்து வழிகாட்டுகின்றது.

அத்தோடு உரிய தேர்ச்சி மட்டத்தை அடைந்து கொள்ளுவதற்காக விடய உள்ளடக்கத்தை வழங்குவதற்கு தேவையான காலப்பகுதியை சுயாதீனமாக தீர்மானித்துக்கொள்ளும் சுதந்திரம் ஆசிரியருக்கு வழங்கப்பட்டுள்ளது. ஆனால் தேர்ச்சி மட்டம் மற்றும் கற்றல் பேறுகளை அடிப்படையாகக் கொண்டு பாடத்தின் எல்லையை வரையறுத்துக்கொள்வது பாடத்தை திட்டமிட இலகுவாக அமையும் என எதிர்பார்க்கப்படுகிறது.

கற்றல் - கற்பித்தலின் போது மாணவர்களின் தேடலை மேம்படுத்துவதற்காக குழு ரீதியான செயற்பாடுகள் உதவுகின்றன. இக்குழுச் செயற்பாடுகளுக்குத் தேவையான நூல்கள் மற்றும் ஏனைய வளங்களை பாடசாலைச் சூழலில் பெற்றுக்கொள்ளக் கூடிய நிலையினை ஏற்படுத்துவதனூடாக திட்டமிடப்பட்ட இலக்கை அடைவதை உறுதிப்படுத்த முடியும்.

இவ்வழிகாட்டி ஆசிரியருக்கான வழிகாட்டல் குறிப்புக்களை கொண்டுள்ளதே தவிர மாணவர்களுக்கான மேலதிக வாசிப்புக்கானதல்ல என்பதை கவனத்தில் கொள்ள வேண்டும். மாணவர் - ஆசிரியர் - பெற்றோர் என்ற தொடர்பை வலுப்படுத்தி மாணவர் செயற்பாட்டை வீட்டுச் சூழலுடன் இணைக்கும் வகையில் பாடத்தை திட்டமிடுவதற்கான வழிகாட்டலின் இறுதிப் பகுதியில் வீட்டுச் சூழலில் பின்தொடர் செயற்பாடு என்ற பகுதி இணைக்கப்பட்டுள்ளது. இது ஒரு பரீட்சார்த்த முயற்சியாகும். கற்றல் கற்பித்தல் நடவடிக்கைகளில் பெற்றோரின் பரஸ்பர ஈடுபாடும் அனுபவப் பகிர்வும் பிள்ளைகளின் கற்றலை மேலும் வளப்படுத்தும் என நாம் நாம்புகிறோம். ஆனால் இப்பகுதி பிள்ளைகளுக்கு மேலதிக சுமையாக அமையாத வகையில் அமுல்படுத்தப்பட வேண்டும் என வலியுறுத்துகிறோம். அத்தோடு பிரதேசத்தின் தன்மை, மாணவரின் அனுபவம், பெற்றோரின் ஈடுபாடு முதலான காரணிகளை முன்வைத்து இச்செயற்பாடுகளில் பொருத்தமான மாற்றங்களை மேற்கொள்ளும் சுதந்திரம் வழங்கப்பட்டுள்ளது.

கல்வி மறுசீரமைப்பின் ஊடாக எதிர்பார்க்கப்படும் மற்றங்களை அடைந்து கொள்ளும் வகையில் மாணவரின் சிந்திக்கும் ஆற்றல், சமூகத் திறன்கள், தனியாள் திறன்கள் என்பவற்றை விருத்தி செய்து கொள்ளும் வகையில் பயன்மிக்க கற்பித்தலின் ஊடாக சிறந்ததொரு எதிர்கால சந்ததியை உருவாக்குவதே எதிர்பார்ப்பாகும்.

செயற்றிட்டத் தலைவர்

**தரவிருத்தி உள்ளீடுள்**

- டிமை கடதாசி
- ∴பெலற் பேனாக்கள்
- எழுது கடதாசி
- பென்சில்கள்
- அடிமட்டம்
- றெஜிபோம்
- பிறிஸ்டல் போர்ட்
- ஒலி / ஒளி நாடாக்கள்
- இறுவட்டுக்கள்
- பசை நாடாக்கள்
- இணையத்தளங்கள்

**நூல்கள்**

- தர்ஜமதுல் குர்ஆன் - அப்துல் ஹமீத் பாகவி
- றியாழுஸ் ஸாலிஹீன்- இமாம் நவவி (ரஹ்) தமிழ் மொழி பெயர்ப்பு
- அல்குர்ஆனின் வரலாறும் வாழ்வுநெறியும்- கலாநிதி எம்.ஏ.எம்.ஷுக்ரி
- நபி மொழி திரட்டிய நல்லவர்கள் - முஹம்மது முஸ்தபா
- ஹதீஸின் வரலாறும் அதன் முக்கியத்துவமும்- கலாநிதி எம்.ஏ.எம்.சுக்ரி
- அமல்களின் சிறப்பு - மௌலானா ஸகரிய்யா ஸாஹிப் (ரஹ்)
- ஒழுக்க மாண்புகள் - ஷெய்க் அல் கஸ்ஸாலி
- ஆன்மீக வாழ்வு -எம்.எம்.எம்.அக்ரம்
- அர்ரஹீக் - எஸ். முபாரக் பூரி
- இஸ்லாம் உங்கள் பார்வைக்கு - ஹமூதா அத்தி
- இஸ்லாத்தில் இறை நம்பிக்கை - ஹஸன் ஐயூப்
- உழைப்பும் வட்டியும் - ஏ.ஸீ.அகார் முகம்மத்
- நாற்பது நபிமொழிகள் - இமாம் நவவி
- திருமணம் - எம்.ஏ.எம்.மன்ஸூர்
- அல்குர்ஆன் ஓர் அறிமுகம் - ஏ.எல்.பீர் முகம்மது

# உள்ளடக்கம்


| | பக்கம் |
|---|---|
| • பணிப்பாளர் நாயகத்தின் செய்தி | iii |
| • பிரதிப் பணிப்பாளர் நாயகத்தின் செய்தி | iv |
| • வளப்பங்களிப்பு | v |
| • ஆசிரியர் வழிகாட்டியைப் பயன்படுத்துவதற்கான ஆலோசனைகள் | vi |
| அறிமுகம் | x |
| தேசிய இலக்குகள் | xi |
| அடிப்படைத் தேர்ச்சிகள் | xiii |
| பாடத்திட்டம் | xvi |
| கற்றல் கற்பித்தல் முறை | xx |
| பாடசாலைக் கொள்கையும் வேலைத்திட்டமும் | xxi |
| கணிப்பீடும் மதிப்பீடும் | xxii |
| • கற்றல் கற்பித்தல் செயற்பாட்டுக்கான வழிகாட்டல்கள் | 1-73 |

## 1.0 அறிமுகம்

மனிதன் உடல், அறிவு, ஆன்மா ஆகிய மூன்றையும் உள்ளடக்கியவன். இவற்றுக்கிடையில் சமநிலை பேணப்படும்போதுதான், முழுமையான ஆளுமை விருத்தியடைய முடியும். இந்த நிலைப்பாட்டிலேயே இஸ்லாம் மனிதனின் ஆன்மீக, தார்மீக வாழ்வுக்கான வழிகாட்டல்களையும் போதனைகளையும் வழங்கியிருக்கின்றது.

இன்றைய உலகம், விஞ்ஞான தொழிநுட்ப சாதனங்களுக்கூடாக பெருவாரியான மாற்றங்களைக் கண்டு வருகின்றது. விஞ்ஞானத்தின் வளர்ச்சி உடல், அறிவு என்பவற்றை போஷிக்கும் அதேவேளை ஆன்மீகத்தை புறக்கணிக்கின்றது. ஆன்மீக வாழ்வு புறக்கணிக்கப்பட்டதன் காரணமாக மனித வாழ்வு அமைதியையும் மகிழ்வையும் இழந்து நிற்கின்றது.

கவலை, மன இறுக்கம், விரக்தி முதலான உளநோய்கள் மனிதனில் வேரூன்றி வருகின்றன. மனித விழுமியங்கள் புறக்கணிக்கப்பட்டதன் விளைவாக வாழ்வதற்கான உரிமைகூட கேள்விக்குட்படுத்தப்பட்டுள்ளது. சிந்தனைக்கன்றி உணர்வுகளுக்கு மாத்திரம் முன்னுரிமை வழங்கியதன் காரணமாக வன்முறை, கட்டற்ற நுகர்வு, சுரண்டல், மோசடி முதலானவை இறைவனை புறக்கணித்த வாழ்வுமுறைக்கு மனிதனைத் தள்ளிவிட்டுள்ளன.

இந்நிலையை அவதானித்து வரும் சிந்தனையாளர்களும் கல்வியியலாளர்களும் ஆன்மீகத்தினதும் விழுமியங்களினதும் அவசியத்தை வலியுறுத்தி வருகின்றனர். ஆன்மீக வறுமைக்குட்பட்டிருக்கும் மனித சமுதாயத்தை விடுவிக்கின்ற பயிற்சியை வழங்கும் பெரும் பணியை சமயப் பாடத்திடமும் அதனை நடைமுறைப்படுத்தும் ஆசிரியர்களிடமும் எதிர்பார்க்கின்றனர்.

இந்தப் பின்னணியில் மனிதனின் தனிப்பட்ட, குடும்ப, சமூக, தேசிய வாழ்வு முறைகளில் சமயமும் அது சார்ந்த விழுமியங்களும் முக்கியத்துவம் பெற வேண்டிய தேவை எமது நாட்டிலும் உணரப்பட்டு வருகின்றது. நலிவுற்றிருக்கும் தார்மீக, ஆன்மீகப் பண்புகள், ஒழுக்க விழுமியங்கள் மீண்டும் வலுப்பெறுவதற்கான செயற்றிட்டங்களை வகுத்து முன்னெடுக்க வேண்டியதன் அவசியத்தை சமய குருமார் மட்டுமன்றி, கல்வியியலாளர்களும் உணர்த்தி வருகிறார்கள்.

வேகமாக மாறிவரும் உலகில் மானிடப் பெறுமானங்கள் தளர்ந்து விடாமல் பாதுகாப்பதற்கு கவர்ச்சிகரமான சமயப் போதனையும், ஆன்மீகப் பயிற்சியும் அவசர நடவடிக்கைகளாக விதந்துரைக்கப்படுகின்றன. எனவே, இஸ்லாம் பாடத்திற்கூடாகவும் மாணவரின் அறிவு, திறன், மனப்பாங்கு, தேர்ச்சி என்பன விருத்தி செய்யப்பட்டு அவை நடைமுறை வாழ்வில் பிணைந்து கொள்ளும் அளவிற்கு இஸ்லாம் பாடக் கற்றல் கற்பித்தல் செயன்முறை இடம்பெற வேண்டுமென எதிர்பார்க்கப்படுகின்றது.

இஸ்லாம் நிலையானதும், காலத்தால் மாறாததுமாகும். இருப்பினும் காலத்துக்கு பொருத்தமான வகையில் ஷரீஆவை கற்பதற்கான உத்திகளையும் அணுகுமுறைகளையும் கையாள்வதனை அது தடுக்கவில்லை. எதிர்கால சந்ததியினர் இஸ்லாத்தினது தூதின் ஒளியில் பயணிப்பதற்கான பயிற்சியையும் அனுபவத்தையும் வழங்கும் வகையில் இஸ்லாம் பாடத்திட்டம் வடிவமைக்கப்பட்டுள்ளது.

இந்த உயர்ந்த இலட்சியத்துடன் வடிவமைக்கப்பட்டுள்ள பாடத்திட்டத்தை நடைமுறைப்படுத்துவதில் எமது ஆசிரியர்களே பிரதான பங்குதாரர்களாவர். எனவே ஆசிரியர்கள் தமது பணியும் பங்களிப்பையும் விருத்திசெய்துகொள்வதற்காகத் தம்மைத் தயார்படுத்திச் செயற்படுவார்கள் என நம்புகிறோம்.

## 10.2.0கல்விக் குறிக்கோள்களும் தேர்ச்சிகளும்

## 2.0 தேசிய இலக்குகள்

தேசிய கல்வி முறைமையானது தனிநபர்க்கும் சமூகத்திற்கும் பொருத்தமான பெரும்பாலான தேசிய இலக்குகளை அடைவதற்குத் தனிநபர்களுக்கும் குழுவினருக்கும் உதவி செய்தல் வேண்டும்.

கடந்த காலங்களில் இலங்கையின் பெரும்பாலான கல்வி அறிக்கைகளும் ஆவணங்களும் தனிநபர் தேவைகளையும் தேசிய தேவைகளையும் நிறைவு செய்வதற்காக இலக்குகளை நிர்ணயித்துள்ளன. சமகாலக் கல்வி அமைப்புகளிலும் செயன்முறைகளிலும் வெளிப்படையாகக் காணப்படும் பலவீனங்கள் காரணமாக நிலைபேறுடைய மனித விருத்தியின் எண்ணக்கருத் திட்ட வரம்பினுள் கல்வியினூடாக அடையக் கூடிய பின்வரும் இலக்குத் தொகுதியினைத் தேசிய கல்வி ஆணைக்குழு இனங்கண்டுள்ளது.

1. மனித கௌரவத்தைக் கண்ணியப்படுத்தல் எனும் எண்ணக்கருக்குள் தேசிய பிணைப்பு, தேசிய முழுமை, தேசிய ஒற்றுமை, இணக்கம், சமாதானம் என்பவற்றை மேம்படுத்தல் மூலமும் இலங்கைப் பன்மைச் சமூகத்தின் கலாசார வேறுபாட்டினை அங்கீகரித்தல் மூலமும் தேசத்தைக் கட்டியெழுப்புதலும் இலங்கையர் எனும் அடையாளத்தை ஏற்படுத்தலும்.
2. மாற்றமுறும் உலகத்தின் சவால்களுக்கு தக்கவாறு முகங்கொடுத்தலோடு தேசிய பாரம்பரியத்தின் அதிசிறந்த அம்சங்களை அங்கீகரித்தலும் பேணுதலும்.
3. மனித உரிமைகளுக்கு மதிப்பளித்தல், கடமைகள், கடப்பாடுகள் பற்றிய விழிப்புணர்வு, ஒருவர் மீது ஒருவர் கொண்டுள்ள ஆழ்ந்த, இடையறாத அக்கறையுணர்வு என்பவற்றை மேம்படுத்தும் சமூக நீதியும், ஜனநாயக வாழ்க்கை முறை நியமங்களும் உள்ளடங்கிய சுற்றாடலை உருவாக்குதலும் ஆதரித்தலும்.
4. ஒருவரது உள, உடல் நலனையும் மனித விழுமியங்களுக்கு மதிப்பளிப்பதை அடிப்படையாகக் கொண்ட நிலைபேறுடைய வாழ்க்கைக் கோலத்தையும் மேம்படுத்தல்.
5. நன்கு ஒன்றிணைக்கப்பட்ட சமநிலை ஆளுமைக்குரிய ஆக்கசிந்தனை, தற்றுணிவு, ஆய்ந்து சிந்தித்தல், பொறுப்பு, வகைகூறல், உடன்பாடான அம்சங்களை விருத்தி செய்தல்.
6. தனிநபரதும், தேசத்தினதும் வாழ்க்கைத் தரத்தை போஷிக்கக்கூடியதும், இலங்கையின் பொருளாதார அபிவிருத்திக்குப் பங்களிக்கக்கூடியதுமான ஆக்கப் பணிகளுக்கான கல்வியூட்டுவதன் மூலம் மனிதவள அபிவிருத்தியை ஏற்படுத்தல்.
7. தனிநபர்களின் மாற்றத்திற்கு ஏற்ப இணங்கி வாழவும், மாற்றத்தை முகாமை செய்யவும், தயார்படுத்தவும் விரைவாக மாறிவரும் உலகில் சிக்கலானதும் எதிர்பாராததுமான நிலைமைகளைச் சமாளிக்கும் தகைமையை விருத்தி செய்தல்.
8. நீதி, சமத்துவம், பரஸ்பர மரியாதை என்பவற்றை அடிப்படையாகக் கொண்டு சர்வதேச சமூகத்தில் கௌரவமானதோர் இடத்தைப் பெறுவதற்குப் பங்களிக்கக்கூடிய மனப்பாங்குகளையும் திறன்களையும் வளர்த்தல்.

*தேசிய கல்விச் சேவை ஆணைக்குழுவின் அறிக்கை (2003)*

## 10. 3.0 அடிப்படைத் தேர்ச்சிகள்

கல்வியினூடாக விருத்தி செய்யப்படும் பின்வரும் அடிப்படைத் தேர்ச்சிகள் மேற்குறித்த தேசிய இலக்குகளை அடைவதற்கு வழிவகுக்கும்.

**(i) தொடர்பாடல் தேர்ச்சிகள்:**

தொடர்பாடல் பற்றிய தேர்ச்சிகள் நான்கு துணைத் தொகுதிகளை அடிப்படையாகக் கொண்டவை. எழுத்தறிவு, எண்ணறிவு, சித்திர அறிவு, தகவல் தொழில் நுட்பத் தகைமை.

எழுத்தறிவு :கவனமாகச் செவிமடுத்தல், தெளிவாகப் பேசுதல், கருத்தறிய வாசித்தல், சரியாகவும் செம்மையாகவும் எழுதுதல், பயன்தருவகையான கருத்துப் பரிமாற்றம்.

எண்ணறிவு :பொருள், இடம், காலம் என்பவற்றுக்கு எண்களைப் பயன்படுத்துதல். எண்ணுதல், கணித்தல், ஒழுங்குமுறையாக அளத்தல்.

சித்திர அறிவு :கோடு, உருவம் என்பவற்றின் கருத்தை அறிதல், விபரங்கள், அறிவுறுத்தல்கள், எண்ணங்கள் ஆகியவற்றை கோடு, உருவம், வர்ணம் என்பவற்றால் வெளிப்படுத்தலும் பதிவு செய்தலும்.

தகவல் தொழில் நுட்பத் தகைமை:கணனி அறிவு கற்றலில், தொழில் சுற்றாடலில், சொந்த வாழ்வில் தகவல் தொடர்பாடல் nj ho ;y; EI gqf; i s g; (ICT) பயன்படுத்துதல்.

**(ii) ஆளுமை விருத்தி தொடர்பான தேர்ச்சிகள்:**

- ஆக்கம், விரிந்த சிந்தனை, தற்றுணிபு, தீர்மானம் எடுத்தல், பிரச்சினை விடுவித்தல், நுணுக்கமான மற்றும் பகுப்பாய்வு சிந்தனை, அணியினராகப் பணிசெய்தல், தனியாள் இடைவினைத் தொடர்புகள், கண்டுபிடித்தலும் கண்டறிதலும் முதலான திறமைகள்.
- நேர்மை, சகிப்புத் தன்மை, மனித கௌரவத்தைக் கண்ணியப்படுத்தல் ஆகிய விழுமியங்கள்.
- மன எழுச்சிகள், நுண்ணறிவு.

**(iii) சூழல் தொடர்பான தேர்ச்சிகள்:**

இத்தேர்ச்சிகள் சூழலோடு தொடர்புறுகின்றன. சமூகம், உயிரியல், பௌதீகம்.

**சமூகச் சூழல்** : தேசிய பாரம்பரியம் பற்றிய விழிப்புணர்வு, பன்மைச் சமூகத்தின் அங்கத்தவர்கள் என்ற வகையில் தொடர்புறும் நுண்ணுணர்வுத் திறன்களும், பகிர்ந்தளிக்கப்படும் நீதி, சமூகத் தொடர்புகள், தனிநபர் நடத்தைகள், பொதுவானதும்சட்டபூர்வமானதுமான சம்பிரதாயங்கள், உரிமைகள், பொறுப்புக்கள், கடமைகள், கடப்பாடுகள் என்பவற்றில் அக்கறை.

**உயிரியல் சூழல்** : வாழும் உலகு, மக்கள், உயிரியல், சூழல் தொகுதி - மரங்கள், காடுகள், கடல், நீர், வளி, உயிரினத் தாவரம், விலங்கு, மனித வாழ்வு.

**பௌதீகச் சூழல்** : இடம், சக்தி, எரிபொருள், சடப்பொருள், பொருட்கள் பற்றியும் அவை மனித வாழ்க்கை, உணவு, உடை, உறையுள், சுகாதாரம், சௌகரியம், சுவாசம், நித்திரை, இளைப்பாறுதல், ஓய்வு, கழிவுகள், உயிரின கழிவுப் பொருட்கள் ஆகியவற்றுடன் கொண்டுள்ள தொடர்பு பற்றிய விழிப்புணர்வு, நுண்ணுணர்வுத் திறன்களும் கற்றலுக்கும் வேலை செய்வதற்கும், வாழ்வதற்கும் கருவிகளையும் தொழில் நுட்பங்களையும் பயன்படுத்தும் திறன்களும் இங்கு உள்ளடக்கப்பட்டுள்ளன.

**(iv) வேலை உலகிற்குத் தயார் செய்தல் தொடர்பான தேர்ச்சிகள்:**

அவர்களது சக்தியை உச்ச நிலைக்குக் கொண்டு வருவதற்கும் அவர்களது ஆற்றலைப் போஷிப்பதற்கும் வேண்டிய தொழில்சார் திறன்கள்.
பொருளாதார விருத்திக்குப் பங்களித்தல்.
அவர்களது தொழில் விருப்புகளையும் உளச்சார்புகளையும் கண்டறிதல்.
அவர்களது ஆற்றல்களுக்குப் பொருத்தமான வேலையைத் தெரிவு செய்தல்.
பயனளிக்கக்கூடியதும் நிலைபேறுடையதுமான ஜீவனோபாயத்தில் ஈடுபடல்.

**(v) சமயமும் ஒழுகலாறும் தொடர்பான தேர்ச்சிகள்:**

அன்றாட வாழ்க்கையில் மிகப் பொருத்தமானவற்றைத் தெரிவு செய்யவும், நாளாந்த வாழ்க்கையில் ஒழுக்கநெறி, அறநெறி, சமயநெறி தொடர்பான நடத்தைகளைப் பொருத்தமுற மேற்கொள்ளவும், விழுமியங்களைத் தன்மயமாக்கிக் கொள்ளலும், உள்வாங்கலும்.

**(vi) ஓய்வு நேரத்தைப் பயன்படுத்துதல், விளையாட்டுப் பற்றிய தேர்ச்சிகள்:**

அழகியற் கலைகள், இலக்கியம், விளையாட்டு, மெய்வல்லுனர் போட்டிகள், ஓய்வு நேர பொழுதுபோக்குகள் மற்றும் வாழ்வின் ஆக்கபூர்வச் செயற்பாடுகள் மூலம் வெளிப்படுத்தப்படும் இன்ப நுகர்ச்சி, மகிழ்ச்சி, மன எழுச்சிகள் இவைபோன்ற மனித அனுபவங்கள்.

**(vii) கற்றலுக்குக் கற்றல் தொடர்பான தேர்ச்சிகள்:**

விரைவாக மாறுகின்ற, சிக்கலான, ஒருவரில் ஒருவர் தங்கி நிற்கின்ற உலகொன்றில் ஒருவர் சுயாதீனமாகக் கற்பதற்கான வலிமையளித்தலும் மாற்றியமைக்கும் செயன்முறை ஊடாக மாற்றத்துக்கு ஏற்ப இயங்கவும், அதனை முகாமை செய்யவும், வேண்டிய உணர்வையும் வெற்றியையும் பெறச் செய்தல்.

## 3.0 10 ஆந் தர இஸ்லாம் பாடத்திட்டத்தின் நோக்கங்கள்

1. **அர்கானுல் ஈமான்**

   ஈமான் பற்றிய அம்சங்களை அறிந்து அதனடிப்படையில் வாழ்வை அமைத்துக் கொள்வார்.

2. **அர்கானுல் இஸ்லாம்**

   இஸ்லாத்தின் அடிப்படைக் கடமைகள், சிறப்புக்கள், அவற்றை நிறைவேற்றும் முறைகள் பற்றி விளங்கி நடைமுறைப்படுத்துவார்.

3. **அல்அஹ்லாக் வத்தஸ்கிய்யா**

   இஸ்லாம் கூறும் ஒழுக்கப் பண்புகளை அறிந்து அவற்றின் முக்கியத்துவத்தை விளங்கி தனிநபர் வாழ்விலும் சமூக வாழ்விலும் கடைப்பிடித்து முன்மாதிரியாக வாழ்வதோடு ஏனையோருக்கும் வழி காட்டுவார்.

4. **அல்குர்ஆன் வஸ்ஸுன்னா**

   இஸ்லாத்தின் மூலாதாரங்களை அறிந்து, அவற்றின் போதனைகளை வாழ்வில் நடைமுறைப்படுத்துவார்

5. **அஸ்ஸீறா வத்தாரீஹ்**

   நபி (ஸல்) அவர்களதும் குலபாஉர் ராஷிதீன்களதும் வாழ்க்கை முறையை விளங்குவதோடு இலங்கை முஸ்லிம்களின் வரலாற்றையும் அவர்களின் தேசிய பங்களிப்புகளையும் விரிவாக விளங்கி மற்றவர்களுக்கும் எடுத்துக் கூறுவார்.

6. **அல்முஆமலாத்**

   பொருளீட்டல் தொடர்பாக இஸ்லாமிய போதனைகளையும் குடும்ப வாழ்வு தொடர்பாக இஸ்லாமிய கருத்தையும் விளங்கி அவற்றை வாழ்வில் முறையாகக் கடைப்பிடித்து வருவார்.

7. **அல்மபாஹீமுல் இஸ்லாமிய்யா**

   ஒவ்வோர் அம்சம் தொடர்பாகவும் இஸ்லாத்திற்கென தனியானதொரு பார்வை உண்டென்பதைப் புரிந்து அதனடிப்படையில் அனைத்தையும் நோக்கித் திறனாய்வார்.

# பாடத்திட்ட உள்ளடக்கம்

| தேர்ச்சி | தேர்ச்சி மட்டம் | விடய உள்ளடக்கம் | கற்றல் பேறுகள் | பாட வேளைகள் |
|---|---|---|---|---|
| **1.0 அர்கானுல் ஈமான்**<br><br>**அகீதா பற்றிய தெளிவான விளக்கத்தைப் பெற்று வாழ்க்கையை நெறிப்படுத்திக் கொள்வார்.** | 1.1<br>அகீதாவுக்கு வரைவிலக்கணம் கூறுவார் | • அகீதா<br>• அறிமுகம்<br>• வரைவிலக்கணம் | • அகீதா என்றால் என்ன என்பதை வரைவிலக்கணப்படுத்திக் கூறுவார்.<br>• இஸ்லாமிய அகீதாவின் உள்ளடக்கத்தை விவரிப்பார்.<br>• அஹ்லுஸ் ஸுன்னா வல்ஜமாஆவின் அகீதாவே சரியானது என்பதற்கான காரணங்களைக் விளக்குவார்.<br>• அஹ்லுஸ் ஸுன்னா வல்ஜமாஆவின் அகீதாவைப் போதிப்பார். | 02 |
| | 1.2<br><br>ஈமானுக்கும் அமலுக்குமிடையிலான தொடர்பை இனங்கண்டு கூறுவார் | • ஈமானும் அமலும்<br>• ஈமானும் அமலும் விளக்கம்<br>• ஈமானுக்கும் அமலுக்கும் இடையிலான தொடர்பு<br>• அல் குர்ஆன் ஸுன்னா சான்றுகள் | • ஈமானின் விரிந்த கருத்தை அறிந்து கூறுவார்.<br>• பிழையான நம்பிக்கைகளால் வரும் தீமைகளை இனங்கண்டு கூறுவார்.<br>• நற்செயல்களுக்கும் நன்னடத்தைகளுக்கும் உறுதியான ஈமானே காரணம் என்பதை சரிகாண்பார்.<br>• உறுதியான ஈமானின் மூலம் சமூக வாழ்வில் முன்மாதிரியாகத் திகழ்வார். | 02 |
| | 1.3<br><br>ரிஸாலத், ஹிதாயத் ஆகிய பதங்களின் விளக்கங்களைப் பெற்று ரிஸாலத், ஹிதாயத்துக்கான ஊடகம் என்பதை விளக்கிக் கூறுவார். | • ரிஸாலத்தும் ஹிதாயத்தும்<br>• பத விளக்கம்<br>• வரைவிலக்கணம்<br>• ரிஸாலத் | • ரிஸாலத், ஹிதாயத் ஆகிய சொற்களுக்கான விளக்கத்தைக் கூறுவார்.<br>• ஹிதாயத்தை அடைந்து கொள்ள ரிஸாலத் மாத்திரமே வழியாகும் என்பதற்கான நியாயங்களை முன்வைப்பார்.<br>• நபி (ஸல்) அவர்கள் போதித்த ரிஸாலத்தை பாதுகாப்பதில் தமக்கும் பொறுப்புண்டு என்பதை ஏற்று செயற்படுவார். | 02 |

| தேர்ச்சி | தேர்ச்சி மட்டம் | விடய உள்ளடக்கம் | கற்றல் பேறுகள் | பாட வேளைகள் |
|---|---|---|---|---|
| **2.0 அர்கானுல் இஸ்லாம். இபாதத் பற்றிய எண்ணக்கருவை விளங்கி வாழ்வை இபாதத்தாக மாற்றிக் கொள்வதற்காக இபாதத்துக்களைச் சீராகவும் தொடராகவும் கரிசனையோடும் நிறைவேற்றி வருவார்** | 2.1<br>நஜீஸ் நீக்கும் முறையை அறிந்து விழிப்புடன் அதனைக் கடைப்பிடிப்பார். | • தஹாரா<br>• நீரின் வகைகள்<br>• நஜீஸின் வகைகள்<br>• நஜீஸ் அகற்றும் முறை<br>• வுழு, தயம்மும்<br>• குளிப்பு | • இஸ்லாம் சுத்தத்திற்கு வழங்கியுள்ள முக்கியத்துவத்தை எடுத்துக் கூறுவார்.<br>• நீரின் வகையினையும் நஜீஸ் நீக்கும் முறையினையும் விளங்கி பின்பற்றுவார்.<br>• வுழு, தயம்மம், குளிப்பு தொடர்பான இஸ்லாமிய விதிமுறைகளை அறிந்து பிறருக்கும் எடுத்துக் கூறுவார். | 02 |
| | 2.2<br>இபாதத் என்பதை விளக்கி முழு வாழ்வையுமே இபாதத்தாக நோக்கும் மனப்பாங்கை ஏற்படுத்திக் கொள்வார். | • இபாதத் - வரைவிலக்கணம்<br>• வாழ்வே இபாதத்<br>• நிபந்தனைகள் | • இபாதத் என்பதன் கருத்தையும் அதன் பிரயோகத்தையும் முன்வைப்பார்<br>• உலகியல் செயற்பாடொன்றை இபாதத்தாக மாற்றிக் கொள்வதற்கான நிபந்தனைகளை பட்டியல்படுத்துவார்.<br>• இபாதத்கள் எவ்வாறு வகைப்படுத்தப்படுகின்றன என்பதை விளக்குவார்.<br>• இபாதத்கள் எவ்வாறு மனித வாழ்வை நெறிப்படுத்துகின்றன என்பதை ஆராய்வார். | 02 |
| | 2.3<br>தொழுகையின் முக்கியத்துவத்தையும் பயனையும் அறிந்து தொழுகையைப் பேணி வருவார். | • தொழுகை - முக்கியத்துவம்<br>• ஸிபதுஸ் ஸலாத்<br>• தொழுகையின் நிலைகள்<br>• தொழுகையில் ஓத வேண்டியவை | • தொழுகை இஸ்லாத்தில் அடிப்படைக் கடமைகளில் முதன்மையானது என்பதற்கான ஆதாரங்களை எடுத்துக் கூறுவார்.<br>• தொழுகையின் முக்கியத்துவத்தை ஆதாரங்களுடன் விளக்குவார்.<br>• தொழுகையின் ஒவ்வொரு நிலையையும் அறிந்து அவற்றில் ஓத வேண்டிய ஓதல்களை ஓதி வருவார். | 03 |

| தேர்ச்சி | தேர்ச்சி மட்டம் | விடய உள்ளடக்கம் | கற்றல் பேறுகள் | பாட வேளைகள் |
|---|---|---|---|---|
| | 2.4<br>தொழுகையைத் தொடர்ந்து ஓதும் ஓதல்களை அறிந்து அவற்றை ஓதி வருவார். | • தொழுகையைத் தொடர்ந்து ஓத வேண்டியவை | • தொழுகையின் பின் ஓத வேண்டிய அவ்ராதுகளை அறிந்து மனனமிட்டு வருவார்.<br>• இவ்வாறு அவ்ராதுகளை ஓதுவதனால் பல நன்மைகள் கிடைக்கின்றன என்பதை ஏற்றுக் கொள்வார்.<br>• நபியவர்கள் தொழுது முடிந்து ஓதிய ஓதல்களை மற்றவர்களுக்கும் சொல்லிக் காட்டுவார்.<br>• குறித்த அவ்ராதுகளின் பொருளை அறிந்து கூறுவார். | 02 |
| 3.<br>**அத்தஸ்கிய்யா வல் அக்லாக்.**<br>**தஸ்கியா பற்றி விளங்கி ஆன்மீக ஒழுக்கப் பண்புகளைக் கடைப்பிடித்து ஒழுகுவார்.** | 3.1<br>தஸ்கிய்யா பற்றிய இஸ்லாமிய கண்ணோட்டத்தை அறிந்து அவற்றைக் கடைபிடித்து வருவார். | • அத்தஸ்கிய்யா<br>• அறிமுகம்<br>• தஸ்கிய்யாவின் முக்கியத்துவம் | • அத்தஸ்கியா என்றால் என்ன என்பதனை விளக்கிக் கூறுவார்.<br>• அத்தஸ்கியாவின் முக்கியத்துவத்தை விபரிப்பார்.<br>• அத்தஸ்கியாவின் நோக்கத்தை விளக்கிக் கூறுவார்.<br>• அத்தஸ்கியாவை ஏற்படுத்துவதற்கான செயற்பாடுகளைக் கடைப்பிடிப்பார். | 02 |
| | 3.2<br>நற்பண்புகள் பற்றிய இஸ்லாமிய கண்ணோட்டத்தை அறிந்து அவற்றை கடைப்பிடித்து வருவார். | • நற்பண்புகள் பற்றிய இஸ்லாமியக் கண்ணோட்டம்<br>- அன்பு - ஈகை<br>- தியாகம் - நாணயம்<br>- புலன்களைப் பேணல் | • நற்பண்புகளுக்கு இஸ்லாம் வழங்கியுள்ள முக்கியத்துவத்தை எடுத்துக் கூறுவார்.<br>• நற்பண்புகளுக்கான முன்மாதிரியை நபி (ஸல்) அவர்களின் வாழ்விலிருந்து அறிந்து கூறுவார்.<br>• அன்பு, ஈகை, தியாகம், நாணயம் முதலானவற்றிற்கு இஸ்லாம் வழங்கியுள்ள முக்கியத்துவத்தை அறிந்து கூறுவார்.<br>• புலன்களைப் பேணி வாழ்வை நெறிப்படுத்திக்கொள்வார். | 02 |

| தேர்ச்சி | தேர்ச்சி மட்டம் | விடய உள்ளடக்கம் | கற்றல் பேறுகள் | பாட வேளைகள் |
|---|---|---|---|---|
| | 3.3 ஆன்மீக மேம்பாட்டுக்கான வழிமுறைகளை குர்ஆன் சுன்னா ஆதாரங்களினூடாக விளங்கி வாழ்வில் கடைப்பிடித்தொழுகுவார். | • ஆன்மீக மேம்பாட்டுக்கான வழிகள்<br>- இக்லாஸ் - தவ்பா<br>- வரஉ - ஸுஹ்த் | • ஆன்மீக மேம்பாட்டின் முக்கியத்துவத்தை அறிந்து கூறுவார்.<br>• அல்குர்ஆன், ஹதீஸில் கூறப்பட்டுள்ள ஆன்மீக மேம்பாட்டிற்கான வழிமுறைகளை அறிந்து கடைப்பிடிப்பார்.<br>• ஆன்மீக மேம்பாட்டிற்கு இக்லாஸ், தவ்பா, வரஉ, ஸுஹ்த் என்பன எவ்வாறு உதவுகின்றன என்பதை விளக்கிக் கூறுவார்.<br>• ஆன்மீகத்தை மேம்பாடடையச் செய்யும் அம்சங்களைப் பின்பற்றியொழுகுவார். | 02 |
| | 4.1 வஹியின் முக்கியத்துவத்தை விளங்கி அதனை எடுத்துக் கூறுவார். | • வஹீ - அறிமுகம்<br>• வஹி - முக்கியத்துவம் | • வஹியின் வரைவிலக்கணத்தை அறிந்து கூறுவார்.<br>• மனித அறிவுக்கும் வஹிக்குமிடையிலான வேறுபாடுகளை அறிந்து கூறுவார்.<br>• வஹியின் முக்கியத்துவத்தை அறிந்து அதன் போதனைகளை பின்பற்றி ஒழுகுவார்.<br>• ஈருலக வாழ்வின் வெற்றிக்கும் வஹியே அடிப்படையாக அமையும் என்பதை நிறுவிக் காட்டுவார். | 02 |
| | 4.2 அல்குர்ஆன் அருளப்பட்டு தொகுக்கப்பட்ட வரலாற்றை விளக்கிக் கூறுவார். | • அல்குர்ஆன் அருளப்படல்<br>• அல்குர்ஆன்தாகுக்கப்படல் | • வஹி அருளப்பட்ட முறைகளையும் அதன் வகைகளையும் தொகுத்துக் கூறுவார்.<br>• அல்குர்ஆன் பகுதி பகுதியாக அருளப்பட்டதற்கான காரணங்களை அறிந்து விளக்குவார்.<br>• அல்குர்ஆன் பாதுகாக்கப்பட்ட வரலாற்றை அறிந்து அதனைப் பாதுகாக்கும் முயற்சியில் ஈடுபடுவார்.<br>• நபி (ஸல்) அவர்கள் காலத்தில் குர்ஆன் பாதுகாக்கப்பட்ட முறையை அறிந்து கூறுவார்.<br>• அபூபக்ர் (ரழி), உஸ்மான் (ரழி) காலப்பகுதியில் அல்குர்ஆனின் தொகுப்பு முறைகளின் வித்தியாசங்களை அறிந்து கூறுவார். | 03 |

| தேர்ச்சி | தேர்ச்சி மட்டம் | விடய உள்ளடக்கம் | கற்றல் பேறுகள் | பாட வேளைகள் |
|---|---|---|---|---|
| | 4.3<br><br>சுன்னாவின் முக்கியத்துவத்தை விளங்கி ஆதாரங்களுடன் முன்வைப்பார். | • சுன்னாவின் முக்கியத்துவம் | • ஸுன்னாவை அறிந்து அதன் அவசியத்தை ஆதாரங்களோடு முன்வைப்பார்.<br>• இஸ்லாத்தை அமுல்படுத்த ஸுன்னா அவசியம் என்பதை ஏற்றுக் கொள்வார்.<br>• ஸுன்னாவின் முக்கியத்துவத்தை உணர்ந்து வாழ்வில் கடைப்பிடிப்பார்.<br>• அல்குர்ஆனுக்கும், அஸ்ஸுன்னாவுக்கும் இடையிலான தொடர்புகளை எடுத்துக் காட்டுவார். | 02 |
| | 4.4<br><br>துணை மூலாதாரங்களான இஜ்மா, கியாஸின் பயன்பாட்டை விளக்கிக் கூறுவார். | • துணை மூலாதாரங்கள்<br>- இஜ்மா<br>- கியாஸ்<br>• ஏனைய துணை மூலாதாரங்கள் | • நவீன பிரச்சினைகளைத் தீர்ப்பதற்கு இஜ்மாவும் கியாஸும் உதவுகின்றன என்பதை அறிந்து கூறுவார்.<br>• இஜ்திஹாதின் வளர்ச்சிக்கு இஜ்மா, கியாஸ் அவசியம் என்பதை ஏற்றுக்கொள்வார்.<br>• இஜ்மா, கியாஸ் அடிப்படையில் பெறப்பட்ட தீர்வுகளை அறிந்து ஏனையோருக்கு எடுத்துக் கூறுவார்.<br>• இஜ்மா, கியாஸின் முக்கித்துவத்தை உணர்ந்து வாழ்வில் கடைப்பிடிப்பார்.<br>• இஜ்மாவுக்கும் கியாஸுக்குமிடையிலான வேறுபாடுகளை எடுத்துக் காட்டுவார். | 02 |
| 5.0<br><br>**அஸ்ஸீரா வத்தாரீஹ் நபி (ஸல்) அவர்களதும் குலபாஉர் ராஷிதீன்களதும்** | 5.1<br><br>இஸ்லாத்திற்கு முற்பட்ட கால சமூகத்தின் வரலாற்றை விளக்கிக் கூறுவார். | • இஸ்லாத்திற்கு முற்பட்ட காலம் | • இஸ்லாத்துக்கு முந்திய அறபு நாட்டின் சமூக நிலையை எடுத்துக் கூறுவார்.<br>• இஸ்லாத்துக்கு முந்திய அறபு நாட்டின் சமய நிலையை பிந்திய நிலையோடு ஒப்பிட்டுக் கூறுவார்.<br>• இஸ்லாத்துக்கு முந்திய அறபு நாட்டின் குடும்ப அமைப்பை இஸ்லாத்துடன் ஒப்பிட்டுக் கூறுவார். | 02 |

| தேர்ச்சி | தேர்ச்சி மட்டம் | விடய உள்ளடக்கம் | கற்றல் பேறுகள் | பாட வேளைகள் |
|---|---|---|---|---|
| **வாழ்க்கை முறையை விளங்குவதோடு இலங்கை முஸ்லிம்களின் வரலாற்றையும் அவர்களின் தேசிய பங்களிப்புக்களையும் விரிவாக விளங்கி மற்றவர்களுக்கு எடுத்துக் கூறுவார்.** | 5.2<br>இஸ்லாத்தின் வருகையால் ஏற்பட்ட சமூக மாற்றத்தை எடுத்துக் காட்டுவார். | • சமூக மாற்றம் | • சமூக மாற்றம் இன்றியமையாதது என்பதை உணர்ந்து கூறுவார்.<br>• சமூக மாற்றம் இடம்பெறும் வழிமுறைகளை எடுத்துக்காட்டுவார்.<br>• இஸ்லாம் எவ்வாறு சமூக மாற்றத்தை ஏற்படுத்தியது என்பதை பட்டியல்படுத்துவார். | 02 |
| | 5.3<br>மக்கா மதீனா காலகட்ட த∴வா வரலாற்றையும் எதிர்நோக்கிய சவால்களையும் விளக்கிக் கூறுவார். | • நபி (ஸல்) அவர்களின் த∴வாவும் சவால்களும் | • நபியவர்களின் த∴வா முறையினை விளக்கிக் கூறுவார்.<br>• நபியவர்களும் ஆரம்ப கட்ட முஸ்லிம்களும் த∴வாவில் எதிர்நோக்கிய சவால்களை இனம்கண்டு விளக்குவார்.<br>• மக்கா த∴வாவிலிருந்து மதீனா த∴வா வேறுபடும் முறையினை தர்க்க ரீதியாக முன்வைப்பார்.<br>• நபியவர்களின் போர்க்கால அனுபவங்களை படிப்பினையாகக் கொள்வார்.<br>• நபியவர்கள் செய்த உடன்படிக்கைகளின் மாதிரிகளை முன்மாதிரியாகக் கொண்டு நடப்பார். | 02 |
| | 5.4<br>ஸீறாவின் முக்கியத்துவத்தை விளங்கி எடுத்துக் கூறுவார். | • ஸீறாவின் முக்கியத்துவம் | • ஸீறாவின் முக்கியத்துவத்தை எடுத்துக் கூறுவார்.<br>• ஸீறா ஒரு தனிக்கலை என்பதை நிரூபித்துக் காட்டுவார்.<br>• ஸீறாவின் முன்மாதிரிகளை படிக்க வேண்டியதன் முக்கியத்துவத்தை விபரிப்பார்.<br>• ஸீறாவை பல்வேறு கண்ணோட்டங்களில் எடுத்துக் கூறுவார். | 02 |

| தேர்ச்சி | தேர்ச்சி மட்டம் | விடய உள்ளடக்கம் | கற்றல் பேறுகள் | பாட வேளைகள் |
|---|---|---|---|---|
| 6.0<br>**அல்முஆமலாத்**<br>பொருளீட்டல் தொடர்பாக இஸ்லாமிய போதனைகளையும் குடும்ப வாழ்வு தொடர்பாக இஸ்லாமிய கருத்தையும் விளங்கி அவற்றை வாழ்வில் முறையாகக் கடைப்பிடித்து வருவார். | 6.1.1<br>உழைப்பின் முக்கியத்துவத்தை அறிந்து இஸ்லாத்தின் வழிமுறையில் அவற்றை நடைமுறைப்படுத்துவார். | • பொருளாதாரம் தொடர்பான இஸ்லாமிய கண்ணோட்டம | • இஸ்லாம் பொருளியல் துறைக்கு வழிகாட்டும் பாங்கை விளக்கிக் கூறுவார்.<br>• இஸ்லாமிய பொருளாதரம் பற்றி பேசும் அல்குர்ஆன் வசனங்கள், ஹதீஸ்களை அறிந்து கூறுவார்.<br>• இஸ்லாமிய பொருளாதாரத்தின் சிறப்பியல்புகளை இனங்கண்டு முன்வைப்பார்.<br>• இஸ்லாமிய பொருளீட்டலின் வரையறைகளை அறிந்து ஒப்புவிப்பார். | 02 |
| | 6.1.2<br>உழைப்பின் முக்கியத்துவத்தை அறிந்து இஸ்லாத்தின் வழிமுறையில் அவற்றை நடைமுறைப்படுத்துவார். | • உழைப்பு<br>- சிறப்பு<br>- முக்கியத்துவம் | • உழைப்பின் முக்கியத்துவத்தை அறிந்து விளக்கிக் கூறுவார்.<br>• உழைப்பின் சிறப்பை குர்ஆன், ஹதீஸ் ஆதாரங்களுடன் விபரிப்பார்.<br>• உழைத்து வாழ வேண்டுமென்ற உணர்வைப் பெற்றுச் செயற்படுவார்.<br>• எச்சந்தர்ப்பத்திலும் யாசகம் கேட்டு வாழக் கூடாது என்ற உணர்வோடு வாழ்ந்து காட்டுவார் | 02 |
| | 6.1.3<br>உழைப்பின் முக்கியத்துவத்தை அறிந்து இஸ்லாத்தின் வழிமுறையில் அவற்றை நடைமுறைப்படுத்துவார். | • வியாபாரம் | • இஸ்லாமிய வியாபாரம் பற்றி அறிந்து விளக்கிக் கூறுவார்.<br>• நேர்மையான வியாபாரிகளுக்கு மறுமையில் கிடைக்கும் பாக்கியங்கள் பற்றி அறிந்து மற்றவர்களுக்கு எடுத்துக் காட்டுவார்.<br>• கொடுக்கல்- வாங்கலில் நேர்மையைக் கடைப்பிடித்து ஒழுகி வருவார்.<br>• வியாபாரத்தில் ஹலால்- ஹராம் பேண வேண்டும் என்பதை அறிந்து உணர்ந்து நாளாந்த வாழ்வில் செயற்படுத்துவார். | 02 |
| | 6.1.4<br>உழைப்பின் முக்கியத்துவத்தை அறிந்து இஸ்லாத்தின் வழிமுறையில் அவற்றை நடைமுறைப்படுத்துவார். | • விவசாயம்<br>• கைத்தொழில் | • விவசாயம் மற்றும் கைத்தொழிலுக்கு இஸ்லாம் கொடுத்துள்ள முக்கியத்துவம் பற்றி அறிந்து விளக்கிக் கூறுவார்.<br>• நபிமார்கள் விவசாயம், கைத்தொழில் நடவடிக்கைகளில் ஈடுபட்டுள்ளனர் என்பதை அறிந்து அவற்றை பட்டியற்படுத்துவார்<br>• தொழில்களையும் தொழிலாளர்களையும் மதித்து நடப்பார். | 02 |

| தேர்ச்சி | தேர்ச்சி மட்டம் | விடய உள்ளடக்கம் | கற்றல் பேறுகள் | பாட வேளைகள் |
|---|---|---|---|---|
| | 6.1.5<br>உழைப்பின் முக்கியத்துவத்தை அறிந்து இஸ்லாத்தின் வழிமுறையில் அவற்றை நடைமுறைப்படுத்துவார் | • சேவைத்துறை | • பல்வேறு சேவைத் தொழில்கள் பற்றி அறிந்து அவற்றை பட்டியற்படுத்துவார்.<br>• சேவைத் தொழிலில் அமானிதம் பேண வேண்டுமென்பதை ஏற்றுப் பின்பற்றுவார்.<br>• சேவைத் தொழிலில் ஈடுபடுவோர் தாம் வகித்த பொறுப்புக்கள், பதவிகள் குறித்து மறுமையில் அல்லாஹ்விடம் பதில் சொல்ல வேண்டும் என்பதை உணர்ந்து செயற்பட வேண்டும் என்ற உணர்வைப் பெற்று நடப்பார்.<br>• சேவைத் தொழிலில் ஈடுபடுவோரை மதித்து நடப்பார். | 02 |
| | 6.2<br>அஜ்னபி- மஹ்ரமி வரையறைகளைப் பேணி நடப்பார் | • அஜ்னபி- மஹ்ரமி வரையறை | • அஜ்னபி- மஹ்ரமி வரையறை பற்றி அறிந்து விளக்கிக் கூறுவார்.<br>• திருமணம் முடிக்க தடை செய்யப்பட்டவர்கள் பற்றிய விபரத்தை விரிவாக முன்வைப்பார்.<br>• தனி மனித, குடும்ப, சமூக வாழ்வில் அஜ்னபி- மஹ்ரமி வரையறைகள் பேணப்பட வேண்டுமென்பதை உணர்ந்து செயற்படுவார்.<br>• அஜ்னபி- மஹ்ரமி வரையறை பேணப்படாமையின் பாரதூரத்தை உணர்ந்து செயற்படுவார்.<br>• அஜ்னபி- மஹ்ரமி வரையறைகளைப் பேணி ஒழுகுவார். | 02 |
| **7.0**<br>**ஒவ்வோர் அம்சம் தொடர்பாகவும் இஸ்லாத்திற்கென தனியானதொரு பார்வை உண்டென்பதைப் புரிந்து அதனடிப்படையில் அனைத்தையும் நோக்கித் திறனாய்வர்.** | 7.1<br>இளமையின் முக்கியத்துவத்தை விளங்கி இளமையில் நிறைவேற்ற வேண்டிய பணியை திறம்படச் செய்து வருவார் | • இளைஞர்களும் அவர்களிடம் எதிர்பார்க்கப்படும் பணியும் | • இளமைப் பருவத்தின் முக்கியத்துவத்தை உணர்ந்து அதன்படி செயற்பட்டு வருவார்.<br>• இளைஞர்களின் பண்புகள், திறமைகள், ஆற்றல்கள் என்பவற்றை அறிந்து கூறுவார்.<br>• இளமைப் பருவத்தில் ஆற்ற வேண்டிய பணிகளை அறிந்து அதன்படி ஒழுகுவார்.<br>• மறுமையில் இளமைப் பருவம் தொடர்பாக அல்லாஹ் விசாரிப்பான் என்பதை உணர்ந்து நடப்பார். | 02 |

| தேர்ச்சி | தேர்ச்சி மட்டம் | விடய உள்ளடக்கம் | கற்றல் பேறுகள் | பாட வேளைகள் |
|---|---|---|---|---|
| | 7.2<br>உடல் உள ஆரோக்கியம் பற்றிய இஸ்லாத்தின் கண்ணோட்டத்தை விளங்கி தன்னைப் பயிற்றுவித்துக் கொள்வார். | • உடல், உள ஆரோக்கியம் | • உடல், உள ஆரோக்கியம் பெறுவது எவ்வாறு என்பதை அறிந்து கூறுவார்.<br>• உடல், உள ஆரோக்கியத்தைக் கெடுக்கும் விடயங்களை இனங்கண்டு அதிலிருந்து தவிர்ந்து நடப்பார்.<br>• உடலைப் போலவே உள்ளத்தையும் ஆரோக்கியமாக வைத்திருக்க வேண்டும் என்பதை அறிந்து கூறுவார்.<br>• உடல், உள ஆரோக்கியம் மறுமை வெற்றிக்கு வழியமைக்கும் என்பதை உணர்ந்து ஒழுகுவார். | 02 |
| | 7.3<br>இஸ்லாத்தில் நடுநிலை பேணுவதன் அவசியத்தை விளங்கி வாழ்வில் கடைப்பிடிப்பார். | • நடுநிலைப் பேணல் | • நடுநிலை பேணுவதன் முக்கியத்துவத்தினை உணர்ந்து அதன்படி செயற்பட்டு வருவார்.<br>• நடுநிலை பேணுவதன் மூலம் கிடைக்கும் நன்மைகளை அறிந்து கூறுவார்.<br>• நடு நிலை தவறும் போது ஏற்படும் பாதிப்புக்கள் தொடர்பாக அக்கறையுடன் செயற்பட்டு வருவார்.<br>• இஸ்லாத்தில் நடு நிலை பேணுவது தொடர்பாக குறிப்பிடப்பட்டுள்ள போதனைகளை ஏற்று முன்வைப்பார். | 02 |
| | 7.4<br>பிக்ஹுல் அவ்லவிய்யாத் என்ற எண்ணக்கருவை விளங்கி வாழ்வில் ஒழுகிவரு**வார்.** | • பிக்ஹுல் அவ்லவிய்யாத் | • தமது வாழ்வில் முதன்மைப்படுத்த வேண்டிய விடயங்களை அறிந்து கூறுவார்.<br>• அன்றாட வாழ்வில் அனைத்து விடயங்களும் ஒழுங்குபடுத்தப்பட்டதாக அமைய வேண்டும் என்பதை உணர்ந்து நடப்பார்.<br>• வாழ்க்கையில் பல்வேறு விடயங்களிலும் முதன்மைப்படுத்தும் ஆற்றலைப் பெற்று அதன்படி செயற்பட்டு வருவார்.<br>• முதன்மைப்படுத்தல் மூலம் தனிமனித, சமூக நலன்கள் பேணப்படுகிறது என்பதை பேணி ஒழுகுவார். | 02 |

| தேர்ச்சி | தேர்ச்சி மட்டம் | விடய உள்ளடக்கம் | கற்றல் பேறுகள் | பாட வேளைகள் |
|---|---|---|---|---|
| | 7.5<br>இஸ்லாம் வழங்கியுள்ள மனித உரிமைகளை ஆதாரங்களுடன் விளக்கிக் கூறுவார். | • உடல்,உள ஆரோக்கியம் | • இஸ்லாமிய நோக்கில் மனித உரிமைகள் அல்லாஹ்வினால் விதிக்கப்பட்டவை என்பதை அறிந்து கூறுவார்.<br>• மனித உரிமைகளைப் பேண வேண்டியதன் முக்கியத்துவத்தை நபி (ஸல்) அவர்களின் முன்மாதிரிகளிலிருந்து விளக்குவார்.<br>• உலகிலுள்ள ஒவ்வோர் உயிரினத்திற்கும் உரிமைகள் காணப்படுகின்றன என்பதை உணர்ந்து அதனை மதித்து நடப்பார். | 02 |

## 1.7 கற்றல்- கற்பித்தல் முறை

கலைத் திட்டத்தில் சமய பாடம் மிக முக்கியமானதொன்றாகும். மாணவர் மிகவும் விரும்பத்தக்க விதத்தில் கவர்ச்சியாகவும் உள்ளத்தில் ஆழமான தாக்கத்தை ஏற்படுத்தும் விதமாகவும் நடைமுறை வாழ்வில் பயிற்சிக்கு வரும் விதமாகவும் அதன் கற்றல்- கற்பித்தல் செயலொழுங்கை அமைத்துக் கொள்வது இன்றியமையாததாகும். மாணவர்களது ஆக்கத் திறன், கற்பனைத் திறன், தொடர்பாடல் திறன், சமூக திறன் ஆகியவற்றை வளர்த்து வெளிக்கொணரும் விதமாக கற்றல்- கற்பித்தல் முறை அமைய வேண்டும்.

குறிப்பாக, சமய பாடத்தைப் பொறுத்தவரை மாணவர்களின் மூளையை அறிவாலும் தகவல்களாலும் போஷிக்கச் செய்து பரீட்சை எழுதும் திறனை மாத்திரம் வளர்த்து விடுவது போதுமானதல்ல. மாறாக, மாணவரிடையே தெளிவானதும் நிலையானதுமான ஒரு மாற்றத்தை உருவாக்க வேண்டும். பொருத்தமான கற்றல்- கற்பித்தல் முறைகளைத் தெரிந்திருப்பது ஆசிரியரின் தலையாய பணியாகும். இதன்போது வயது, அனுபவம், சூழல், தனியாள் வேறுபாடு என்பவற்றைக் கருத்திற் கொள்வது வரவேற்கத்தக்கது.

இப்புதிய கலைத்திட்ட ஒழுங்கமைப்பில் கற்றல்- கற்பித்தல் செயலொழுங்கு மாணவர்களை மையமாகக் கொண்டே இடம்பெற வேண்டுமென வலியுறுத்தப்படுகிறது. எனவே, புதிய கற்றல்- கற்பித்தலில் மாணவர்களது திறமைகள், ஆற்றல்கள் வெளிக்கொணரப்படும் விதமாக மாணவர்களது தொழிற்பாடுகள் மிகைத்துக் காணப்பட வேண்டும்.

கற்றல்- கற்பித்தல் செயலொழுங்கில் ஆசிரியர் தனது மாணவரது தனியாள் வேறுபாடுகளை இனங்கண்டு அவர்கள் எதிர்கொள்கின்ற இடர்பாடுகளை நிவர்த்தித்து உற்சாகமூட்டியும் திறமைகள், ஆற்றல்களுக்கு மதிப்பளித்து பாராட்டியும் நடந்து கொள்ள வேண்டும்.

கற்றல்- கற்பித்தல் முறைகள் சில தரப்பட்டுள்ளன.

- கலந்துரையாடல் முறை
- பங்கேற்றுக் கற்றல் முறை
- தகவல் திரட்டும் முறை
- கதை கூறல் முறை
- விரிவுரை முறை
- குழு முறை
- செய்து காட்டல் முறை
- பாத்திரமேற்று நடிக்கும் முறை
- சிந்தனைக் கிளர்வு முறை

இவ்வாறான முறைகளுடன் பாடத்திற்கும் சந்தர்ப்பத்திற்கும் பொருத்தமான மாணவர் மைய சூழலைத் தேர்ந்தெடுப்பது வரவேற்கத்தக்கது.
மாணவரின் கற்றலை மேம்படுத்த உதவும் வகையில் இஸ்லாமிய சஞ்சிகைகள், செய்தித் தாள்கள், மேலதிக வாசிப்பு நூல்கள், பத்திரிகை நறுக்குகள், வரைபடங்கள் போன்றவற்றைப் பயன்படுத்தலாம்.

மேலும் கற்றலை இலகுபடுத்தி கவர்ச்சிகரமானதாக்கிக் கொள்வதற்காக கற்றல்- கற்பித்தல் சாதனங்கள், பொருத்தமான இணையத்தளம் போன்றவற்றை தேவைக்கேற்ப பயன்படுத்துவது உசிதமானதாகும்.

மேலும் பாடசாலையிலும் சுற்றாடலிலும் நடைபெறுகின்ற சமய, கலாசார நிகழ்ச்சிகள், வேலைத் திட்டங்கள் போன்றவற்றில் மிகப் பொருத்தமானவற்றை இனங்கண்டு அவற்றில் மாணவர்களைப் பங்கேற்கச் செய்து பயன்பெற வழிகாட்ட முடியும்.

எனவே, மாணவர்கள் இஸ்லாம் பாடத்தை ஆர்வத்தோடு கற்று முன்மாதிரிமிக்க முஸ்லிமாகவும் நாட்டுக்கு நல்ல பிரஜையாகவும் வாழ்வதற்கான பயிற்சியை வழங்கும் விதத்தில் கற்றல்-கற்பித்தல் செயலொழுங்கை காத்திரமாகவும் வினைத்திறன் மிக்கதாகவும் ஆசிரியர்கள் அமைத்துக் கொள்வார்கள் என எதிர்பார்க்கின்றோம்.

## 10.1.8 பாடசாலைக் கொள்கையும் வேலைத் திட்டமும்

எமது நாட்டின் கலைத்திட்டம் அறிவு வளர்ச்சி, திறன் விருத்தி, மனப்பாங்கு மாற்றம் என்பவற்றை ஏற்படுத்தும் நோக்கில் வடிவமைக்கப்படுகின்றது.

இஸ்லாம் ஒரு வாழ்வு முறையாக அமைவதால் பாடசாலைச் சூழலில் மனப்பாங்கு மாற்றத்தையும் அதற்கூடாக செயற்பாட்டுச் சீர்மையையும் ஏற்படுத்துவதற்கான அறிவும் முறையான பயிற்சியும் வழங்கப்பட வேண்டுமென எதிர்பார்க்கப்படுகிறது. அதற்காக பின்வரும் வழிமுறைகளைக் கையாளலாம்.

- சமய, பண்பாட்டு விழுமியங்களை மேம்படுத்தும் செயற்றிட்டங்களை அமுல்படுத்தல்.
- வெளிக்களப் பயணங்கள், கல்விச் சுற்றுலாக்கள் போன்றவற்றை ஒழுங்குசெய்து அவற்றின் மூலம் சமய, கலாசார மையங்களைத் தரிசிக்கச் செய்தலும் அவற்றுக்கு மதிப்பளித்தலும்.
- புத்தாக்க செயற்பாடுகளை உள்ளடக்கிய முஹர்ரம் புத்தாண்டை வரவேற்றல், ரமழான் மாதத்தை வரவேற்றல், மீலாத் தொடர்பான ஆக்க முயற்சிகளை மேற்கொள்ளல் போன்ற நிகழ்ச்சிகளை ஏற்பாடு செய்தல்.
- இனங்காணப்பட்ட புத்தாக்கத் திறனுள்ள மாணவர்களின் திறமையை மேம்படுத்தும் வகையில் வளப்பங்களிப்புச் செய்யக் கூடியவர்களை வரவழைத்து செயலமர்வுகளை ஒழுங்கு செய்தலும் அவர்களின் சேவைகளைப் பெற்றுக் கொடுத்தலும்.
- பாடசாலைச் சுற்றாடலை சுத்தமாக வைத்திருத்தல், அழகுபடுத்தல், பராமரித்தல் போன்ற செயற்பாடுகளுக்காக தனித்தனி மாணவக் குழுக்களை அமைப்பதற்கு மாணவர்களை வழிப்படுத்தல்.
- தேசிய, சர்வதேச தினங்களை இஸ்லாமியக் கண்ணோட்டத்தில் கொண்டாடுவதற்கான ஏற்பாடுகளைச் செய்துகொடுத்தல்.
- இஸ்லாமிய நடைமுறைகளின் யதார்த்தபூர்வமான உண்மைகளைப் புரியவைத்து, மாணவர்கள் அவற்றை உணர்ந்து பின்பற்றுவதற்கான வேலைத்திட்டமொன்றை உருவாக்கி நடைமுறைப்படுத்தல்.

இத்தகைய பணிகளை வெற்றிகரமாக நிறைவுசெய்வதற்கு பாடசாலை முறைமையிலுள்ள அதிபர், ஆசிரியர்கள், மாணவர்கள், ஊழியர்கள் முதலானோரின் பங்களிப்பு அவசியமாகின்றது. இப்பணியை வினைத்திறனுடன் மேற்கொள்வதற்குத் தேவையான பௌதிக, மனித வளங்களை இனங்கண்டு அவற்றின் மூலம் பாடசாலைச் சமூகம் பயன்பெறலாம்.

மேலும் குறித்த செயற்பாடுகளை வெற்றிகரமாக செயற்படுத்துவதற்கு ஆசிரியர்களுக்கான வழிகாட்டல் கருத்தரங்குகள், செயலமர்வுகள் போன்றவற்றை ஏற்பாடு செய்து அதன் மூலம் கற்றல்- கற்பித்தல் செயற்பாடுகளில் வினைத்திறனை அதிகரிக்கச் செய்யலாம்.

இஸ்லாம் பாடத்துக்காக ஒதுக்கப்பட்டுள்ள பாடவேளைகளின் கால நேரத்தைக் கவனத்திற் கொண்டு குறித்த நேரத்திற்குள் மாணவர்கள் கூடிய பயனைப் பெறும் வகையில் பாட ஆசிரியர்கள் தம்மைத் தயார்படுத்திக் கொள்ள வேண்டும். இப்பாடத்துக்காக ஆசிரியர்களைத் தெரிவுசெய்யும்போது, இஸ்லாம் பாடத்துக்காக பயிற்சி பெற்ற ஆசிரியர்கள், இஸ்லாமிய ஷரீஆ கலாநிலையங்களில் தராதரம் பெற்றவர்கள், இஸ்லாமிய கலாசாரத்தை ஒரு பாடமாகக் கற்ற பட்டதாரிகள் என்போரை ஈடுபடுத்துவது பயன்மிக்கதாக அமையும்.

இந்தப் பாடத்திட்டத்தை நடைமுறைப்படுத்துவதன் மூலம் இஸ்லாமிய அறிவும், சிந்தனைத் தெளிவுமுள்ள, ஒழுக்க விழுமியங்களைப் பேணி நடக்கின்ற, நேர்முறையாகச் சிந்திக்கின்ற, நல்ல உள்ளங்கொண்ட சமூகத்துக்கும் நாட்டுக்கும் பயனளிக்கக்கூடிய எதிர்கால சந்ததியை உருவாக்கும் பணியில் வெற்றி காணலாம்

## 1.9. கணிப்பீடும் மதிப்பீடும்

கற்றல்- கற்பித்தல் நடவடிக்கைகளுக்கூடாக மாணவர்களின் கற்றல் பேறுகளை அளவிடும் ஒரு வழிமுறையாகவே கணிப்பீடும் மதிப்பீடும் அமைகின்றது. இது ஒவ்வொரு பாட வேளையிலும் இடம்பெற வேண்டிய ஒரு செயன்முறையாகும்.

இஸ்லாம் பாட உள்ளடக்கத்தினூடாக மாணவரின் நடத்தை சார்ந்த பண்புகள், வணக்க வழிபாடுகள் மீது கொண்டுள்ள அக்கறை, சமய சமூக செயற்பாடுகளில் ஈடுபாடு போன்றன கணிப்பீடு செய்யப்பட வேண்டுமென எதிர்பார்க்கப்படுகின்றது. இது வகுப்பறைக்குள்ளேயும் வகுப்பறைக்கு வெளியேயும் குறித்த தேர்ச்சியை அடைந்துள்ளாரா என முறைசார்ந்த அல்லது முறைசாராத வகைகளில் இடம்பெற முடியும்.

பாட ஆரம்பம் முதற்கொண்டே கணிப்பீடு செய்யப்பட்டு, இடர்ப்படும் மாணவர்களை இனங்கண்டு பரிகாரக் கற்பித்தலை உடனடியாக ஆரம்பிப்பது பயனுடையதாக அமையும். கணிப்பீட்டுக் கருவி ஆளுக்காள் வேறுபடுவதோடு இஸ்லாம் பாடம் தொடர்பான மதிப்பீடு, கற்றல் கற்பித்தல் முடிவுற்ற பின்பும் மாத, தவணை, ஆண்டு இறுதியிலும் வாய்மொழி வினாக்களுக்கூடாகவோ, எழுத்து மூலமாகவோ, வேலைத் திட்டங்களுக்கூடாகவோ இடம்பெற முடியும். இவற்றுக்குப் பொருத்தமான நியதிகள், வழிமுறைகளை நேர காலத்துடன் உருவாக்கிக் கொள்வது அவசியமாகும்.

இவை தவிர, ஸூறாக்கள், அத்கார்கள், ஹதீஸ்கள், துஆக்கள் முதலியவற்றின் எழுத்துக்கள் சரியாக உச்சரிக்கின்றனரா, மனனமிட்டுள்ளனரா, குறித்த சந்தர்ப்பத்தில் பயன்படுத்துகின்றனரா என்பவற்றையும் மதிப்பீடு செய்தல் வேண்டும். இதற்காக மாதிரி மதிப்பீட்டுக் கருவிகளைத் தயாரித்துக் கொள்வதற்கான அனுபவத்தை ஆசிரியர்கள் பெற்றுக்கொள்ள வேண்டும். ஏனெனில், கணிப்பீடும் மதிப்பீடும் மாணவர்களுக்குரியது மட்டுமன்றி, ஆசிரியர்களுக்கும் முக்கியமானது என்பதையும் விளங்கிக்கொள்ள வேண்டும்.

இஸ்லாம் பாடத்தில் மனப்பாங்கு தொடர்பான கணிப்பீட்டுக்கு முக்கியத்துவம் கொடுப்பது அவசியமானதாகும். பாடத்திட்டத்தில் இடம்பெறும் அல்குர்ஆன் ஸூறாக்கள், சந்தர்ப்ப துஆக்கள் என்பவற்றைக் கணிப்பீடு செய்யும்போது அறபு எழுத்துக்களின் உச்சரிப்பு, நீட்டல்- குறுக்கம், மனனமிட்டிருத்தல் போன்றன அவதானிக்கப்படல் வேண்டும். கற்றல்- கற்பித்தல் செயற்பாட்டில் கணிப்பீடும் மதிப்பீடும் தவிர்க்க முடியாதவை. ஏனெனில் கற்றல்- கற்பித்தல் செயற்பாட்டின் வெற்றி- தோல்வி அதற்கூடாகவே தீர்மானிக்கப்படுகின்றது.

# கற்றல் - கற்பித்தல் செயற்பாட்டுக்கான வழிகாட்டல்கள்

**தேர்ச்சி 1.0 : அகீதா பற்றிய தெளிவான விளக்கத்தைப் பெற்று வாழ்க்கையை நெறிப்படுத்திக் கொள்வார்.**

**தேர்ச்சி மட்டம் 1.1 : அகீதாவுக்கு வரைவிலக்கணம் கூறுவார்.**

**பாடவேளை : 2**

**கற்றல் பேறுகள்:**

- அகீதா என்றால் என்ன என்பதை வரைவிலக்கணப்படுத்திக் கூறுவார்.
- இஸ்லாமிய அகீதாவின் உள்ளடக்கத்தை விவரிப்பார்.
- அஹ்லுஸ் ஸுன்னா வல்ஜமாஆவின் அகீதாவே சரியானது என்பதற்கான காரணங்களைக் விளக்குவார்.
- அஹ்லுஸ் ஸுன்னா வல்ஜமாஆவின் அகீதாவைப் போதிப்பார்.

**பாடத்தைத் திட்டமிடுவதற்கான அறிவுறுத்தல்கள்:**

படி 1 :
- கண்ணுக்குப் புலப்படாத நகரம் ஒன்றைக் குறிப்பிட்டு (உ-ம்: மக்கா) அது இருப்பதாக மாணவர்கள் நம்புகின்றார்களா என வினவுங்கள். ஆம் அல்லது இல்லை எனில் அதற்கான காரணங்களைக் கேட்டறியுங்கள்.
- நம்பிக்கைக்கும் யூகத்துக்கும் இடையிலுள்ள வேறுபாடுகளை மாணவர்களுடன் கலந்துரையாடுங்கள்.
- பின்வரும் விடயங்களை மையப்படுத்திக் கலந்துரையாடுங்கள்.
    - உறுதியாக நம்பப்படுகின்ற விடயம் அகீதா எனப்படுகின்றது. அல்குர்ஆன், அல்ஹதீஸ் என்பனவே இஸ்லாமிய அகீதாவின் மூலங்களாகும்.
    - இஸ்லாமிய அகீதாவை குழப்பும் முயற்சிகள் பல்வேறு காலகட்டங்களில் இடம்பெற்று வந்துள்ளன. இஸ்லாமிய அகீதாவைப் பாதுகாப்பதற்காக இமாம்களும் இஸ்லாமிய அறிஞர்களும் பல்வேறு தியாகங்களைச் செய்துள்ளனர்.

படி 2 :
- மாணவர்களை நான்கு குழுக்களாகப் பிரித்து ஒவ்வொரு குழுவுக்கும் குழுத் தேடியாய்வு அறிவுறுத்தல் பத்திரத்தை வழங்குங்கள்.
- கலந்துரையாடிக் கருத்துக்களை வெளிப்படுத்த நெறிப்படுத்துங்கள்.
- மாணவர்களின் குழுச் செயற்பாட்டை அவதானித்து உறுதிப்படுத்துங்கள்.

படி 3 :
- ஒவ்வொரு குழுவிற்கும் தமது அறிக்கையை முன்வைக்க சந்தர்ப்பமளியுங்கள்.
- ஒவ்வொரு குழுவும் தமது கருத்துக்களை முன்வைத்த பின்னர் அது தொடர்பான போஷிக்கத்தக்க கருத்துக்களை முன்வைக்க ஏனைய குழுவினருக்கு சந்தர்ப்பமளியுங்கள்.
- பின்வரும் விடயங்களை உள்ளடக்கிக் கலந்துரையாடுங்கள்:
    - ஈமான் என்ற நம்பிக்கையும் அமல் என்ற செயற்பாடும் இஸ்லாத்தின் இரு பெரும் கூறுகளாகும். ஈமான் பற்றிய விளக்கம் அகீதாவிலும் அமல்கள் பற்றிய விளக்கம் ஷரீஆவிலும் இடம் பெறுகின்றன.

- எத்தகைய சந்தேகமுமின்றி உறுதியாக நம்பி ஏற்றுக்கொள்ளல் என்பதே அகீதாவின் மொழிக் கருத்தாகும். இஸ்லாமிய பரிபாஷையில் அர்கானுல் ஈமான் என்ற அடிப்படை இஸ்லாமிய நம்பிக்கைகளையும் அவை தொடர்பான விடயங்களையும் அகீதா என வழங்குவர்.

- அல்குர்ஆன், அல்ஹதீஸ் என்பனவே இஸ்லாமிய அகீதாவின் மூலாதாரங்களாகும். இவற்றின் மூலம் இஸ்லாமிய அகீதாவின் உள்ளடக்கம் உறுதிப்படுத்தப்படுகின்றது.

- இஸ்லாத்தின் நம்பிக்கைக் கோட்பாடுகள் இஸ்லாமிய அகீதா (அல்அகாஇதுல் இஸ்லாமி) என அழைக்கப்படுகின்றது. இது ஈமானுடன் தொடர்பான அம்சங்களை விளக்கும் கலையாகும்.

- இஸ்லாமிய அகீதா நான்கு பிரதான விடயங்களை உள்ளடக்கமாகக் கொண்டுள்ளது.
  - அல்இலாஹிய்யாத்
  - அந்நுபுவ்வாத்
  - அர்ரூஹானிய்யாத்
  - அஸ்ஸம்இய்யாத்

- இஸ்லாமிய வரலாற்றின் பிற்பட்ட காலத்தில் கிரேக்க, பாரசீக, இந்து தத்துவங்களால் கவரப்பட்டோர் இஸ்லாமிய அகீதாவை பகுத்தறிவின் அடிப்படையில் விளக்க முனைந்தபோது பல பிரிவுகள் தோற்றம் பெற்றன. இறுதி நபித்துவத்தை மறுப்போர் மற்றும் கதரிய்யா, ஜபரிய்யா, முர்ஜிஆ, ஷீஆ, கவாரிஜ், மு∴தஸிலா போன்றன வழிகெட்ட அகீதாப் பிரிவுகளுக்கான உதாரணங்களாகும்.

- இஸ்லாமிய அகீதாவைப் பாதுகாப்பதற்காக பெரும் தியாகங்கள் செய்து போராடியவர்களுள் இமாம் அஹ்மத் இப்னு ஹன்பல், இமாம் இப்னுல் கையிம், இமாம் அபுல் ஹஸன் அஷ்அரி, அபூ மன்ஸுர் அல்மாதுரூதி, அபூ ஜ∴பர் அத்தஹாவி போன்றோர் குறிப்பிடத்தக்கோராவர்.

- நம்பிக்கை சார்ந்த விடயங்களிலும் அமல் சார்ந்த விடயங்களிலும் நபி (ஸல்) அவர்களைப் பின்பற்றி ஸஹாபாக்கள், ஸலபுஸ் ஸாலிஹீன்களின் வழியில் செல்வோர் அஹ்லுஸ் ஸுன்னா வல்ஜமாஆ என அழைக்கப்படுகின்றனர்.

- அஹ்லுஸ் ஸுன்னா வல்ஜமாஆவின் அகீதா உண்மையானதும் தூய்மையானதுமாகும்.

**தரவிருத்தி உள்ளீடுகள் :**

- பொது அறிவுறுத்தல்களுக்கேற்ப, பொருத்தமானவற்றைப் பயன்படுத்துங்கள்.

**கணிப்பீடு மதிப்பீட்டுக்கான அறிவுறுத்தல்கள் :**

- கற்றல் பேறுகளை அடிப்படையாகக் கொண்டு மதிப்பீட்டு நியமங்களை உருவாக்கிக் கொள்ளுங்கள்

**குழுத்தேடியாய்வு அறிவுறுத்தல் பத்திரம்:**

**குழு-01** அகீதா என்றால் என்ன என்பதை வரைவிலக்கணப்படுத்தி இஸ்லாமிய அகீதாவின் உள்ளடக்கத்தை அட்டவணைப்படுத்துங்கள்.

**குழு-02** இஸ்லாமிய அகீதாவில் எவ்வாறு பிற கலாசாரங்கள் செல்வாக்குச் செலுத்தின என்பது பற்றிக் கலந்துரையாடி அதை அறிக்கைப்படுத்துங்கள்.

**குழு-03** இஸ்லாமிய அகீதாவைப் பாதுகாப்பதற்காக இமாம் அஹமத் மேற்கொண்ட முயற்சிகளைச் சுருக்கமாக எழுதுங்கள்.

**குழு-04** இன்று இஸ்லாமிய அகீதாவுக்கு சவாலாக இருக்கும் வழிகெட்ட பிரிவுகள் இரண்டைப் பற்றி சுருக்கமாக எழுதுங்கள்.

**வீட்டில் பின்தொடர் செயற்பாடு :**

இலங்கையில் இஸ்லாமிய அகீதாவுக்கு சவாலாக அமைந்துள்ள வழிகெட்ட அகீதா பிரிவுகள் தொடர்பாகவும் நீங்கள் வாழும் பிரதேசத்தில் அப்பிரிவுகளின் செயற்பாடுகள் தொடர்பாகவும் தேடிப்பெற வழிகாட்டுங்கள்.

| | | |
|---|---|---|
| **தேர்ச்சி 1.0** | : | **அகீதா பற்றிய தெளிவான விளக்கத்தைப் பெற்று வாழ்க்கையை நெறிப்படுத்திக் கொள்வார்.** |
| **தேர்ச்சி மட்டம் 1.2** | : | **ஈமானுக்கும் அமலுக்குமிடையிலான தொடர்பை இனங்கண்டு கூறுவார்.** |
| **பாடவேளை** | : | **2** |

**கற்றல் பேறுகள்:**

- ஈமானின் விரிவான கருத்தை அறிந்து கூறுவார்.
- பிழையான நம்பிக்கைகளால் வரும் தீமைகளை இனங்கண்டு கூறுவார்.
- நற்செயல்களுக்கும் நன்னடத்தைகளுக்கும் உறுதியான ஈமானே காரணமாகும் என்பதை சரிகண்டு செயற்படுவார்.
- உறுதியான ஈமானின் மூலம் சமூக வாழ்வில் முன்மாதிரியாகத் திகழ்வார்.

**பாடத்தைத் திட்டமிடுவதற்கான அறிவுறுத்தல்கள்:**

படி 1 :
- ஸூறா அஸ்ரை ஓதி அதன் மொழிபெயர்ப்பை வாசித்துக் காட்டுவதனூடாகப் பாடப்பிரவேசம் செய்யுங்கள்.
- அந்த ஸூராவைக் கொண்டு ஈமானுக்கும் அமலுக்குமிடையிலுள்ள தொடர்பை விளக்குங்கள்.
- பின்வரும் விடயங்களை மையப்படுத்திக் கலந்துரையாடுங்கள்.
  - ஈமான் என்றால் அல்குர்ஆனும் ஹதீஸும் குறிப்பிடும் மறைவான விடயங்களை நம்புவதாகும்.
  - அமல் என்றால் இஸ்லாம் குறிப்பிடும் வணக்க வழிபாடுகள், நற்கருமங்கள் அனைத்தையும் செயல்ரீதியாக நடைமுறைப்படுத்துவதாகும்.
  - ஈமானும் அமலும் ஒன்றோடு ஒன்று பின்னிப் பிணைந்தவையாகும்.
  - ஒரு மு.்.மினின் அனைத்துச் செயற்பாடுகளும் அவனது ஈமானின் பிரதிபலிப்பாகும்.

படி 2 :
- மாணவர்களை நான்கு குழுக்களாகப் பிரித்து ஒவ்வொரு குழுவுக்கும் குழுத் தேடியாய்வு அறிவுறுத்தல் பத்திரத்தை வழங்குங்கள்.
- கலந்துரையாடிக் கருத்துக்களை வெளிப்படுத்த நெறிப்படுத்துங்கள்.
- மாணவர்களின் குழுச் செயற்பாட்டை அவதானித்து உறுதிப்படுத்துங்கள்.

படி 3 :
- ஒவ்வொரு குழுவுக்கும் தமது அறிக்கையை முன்வைக்கச் சந்தர்ப்பமளியுங்கள்.
- ஒவ்வொரு குழுவும் தமது கருத்துக்களை முன்வைத்த பின்னர் அது தொடர்பான போஷிக்கத்தக்க கருத்துக்களை முன்வைக்க ஏனைய குழுவினருக்குச் சந்தர்ப்பமளியுங்கள்.
- பின்வரும் விடயங்களை உள்ளடக்கிக் கலந்துரையாடுங்கள்.

- இஸ்லாத்தில் ஈமானே முதல் இடத்தை வகிக்கின்றது. ஈமான் கொள்ள வேண்டிய விடயங்களை அல்குர்ஆனும் ஹதீஸும் விளக்கியுள்ளன. அவற்றை ஈமான் முஜ்மல், ஈமான் முபஸ்ஸல் என வகைப்படுத்தி அறிஞர்கள் விளக்கியுள்ளனர்.
- அல்லாஹ்விடத்தில் நன்மை பெற்றுத் தரக்கூடிய அனைத்துக் கருமங்களும் நல்லமல்களாகக் கருதப்படுகின்றன.
- அல்குர்ஆனும் ஹதீஸும் ஈமானையும் அமலையும் ஒன்றுசேர்த்தே போதிக்கின்றன.

  “அவர்கள் யாரெனில் மறைவானவற்றை விசுவாசிப்பவர்களாகவும் தொழுகையை நிலைநாட்டுபவர்களாகவும் நாம் அருளியவற்றிலிருந்து செலவு செய்பவர்களாகவும் இருப்பார்கள்.” (2: 2)

  “ஈமான் எழுபதுக்கு மேற்பட்ட கிளைகளைக் கொண்டது. அதில் உயர்தரமானது “லா இலாஹ இல்லல்லாஹ்” என்ற வார்த்தையாகும். தாழ்ந்தது தீங்கு விளைவிக்கும் பொருட்களைப் பாதையில் இருந்து அப்புறப்படுத்துவதாகும். வெட்கமும் ஈமானைச் சார்ந்ததாகும்.” (புகாரி)

- அல்லாஹ்வின் மீது கொள்கின்ற நம்பிக்கை காரணமாக ஒரு முஃமின் தன்னை அல்லாஹ் எப்போதும் பார்த்துக் கொண்டிருக்கின்றான் என்ற உணர்வைப் பெறுவான். இதனால் நன்மையான காரியங்களையே செய்ய நாடுவான். வெட்கக் கேடான தீய காரியங்களைச் செய்யாமல் தவிர்ப்பான்.
- ஒரு முஃமின் மலக்குமார்களை உரிய முறையில் ஈமான் கொள்வதன் மூலம் மறைவான சக்திகள் எதனையும் அல்லாஹ்வுக்கு இணையாக்க முயற்சிக்கமாட்டான்.
- வேதங்களையும் நபிமார்களையும் விசுவாசிப்பதன் மூலம் அவ்வுயர்ந்த வழிகாட்டலை வாழ்க்கை நெறியாகப் பின்பற்ற முயற்சிப்பான்.
- மறுமையை நம்புவதன் மூலம் சுவர்க்கத்தை ஆசித்து நற்கருமங்களில் ஈடுபடுவான். நரகத்தை அஞ்சி பாவங்களைத் தவிர்த்துக் கொள்வான்.
- கழா கத்ரை நம்புவதன் மூலம் இழப்புக்களின்போது சோர்ந்து விடாமல் மீண்டும் புத்துணர்வுடன் முயற்சிக்க ஊக்கம் பெறுவான்.
- ஒரு முஸ்லிமின் ஈமான் அதிகரிக்கும்போது அவன் அதிகமதிகம் நற்கருமங்கள் புரிவான்.
- ஒரு முஸ்லிமின் ஈமான் குறைவடைகின்றபோதும் பலவீனமடைகின்றபோதும் பாவகாரியங்களின்பால் அவன் ஈர்க்கப்படுவான். பாவம் புரிகின்ற நிலையை நபி (ஸல்) அவர்கள் ஈமான் அற்ற நிலை என விளக்கியுள்ளார்கள்.

  “ஒருவன் விபச்சாரம் புரிகின்ற நிலையில் முஃமினாக இருக்க மாட்டான். மது அருந்தும் நிலையில் முஃமினாக இருக்க மாட்டான். திருடும்போது முஃமினாக இருக்கமாட்டான்.”

- நற்கருமங்களால் ஈமான் மேலும் மேலும் பிரகாசிக்கும். தீய செயல்களால் அது அழிந்துவிடும்.

“நெருப்பு விறகை எரிப்பது போல் பொறாமை ஈமானை அழித்துவிடும்.” (அபூதாவூத்)

**தரவிருத்தி உள்ளீடுகள் :**

- பொது அறிவுறுத்தல்களுக்கேற்ப, பொருத்தமானவற்றைப் பயன்படுத்துங்கள்.

**கணிப்பீடு மதிப்பீட்டுக்கான அறிவுறுத்தல்கள் :**

- கற்றல் பேறுகளை அடிப்படையாகக் கொண்டு மதிப்பீட்டு நியமங்களை உருவாக்கிக் கொள்ளுங்கள்.

**குழுத்தேடியாய்வு அறிவுறுத்தல் பத்திரம்:**

**குழு-01** இஸ்லாம் கூறும் அடிப்படை நம்பிக்கைகளைக் கலந்துரையாடிச் சுருக்கமாக விளக்குங்கள்.

**குழு-02** மனிதனின் தோற்றம், வளர்ச்சி, முடிவு என்பன பற்றிய இஸ்லாமிய நம்பிக்கையையும் விஞ்ஞான நம்பிக்கையையும் விளக்கும் அட்டவணை ஒன்று தயாரியுங்கள்.

**குழு-03** 'உறுதியான ஈமான் அசாதாரண துணிவைத் தருகிறது' என்ற கருத்தை உறுதிப்படுத்தும் இஸ்லாமிய வரலாற்றுச் சம்பவம் ஒன்றை கலந்துரையாடி எழுதுங்கள்.

**குழு-04** ஸூரதுல் முஃமினூனில் 1 முதல் 9 வரையுள்ள வசனங்களில் குறிப்பிடப்பட்டுள்ள ஒரு முஃமினின் செயல் சார்ந்த அமல்களைப் பட்டியற்படுத்துங்கள்

**வீட்டில் பின்தொடர் செயற்பாடு :**

அடிப்படைக் கடமைகளுக்கு மேலதிகமாக வாராந்தம் தொடர்ந்து செய்துவரக்கூடிய ஸுன்னத்தான அமல்கள் தொடர்பாக வீட்டாருடன் கலந்துரையாடி அவற்றை எல்லோரும் நடைமுறைப்படுத்துவதற்கான ஒரு திட்டத்தைத் தயார்படுத்தி அமுல்படுத்த நெறிப்படுத்துங்கள்

**தேர்ச்சி 1.0 : அகீதா பற்றிய தெளிவான விளக்கத்தைப் பெற்று வாழ்க்கையை நெறிப்படுத்திக் கொள்வார்.**

**தேர்ச்சி மட்டம் 1.3 : ரிஸாலத், ஹிதாயத் ஆகிய பதங்களின் விளக்கங்களைப் பெற்று ரிஸாலத், ஹிதாயத்துக்கான ஊடகம் என்பதை விளக்கிக் கூறுவார்.**

**பாடவேளை : 2**

**கற்றல் பேறுகள்**

- ரிஸாலத், ஹிதாயத் ஆகிய சொற்களுக்கான விளக்கத்தைக் கூறுவார்.
- ஹிதாயத்தை அடைந்து கொள்ள ரிஸாலத் மாத்திரமே வழியாகும் என்பதற்கான நியாயங்களை முன்வைப்பார்.
- நபி (ஸல்) அவர்கள் போதித்த ரிஸாலத்தை பாதுகாப்பதில் தமக்கும் பொறுப்புண்டு என்பதை ஏற்றுச் செயற்படுவார்.
- பிற மனிதர்கள் ஹிதாயத்தைப் பெற்றுக் கொள்வதற்காக தன்னால் இயன்ற முயற்சிகளைச் செய்வார்.

**பாடத்தைத் திட்டமிடுவதற்கான அறிவுறுத்தல்கள்:**

**படி 1 :**

- ஸூரா பகராவின் 253 வது வசனத்தை அழகாக ஓதக் கூடிய மாணவனைக் கொண்டு ஓதச் செய்து அதன் மொழி பெயர்ப்பை வாசித்துக் காட்டுங்கள்.
- ரிஸாலத், ஹிதாயத் பற்றிய மாணவர்களின் முன்னறிவை மீள்பரிசீலனை செய்யுங்கள்.
- பின்வரும் விடயங்களை மையப்படுத்திக் கலந்துரையாடுங்கள்
    - மனிதன் நேர்வழியில் செல்வதற்கு அல்லாஹ்வினால் அவனுக்கு வழங்கப்படும் வழிகாட்டல்கள் ரிஸாலத் எனப்படுகிறது. ரிஸாலத்தை உலக மக்களுக்கு எடுத்துப் போதிப்பவர்களே ரஸூல்மார்களும் நபிமார்களுமாவர்.
    - அல்லாஹ் தனது ரிஸாலத்தை மனிதர்களுக்கு எத்தி வைப்பதற்காக ரஸூல்மார்களை தெரிவுசெய்து அனுப்பினான். ஒவ்வொரு ரஸூல்மாரும் தம்மீது சுமத்தப்பட்ட ரிஸாலத் பணியை நிறைவேற்றுவதில் பல்வேறு சோதனைகளை எதிர்கொண்டனர்.
    - ரிஸாலத் இன்றி ஹிதாயத்தைப் பெற முடியாது.
    - ஹிதாயத் பெற்ற மனிதனே சுவனம் நுழைவான்.

**படி 2 :**

- மாணவர்களை நான்கு குழுக்களாகப் பிரித்து ஒவ்வொரு குழுவுக்கும் குழுத் தேடியாய்வு அறிவுறுத்தல் பத்திரத்தை வழங்குங்கள்.
- கலந்துரையாடிக் கருத்துக்களை வெளிப்படுத்த நெறிப்படுத்துங்கள்.
- மாணவர்களின் குழுச் செயற்பாட்டை அவதானித்து உறுதிப்படுத்துங்கள்.

படி 3 :

- ஒவ்வொரு குழுவுக்கும் அறிக்கைகளைச் சமர்ப்பிக்க சந்தர்ப்பம் வழங்குங்கள்
- ஆக்கபூர்வமான மேலதிக கருத்துக்களை முன்வைத்து விரிவுபடுத்த அதே குழுவுக்கு முதலில் வாய்ப்பளியுங்கள்.
- ஏனைய குழுக்களின் கருத்துக்களையும் பெற்று குறை நிரப்புச் செய்யுங்கள்
- பின்வரும் விடயங்களை மையப்படுத்திக் கலந்துரையாடுங்கள்
    - அல்லாஹ் மனிதன் மீது கொண்ட அளப்பரிய அன்பின் வெளிப்பாடுகளில் மனிதனுக்கு வழிகாட்டலை வழங்கியமையும் ஒன்றாகும். இறை வழிகாட்டலே ரிஸாலத் (தூதுத்துவம்) எனப்படுகிறது. மனித சமூகத்துக்கு ஹிதாயத் எனும் நேர்வழியை வழங்குவதற்காக நுபுவ்வத், ரிஸாலத் ஆகிய ஊடகங்களை அல்லாஹ் நியதிகளாக வைத்துள்ளான். ரிஸாலத் எனும் தூதுத்துவப் பணி நுபுவ்வத் எனும் இறை அறிவிப்புச் செய்யும் பணியை விட பொறுப்பு வாய்ந்ததாகும்.
    - அல்லாஹ் உலகில் தோன்றிய அனைத்து சமுதாயத்தவருக்கும் அவர்கள் ஹிதாயத் பெறுவதற்காக நபிமார்களையும் ரஸூல்மார்களையும் அனுப்பி வைத்தான். மனிதன் புலன்களால் அறிய முடியாத மறைவான விடயங்கள் பற்றியும் உலகில் வாழ்வதற்கான சட்டதிட்டங்கள் பற்றியும் மனிதனை அல்லாஹ்வுடன் தொடர்புபடுத்தும் வழிமுறைகள் பற்றியும் ஒழுக்க நெறி பற்றியும் ரிஸாலத் எடுத்துச் சொல்கிறது.
    - ரிஸாலத்தை நம்புவது ஈமானின் மிக முக்கிய அம்சங்களில் ஒன்றாகும். ரிஸாலத்தைப் புறக்கணிக்கின்ற மனிதர்கள் தமது மனோஇச்சைகளையே பின்பற்றி நடப்பர். தௌராத், ஸபூர், இன்ஜீல், புர்கான் முதலான வேதங்களும் ஸுஹுபுகளும் அவ்வப்போது அருளப்பட்ட ரிஸாலத்துகளாகும்.
    - ஹிதாயத் என்பது நேர்வழியைக் குறிக்கும்.
    - அல்லாஹ் தான் நாடும் ஒரு மனிதனின் உள்ளத்தில் ஏற்படுத்தும் அகத் தூண்டலினால் அவன் ரிஸாலத்தை ஏற்றுப் பின்பற்றுகின்றான். அதன் மூலம் அவன் ஹிதாயத்தை அடைந்து கொள்கின்றான்.
    - மக்கள் அறியாமையினாலும் ஆணவத்தினாலும் நபிமார்களையும் ரஸுல்மார்களையும் கடுமையாக எதிர்த்தனர். மக்களின் எதிர்ப்புகளுக்கும் துன்புறுத்தல்களுக்கும் மத்தியில் மக்களின் ஹிதாயத்துக்காக அவர்கள் பொறுமையுடன் இருந்தனர். மனிதனது நாகரிக வரலாற்றில் மூன்று நபிமார்களது முயற்சிகள் திருப்புமுனையை ஏற்படுத்தியுள்ளன:
        - நூஹ் (அலை) ○ இப்ராஹீம் (அலை) ○ முஹம்மத்(ஸல்)
    - அல்லாஹ் ரஸுல்மார்களுக்கு அவர்களது பணியை நிறைவேற்று வதற்காக வேதங்களையும் ஸுஹுபுகளையும் வழங்கியிருந்தான்.
    - சில நபிமார்கள் வேதங்களையும் ஸுஹுபுகளையும் பெற்றனர். இன்னும் சிலர் வேதங்களை மட்டும் பெற்றனர். இன்னும் சிலர் ஸுஹுபுகளை மட்டும் பெற்றனர்.

- ஒரு நபிக்குப் பின் இன்னொரு நபி அல்லது ரஸுல் வருவதற்கு பல காரணங்கள் உண்டு. உதாரணமாக:-
    - முந்திய நபியின் போதனைகள் அழிவடைதல்
    - முந்திய நபியின் போதனைகள் முழுமை பெறாதிருத்தல்
    - முந்திய நபியின் போதனை அனைவரையும் சென்றடையாதிருத்தல்
    - ஒரு நபியின் பணிக்கு துணையாக வருதல்
    - ஒரு நபியின் வருகை ஒரு பிரதேசத்திற்கு மட்டுப்படுத்தப்பட்டதாக இருப்பின் ஏனைய பிரதேசங்களுக்கு வருதல்
- ஸூறதுல் பாத்திஹாவில் நாம் அல்லாஹ்விடம் ஹிதாயத்தைத் தருமாறு பிரார்த்திக்கின்றோம். ஹிதாயத் ரிஸாலத்தை நம்புவதிலேயே இருக்கிறது என்று அல்லாஹ் ஸூரதுல் பகறாவின் இரண்டாம் வசனத்தில் கூறுகின்றான்.
- முஹம்மத் (ஸல்) அவர்களுக்குப் பின் அல்லாஹ் எந்த நபியையோ, றஸுலையோ அனுப்பிவைக்கவில்லை. முஹம்மத் (ஸல்) அவர்களது போதனைகள் முழுமையாகப் பாதுகக்கப்பட்டுள்ளன. அத்துடன் அவை உலக மக்கள் யாவருக்கும் பொதுவானதும் இறுதியானதுமாகும்.

**தரவிருத்தி உள்ளீடுகள் :**

- பொது அறிவுறுத்தல்களுக்கேற்ப, பொருத்தமானவற்றைப் பயன்படுத்துங்கள்.

**கணிப்பீடு மதிப்பீட்டுக்கான அறிவுறுத்தல்கள் :**

- கற்றல் பேறுகளை அடிப்படையாகக் கொண்டு மதிப்பீட்டு நியமங்களை உருவாக்கிக் கொள்ளுங்கள்.

**குழுத்தேடியாய்வு அறிவுறுத்தல் பத்திரம்:**

**குழு-01** ரிஸாலத் இன்றி ஹிதாயத் பெற முடியாது என்பதற்கான நியாயங்களைக் கலந்துரையாடிப் பட்டியற்படுத்துங்கள்.

**குழு-02** மக்கள் ஹிதாயத் பெற வேண்டும் என்பதற்காக நபிமார்கள் மேற்கொண்ட முயற்சிகளில் மூன்றைத் தேடியறிந்து எழுதுங்கள்.

**குழு-03** றிஸாலத்தின் இறுதி ஊடகமான அல்குர்ஆனைப் படித்து ஹிதாயத் பெற்ற இரு சம்பவங்களைத் தேடி எழுதுங்கள்.

**குழு-04** ஆரம்பம் முதல் மனித வரலாற்றில் திருப்புமுனைகளை ஏற்படுத்திய நபிமார்கள் தொடர்பான நான்கு அல்குர்ஆன் வசனங்களைத் தேடியறிந்து எழுங்கள். (தர்ஜமதுல் குர்ஆனைப் பயன்படுத்துங்கள்)

**வீட்டில் பின்தொடர் செயற்பாடு :**

ஹிதாயத் பெற்று புதிதாக இஸ்லாத்தை தழுவிய ஒருவரது வாழ்க்கை அனுபவங்களைத் தொகுக்க வழிப்படுத்துங்கள்.

**தேர்ச்சி 2.0 : இபாதத் பற்றிய எண்ணக்கருவை விளங்கி வாழ்வை இபாதத்தாக மாற்றிக் கொள்வதற்காக இபாதத்துக்களைச் சீராகவும் தொடராகவும் கரிசனையோடும் நிறைவேற்றி வருவார்**

**தேர்ச்சி மட்டம் 2.1 : நஜீஸ் நீக்கும் முறையை அறிந்து விழிப்புடன் அதனைக் கடைப்பிடிப்பார்.**

**பாடவேளை : 2**

**கற்றல் பேறுகள்:**

- இஸ்லாம் சுத்தத்திற்கு வழங்கியுள்ள முக்கியத்துவத்தை எடுத்துக் கூறுவார்.
- நீரின் வகையினையும் நஜீஸ் நீக்கும் முறையினையும் விளங்கி பின்பற்றுவார்.
- வுழு, தயம்மம், குளிப்பு தொடர்பான இஸ்லாமிய விதிமுறைகளை அறிந்து பிறருக்கும் எடுத்துக் கூறுவார்.

**பாடத்தைத் திட்டமிடுவதற்கான அறிவுறுத்தல்கள்:**

படி 1 :
- மாணவர் ஒருவரது உடையில் நஜீஸ் தோய்ந்த ஒரு சந்தர்ப்பத்தை நினைவுகூரச் செய்யுங்கள்
- அதுபற்றி அனைவரினதும் அபிப்பிராயங்களை வினவிப் பெறுங்கள்.
- பின்வரும் அம்சங்களை வெளிக்கொணரும் விதமாக அவர்களுடன் கலந்துரையாடுங்கள்:
    - தஹாரத் பற்றி இஸ்லாம் விரிவாக விளக்கியுள்ளது. அகமும் புறமும் சுத்தமாக இருப்பதை அது வலியுறுத்தியுள்ளது.
    - சுத்தம் பேணும் முறையை இஸ்லாம் காட்டித் தந்துள்ளது. நஜீஸ் பற்றிய தெளிவான விளக்கத்தை இஸ்லாம் முன்வைத்துள்ளது.

படி 2 :
- மாணவர்களை நான்கு குழுக்களாகப் பிரித்து ஒவ்வொரு குழுவுக்கும் குழுத் தேடியாய்வு அறிவுறுத்தல் பத்திரத்தை வழங்குங்கள்.
- கலந்துரையாடிக் கருத்துக்களை வெளிப்படுத்த நெறிப்படுத்துங்கள்.
- மாணவர்களின் குழுச் செயற்பாட்டை அவதானித்து உறுதிப்படுத்துங்கள்.

படி 3
- ஒவ்வொரு குழுவிற்கும் தம்முடைய செயற்பாடுகளை முன்வைக்க இடமளியுங்கள்.
- மேலதிக தகவல்களை முன்வைத்து விரிவுபடுத்துவதற்கு முதலில் அதே குழுவினருக்குச் சந்தர்ப்பமளியுங்கள். ஏனைய குழுக்களின் ஆக்கபூர்வமான கருத்துக்களை வினவிப் பெறுங்கள்.
- பின்வரும் விடயங்களை மையப்படுத்தி கலந்துரையாடுகங்கள்:
    - இஸ்லாம் துாய்மையானது நீங்களும் துாய்மையைக் கடைப்பிடியுங்கள்'' என்று நபி (ஸல்) அவர்கள் வற்புறுத்தி உள்ளார்கள்.

- வணக்கங்கள் அங்கீகரிக்கப்பட சுத்தம் இன்றியமையாததாகும்.
- நஜீஸிலிருந்து சுத்தமாதல், பெருந்தொடக்கிலிருந்து நீங்குதல் சிறு தொடக்கிலிருந்து நீங்குதல் என்ற மூன்று அம்சங்களும் சுத்தம் பேணுவதற்கான வழிகளாகும்.
- சுத்தம் செய்யும் முறைக்கேற்ப நஜீஸை சாதாரண நஜீஸ், இலகுவான நஜீஸ், கடுமையான நஜீஸ் என வகைப்படுத்துவர்.
- நஜீஸ் நீங்குவதற்கான வழிமுறைகளை சட்ட நூல்கள் தெளிவுபடுத்தியுள்ளன.
- நீர் அல்லது திரவம் பிரதான மூன்று பிரிவுகளாக நோக்கப்படுகின்றது. அவை தஹூர், தாஹிர், நஜீஸ் என்பவையாகும்.
- சுத்தம் செய்யும் வழிமுறையாக வுழு, தயம்மும், குளிப்பு போன்றனவும் காணப்படுகின்றன. அவை குறித்து தெளிவான விதிமுறைகளை இஸ்லாம் வகுத்துள்ளது. அவற்றை நாம் பின்பற்றி நடக்க வேண்டும்.

**தரவிருத்தி உள்ளீடுகள் :**

- பொது அறிவுறுத்தல்களுக்கேற்ப, பொருத்தமானவற்றைப் பயன்படுத்துங்கள்.

**கணிப்பீடு மதிப்பீட்டுக்கான அறிவுறுத்தல்கள் :**

- கற்றல் பேறுகளை அடிப்படையாகக் கொண்டு மதிப்பீட்டு நியமங்களை உருவாக்கிக் கொள்ளுங்கள்.

**குழுத் தேடியாய்வு அறிவுறுத்தல் பத்திரம்:**

**குழு-01** நஜீஸின் மூன்று வகைகளையும் உதாரணத்துடன் விளக்குங்கள்.

**குழு-02** நஜீஸின் மூன்று வகைகளையும் குறிப்பிட்டு அவற்றை சுத்தம் செய்யும் முறையை விளக்குங்கள்.

**குழு-03** நீரின் வகைகளைப் பட்டியலிட்டு அவைபற்றி சுருக்கமாக விளக்குங்கள்.

**குழு-04** ஜனாபத் நீக்கும் முறை பற்றி விளக்கி எழுதுங்கள்.

**வீட்டில் பின்தொடர் செயற்பாடு :**

கடுமையான நஜீஸ் தோய்ந்த ஆடையை எவ்வாறு வீட்டில் சுத்தம் செய்கிறார்கள் என்பதனை தாயுடன் கலந்துரையாடி எழுத வழிப்படுத்துங்கள்.

**தேர்ச்சி 2.0 : இபாதத் பற்றிய எண்ணக்கருவை விளங்கி வாழ்வை இபாதத்தாக மாற்றிக் கொள்வதற்காக இபாதத்துக்களைச் சீராகவும் தொடராகவும் கரிசனையோடும் நிறைவேற்றி வருவார்.**

**தேர்ச்சி மட்டம் 2.2 : இபாதத் என்பதை விளக்கி முழு வாழ்வையுமே இபாதத்தாக நோக்கும் மனப்பாங்கை ஏற்படுத்திக் கொள்வார்.**

**பாடவேளை : 2**

**கற்றல் பேறுகள்:**

- இபாதத் என்பதன் கருத்தையும் அதன் பிரயோகத்தையும் முன்வைப்பார்
- உலகியல் செயற்பாடொன்றை இபாதத்தாக மாற்றிக் கொள்வதற்கான நிபந்தனைகளை பட்டியல்படுத்துவார்.
- இபாதத்கள் எவ்வாறு வகைப்படுத்தப்படுகின்றன என்பதை விளக்குவார்.
- இபாதத்கள் எவ்வாறு மனித வாழ்வை நெறிப்படுத்துகின்றன என்பதை ஆராய்வார்.

**பாடத்தைத் திட்டமிடுவதற்கான அறிவுறுத்தல்கள்:**

படி 1 :
- நாளாந்தம் செய்யும் கருமங்கள் பற்றி மாணவர்களிடம் கேட்டறியுங்கள். அதில் ஒன்றை இபாதத்தாக மாற்றிக்கொள்வதற்கான நிபந்தனைகளை உதாரணங்காட்டிக் கலந்துரையாடுங்கள்.
- இபாதத் பற்றி மாணவர்கள் விளங்கி வைத்திருக்கின்ற விடயங்கள் குறித்து வினவுங்கள்.
- பின்வரும் விடயங்களை மையப்படுத்திக் கலந்துரையாடலில் ஈடுபடுங்கள்.
    - இபாதத் என்ற பதம் “அபத” என்ற பதத்திலிருந்து தோன்றியதாகும்.
    - அடியான் அல்லாஹ்வை இபாதத் செய்வதற்காகவே படைக்கப்பட்டுள்ளான். இறைவன் இட்ட கட்டளைகளை எடுத்து நடப்பது இபாதத்தாகும்.
    - இபாதத்கள் பர்ழு, சுன்னத் என பல பிரிவுகளைக் கொண்டமைந்துள்ளன.

படி 2 :
- மாணவர்களை நான்கு குழுக்களாகப் பிரித்து ஒவ்வொரு குழுவுக்கும் குழுத் தேடியாய்வு அறிவுறுத்தல் பத்திரத்தை வழங்குங்கள்.
- கலந்துரையாடிக் கருத்துக்களை வெளிப்படுத்த நெறிப்படுத்துங்கள்.
- மாணவர்களின் குழுச் செயற்பாட்டை அவதானித்து உறுதிப்படுத்துங்கள்.

படி 3 :
- ஒவ்வொரு குழுவிற்கும் தாம் கலந்துரையாடியவற்றை முன்வைக்கச் சந்தர்ப்பம் வழங்குங்கள்.
- போஷிக்கத்தக்க கருத்துக்களை அடுத்த குழுக்களிடமிருந்து பெற்றுக் கொள்ளுங்கள். குறை நிரப்புச் செய்து வழிகாட்டுங்கள்.

- பின்வரும் விடயங்களை வெளிக்கொணரும் வகையில் மீளாய்வு செய்யுங்கள்:

  - இபாதத் என்பது ''அப்து'' என்ற மூலச்சொல்லிலிருந்து பிரிந்ததாகும். இபாதத் என்பது தமிழில் வணங்குதல், அடிபணிதல், வழிபடுதல் என்ற மொழிக்கருத்தை தருகிறது. அல்லாஹ் ஒருவனுக்கே இபாதத் செய்ய வேண்டும்.

    ''உன்னையே வணங்குகிறோம், உன்னிடமே உதவி தேடுகிறோம்''(1:5)

  - இபாதத் என்பது அல்லாஹ்மீது கொண்ட அன்பினால் அவனுக்கு முற்றிலும் கட்டுப்பட்டு நடப்பதையே குறிக்கும். அல்லாஹ்வும் ரஸுலும் காட்டித்தந்தவைகள் மாத்திரமே இபாதத் ஆக கணிக்கப்படும்.

  - அடிப்படையான இபாதத்தில் தொழுகை, ஸக்காத், நோன்பு, ஹஜ் போன்றவை அடங்குகின்றன. ஸுன்னத்தான இபாதத்களில் துஆ, திலாவதுல் குர்ஆன், ஸதகா போன்றன அடங்குகின்றன. ஏனைய செயற்பாடுகளையும் வாழ்வை இபாதத்தாக மாற்றிக் கொள்வதற்கான நிபந்தனைகளை இஸ்லாம் வகுத்துத் தந்துள்ளது.

  - மனித வாழ்வின் எல்லாத் துறைகளும் அல்லாஹ்வும் ரஸுலும் இட்ட வரையறைகளைப் பேணி நடத்தப்படும்போது அது இபாதத்தாகும்.

**தரவிருத்தி உள்ளீடுகள் :**

- பொது அறிவுறுத்தல்களுக்கேற்ப, பொருத்தமானவற்றைப் பயன்படுத்துங்கள்.

**கணிப்பீடு மதிப்பீட்டுக்கான அறிவுறுத்தல்கள் :**

- கற்றல் பேறுகளை அடிப்படையாகக் கொண்டு மதிப்பீட்டு நியமங்களை உருவாக்கிக் கொள்ளுங்கள்.

**குழுத் தேடியாய்வு அறிவுறுத்தல் பத்திரம்**

**குழு-01** இபாதத் என்பதன் விரிந்த பொருளை விளக்குங்கள்.

**குழு-02** உலகியல் செயற்பாடொன்றை இபாதத்தாக மாற்றிக் கொள்வதற்கான நிபந்தனைகளை விளக்கி அதற்கான உதாரணங்களையும் குறிப்பிடுங்கள்.

**குழு-03** இபாதத்கள் எவ்வாறு வகைப்படுத்தப்படுகின்றன என்பதை விளக்குங்கள்.

**குழு-04** இபாதத்கள் எவ்வாறு மனித வாழ்வை நெறிப்படுத்துகின்றன என்பது குறித்து கலந்துரையாடி எழுதுங்கள்.

**வீட்டில் பின்தொடர் செயற்பாடு :**

நாளாந்த வாழ்வை இபாதத்தாக மாற்றிக் கொள்வதற்கான நிபந்தனைகளின் அடிப்படையில் குடும்ப உறுப்பினர்களின் செயற்பாடுகளை மாற்றிக் கொள்ள மேற்கொண்ட நடவடிக்கைகளை கலந்துரையாடி எழுத வழிப்படுத்துங்கள்.

**தேர்ச்சி 2.0 : இபாதத் பற்றிய எண்ணக்கருவை விளங்கி வாழ்வை இபாதத்தாக மாற்றிக் கொள்வதற்காக இபாதத்துக்களைச் சீராகவும் தொடராகவும் கரிசனையோடும் நிறைவேற்றி வருவார்.**

**தேர்ச்சி மட்டம் 2.3 : தொழுகையின் முக்கியத்துவத்தையும் பயனையும் அறிந்து தொழுகையைப் பேணி வருவார்.**

**பாடவேளை : 3**

**கற்றல் பேறுகள்:**

- தொழுகை இஸ்லாத்தில் அடிப்படைக் கடமைகளில் முதன்மையானது என்பதற்கான ஆதாரங்களை எடுத்துக் கூறுவார்.
- தொழுகையின் முக்கியத்துவத்தை ஆதாரங்களுடன் விளக்குவார்.
- தொழுகையின் ஒவ்வொரு நிலையையும் அறிந்து அவற்றில் ஓத வேண்டிய ஓதல்களை ஓதி வருவார்.
- தொழுகையை விடுவதால் ஏற்படும் பாதிப்புக்களை அறிந்து அதனைத் தவறாமல் நிறைவேற்றி வருவார்.

**பாடத்தைத் திட்டமிடுவதற்கான அறிவுறுத்தல்கள்:**

படி 1 :

- "தொழுகையைப் பற்றியே கியாம நாளில் முதலில் விசாரிக்கப்படும். அடியானின் தொழுகை சீராக இருந்தால் அவனது ஏனைய அமல்களும் சீராகிவிடும் அது சீர்கெட்டால் அவனது ஏனைய அமல்களும் சீர் கெட்டுவிடும்." (தபரானி) என்ற ஹதீஸை முழுமையாக எழுதிக் காட்சிப்படுத்தி மாணவர்களை கவனயீர்ப்புச் செய்யுங்கள்.
- பின்வரும் விடயங்களை மையப்படுத்தியதாக கலந்துரையாடலில் ஈடுபடுங்கள்:
    - இபாதத்களில் மிகப் பிரதானமானது தொழுகையாகும். தொழுகையை விட்டவர் காபிராவார். மறுமையில் முதலில் விசாரிக்கப்படுவது தொழுகை பற்றியாகும். குர்ஆனும் சுன்னாவும் தொழுகையைப் பேணுமாறு மிக அதிகமாக வலியுறுத்தியுள்ளன. தொழுகை விதியானவர் அந்நிலையில் அதை நிறைவேற்றியேயாக வேண்டும்

படி 2 :

- மாணவர்களை நான்கு குழுக்களாகப் பிரித்து ஒவ்வொரு குழுவுக்கும் குழுத் தேடியாய்வு அறிவுறுத்தல் பத்திரத்தை வழங்குங்கள். கலந்துரையாடிக் கருத்துக்களை வெளிப்படுத்த நெறிப்படுத்துங்கள்.
- மாணவர்களின் குழுச் செயற்பாட்டை அவதானித்து உறுதிப்படுத்துங்கள்.

படி 3 :

- ஒவ்வொரு குழுவிற்கும் தாம் எழுதியவற்றை முன்வைக்கச் சந்தர்ப்பம் வழங்குங்கள்.
- போஷிக்கத்தக்க கருத்துக்களை அடுத்த குழுக்களிடமிருந்து பெற்றுக் கொள்ளுங்கள்.
- பின்வரும் விடயங்களை வெளிக்கொணரும் வகையில் மீளாய்வு செய்யுங்கள்:

- தொழுகை மார்க்கத்தின் தூண்களில் ஒன்றாகும். எவர் அதனை நிலை நிறுத்துகிறாரோ அவர் மார்க்கத்தை நிலை நிறுத்தியவர் ஆவார். எவர் அதனை விட்டுவிடுகிறாரோ அவர் மார்க்கத்தை தகர்த்தெறிந்தவராவார்.
- தொழுகையைப்பற்றியே கியாம நாளில் முதலில் விசாரிக்கப்படும். அடியானின் தொழுகை சீராக இருந்தால் அவனது ஏனைய அமல்களும் சீராகிவிடும் அது சீர்கெட்டால் அவனது ஏனைய அமல்களும் சீர் கெட்டுவிடும். (தபரானி)
- தொழாதவர் மறுமை நாளில் “ஸகர்” எனும் நரகிலேயே நுழைவர். தொழுகையை விட்டவர் மறுமையில் பிர்அவ்ன், ஹாமான் போன்ற கொடிய காபிர்களுடனேயே எழுப்பப்படுவார். ஒரு நேரத் தொழுகை விடுபடுவது குடும்பம், செல்வம், அனைத்தையும் இழந்ததற்கு சமமாகும். தொழுகையை விட்டவரை அவரது கப்று நெருக்கும். உலக வாழ்வில் அவர் அல்லாஹ்வின் பாதுகாப்பை இழப்பார்.
- முஸ்லிம் உரிய நேரத்தில் தொழுகையை பேணிப் வருபவராக இருப்பார்.
- தொழும் முறையை ஜிப்ரீல் (அலை) அவர்கள் நபி (ஸல்) அவர்களுக்கு கற்றுக் கொடுத்தார்கள். அதனை முஹம்மத் (ஸல்) அவர்கள் எமக்குக் கற்றுக் கொடுத்தார்கள்.
- தொழுகையின் ஒவ்வொரு நிலையையும் அதில் ஓத வேண்டியவற்றையும் நபி (ஸல்) அவர்கள் தெளிவாக விளக்கியுள்ளார்கள். அதன்படி நாம் தொழுகையின் சட்டதிட்டங்களைப் பேணி ஓதல்களை மனனமிட்டு ஒழுங்குமுறைப்படி நிறைவேற்ற வேண்டும்.

**தரவிருத்தி உள்ளீடுகள் :**

- பொது அறிவுறுத்தல்களுக்கேற்ப, பொருத்தமானவற்றைப் பயன்படுத்துங்கள்.

**கணிப்பீடு மதிப்பீட்டுக்கான அறிவுறுத்தல்கள் :**

- கற்றல் பேறுகளை அடிப்படையாகக் கொண்டு மதிப்பீட்டு நியமங்களை உருவாக்கிக் கொள்ளுங்கள்.

**குழுத் தேடியாய்வு அறிவுறுத்தல் பத்திரம்**

**குழு-01** ரியாழுஸ்ஸாலிஹீன் தமிழ் மொழி பெயர்ப்பில் “தொழுகையின் சிறப்பு” என்ற தலைப்பின் கீழுள்ள 1040, 1041, 1044, 1043, 1044 இலக்கம் கொண்ட ஹதீஸ்களை தொகுத்து எழுதிக் கொள்ளுங்கள்.

**குழு-02** அல்குர்ஆன் 74:38-44 வரையுள்ள வசனங்களை வாசித்து அது தரும் கருத்துக்களை உரைவடிவில் எழுதுங்கள்.

**குழு-03** தொழுகையை விடுவதன் விளைவுகள் ஸகரிய்யா ஸாஹிப் அவர்கள் எழுதிய தொழுகையின் சிறப்பு என்ற நூலிலிருந்து தொகுத்து எழுதுங்கள்.

**வீட்டில் பின்தொடர் செயற்பாடு :**

தொழுகையின் நிலைகளைக் காட்டும் வீடியோ காட்சி ஒன்றை பார்வையிட்டு அது தொடர்பாக பெற்றோருடன் கலந்துரையாடி தாம் அறிந்துகொண்ட முக்கிய அம்சங்களைத் தொகுப்பதற்கு ஆலோசனை வழங்குங்கள்.

**தேர்ச்சி 2.0 : இபாதத் பற்றிய எண்ணக்கருவை விளங்கி வாழ்வை இபாதத்தாக மாற்றிக் கொள்வதற்காக இபாதத்களை சீராகவும் தொடராகவும் கரிசனையோடும் நிறைவேற்றி வருவார்.**

**தேர்ச்சி மட்டம் 2.4 : தொழுகையைத் தொடர்ந்து ஓதும் ஓதல்களை அறிந்து அவற்றை ஓதி வருவார்.**

**பாடவேளை : 2**

- தொழுகையின்பின் ஓத வேண்டிய அவ்ராதுகளை அறிந்து மனனமிட்டு வருவார்.
- அவ்ராதுகளை ஓதுவதனால் பல நன்மைகள் கிடைக்கின்றன என்பதை அறிந்து அதனைக் கடைப்பிடித்து வருவார்.
- நபியவர்கள் தொழுது முடிந்து ஓதிய ஓதல்களை மற்றவர்களுக்கும் சொல்லிக் காட்டுவார்.
- குறித்த அவ்ராதுகளின் பொருளை அறிந்து பிறருக்கு எடுத்துக் கூறுவார்.

**பாடத்தைத் திட்டமிடுவதற்கான அறிவுறுத்தல்கள்:**

படி 1 :
- தொழுகையை தொடர்ந்து ஓதும் ஓதல்கள் அடங்கிய அட்டவணையொன்றைக் காட்சிப்படுத்துங்கள்.
- மாணவர்கள் தொழுகையின் பின் ஓதும் அவ்ராதுகள் எவையென வினவி கருத்தப் பரிமாறுங்கள்.
- பின்வரும் விடயங்களை மையப்படுத்தி கலந்துரையாடலில் ஈடுபடுங்கள்:
  - தொழுகை தக்பீர் தஹ்ரீமுடன் ஆரம்பித்து ஸலாத்துடன் முடிவடைகின்றது. தொழுது முடிந்த பின்னர் ஓத வேண்டிய ஸுன்னத்தான அவ்ராதுகள் பல காணப்படுகின்றன.
  - ஸுபஹ், அஸர் தொழுகையின் பின் ஓதுவதற்கு விசேட துஆக்கள் காணப்படுகின்றன. அவற்றை நபி (ஸல்) அவர்கள் ஓதி வந்துள்ளார்கள்.

படி 2 :
- மாணவர்களை நான்கு குழுக்களாகப் பிரித்து ஒவ்வொரு குழுவுக்கும் குழுத் தேடியாய்வு அறிவுறுத்தல் பத்திரத்தை வழங்குங்கள்.
- கலந்துரையாடிக் கருத்துக்களை வெளிப்படுத்த நெறிப்படுத்துங்கள்.
- மாணவர்களின் குழுச் செயற்பாட்டை அவதானித்து உறுதிப்படுத்துங்கள்.

படி 3 :
- ஒவ்வொரு குழுவிற்கும் தாம் எழுதியவற்றை முன்வைக்கச் சந்தர்ப்பம் வழங்குங்கள்.
- ஏனைய குழுக்களிடமிருந்து போஷிக்கத்தக்க கருத்துக்களைப் பெற்றுக் கொள்ளுங்கள்.
- பின்வரும் விடயங்களை வெளிக்கெணரும் வகையில் மீளாய்வு செய்யுங்கள்:

- தொழுது முடிந்து ஸலாம் கொடுத்த பின் நபி (ஸல்) அவர்கள் அஸ்த.ஃபிருல்லாஹ் என்று மூன்று முறை ஓதி வந்துள்ளார்கள்.
- நபி (ஸல்) அவர்கள் ஒவ்வொரு தொழுகைக்குப் பின்னரும் ஸுப்ஹானல்லாஹ் என்று 33 தடவையும் அல்ஹம்துலில்லாஹ் என்று 33 தடவையும் அல்லாஹு அக்பர் என்று 33 தடவையும் ஓதி லா இலாஹ இல்லல்லாஹ் என்று ஒரு முறை ஓதி நூறாகப் பூரணப்படுத்துவார்கள்.
- நபி (ஸல்) அவர்கள் தொழுகைக்குப் பின் ஆயத்துல் குர்ஸியை ஓதி வந்துள்ளார்கள். ஒவ்வொரு பர்ளான தொழுகைக்குப் பின் ஆயத்துல் குர்ஸியை ஓதினால் அடுத்த தொழுகை வரை அல்லாஹ்வின் பாதுகாப்பிலேயே இருப்பார். (தபரானி)
- நாமும் தொழுகையின் பின் ஓதும் அவ்ராதுகளை அதிகமாக ஓதுவதால் நன்மைகளை அதிகரித்துக் கொள்ளலாம்.

**தரவிருத்தி உள்ளீடுகள் :**

- பொது அறிவுறுத்தல்களுக்கேற்ப, பொருத்தமானவற்றைப் பயன்படுத்துங்கள்.

**கணிப்பீடு மதிப்பீட்டுக்கான அறிவுறுத்தல்கள் :**

- கற்றல் பேறுகளை அடிப்படையாகக் கொண்டு மதிப்பீட்டு நியமங்களை உருவாக்கிக் கொள்ளுங்கள்.

**குழு தேடியாய்வு அறிவுறுத்தல் பத்திரம்**

**குழு-01** தொழுது முடிந்த பின் ஓதும் சில அவ்ராதுகளை அட்டவணைப்படுத்துங்கள்.

**குழு-02** நபி (ஸல்) அவர்கள் சுபஹ், ம.ஃரிப் தொழுகைகளுக்குப் பின் ஓதிய அவ்ராதுகளைப் பொருளுடன் எழுதுங்கள்.

**குழு-03** தொழுகையைத் தொடர்ந்து ஓத வேண்டிய அவ்ராதுகளை ஓதுவதால் கிடைக்கும் நன்மைகளைப் பட்டியற்படுத்துங்கள்.

**வீட்டில் பின்தொடர் செயற்பாடு :**

பர்ளான தொழுகையைத் தொடர்ந்து ஓத வேண்டிய அவ்ராதுகளை மனனமிட்டு ஓதிவர வழிப்படுத்துங்கள்.

**தேர்ச்சி 3.0 : தஸ்கியா பற்றி விளங்கி ஆன்மீக ஒழுக்கப் பண்புகளைக் கடைப்பிடித்து ஒழுகுவார்.**

**தேர்ச்சி மட்டம் 3.1 : தஸ்கிய்யா பற்றிய இஸ்லாமிய கண்ணோட்டத்தை அறிந்து அவற்றைக் கடைப்பிடித்து வருவார்.**

**பாடவேளை : 2**

**கற்றல் பேறுகள்:**

- அத்தஸ்கியா என்றால் என்ன என்பதனை விளக்கிக் கூறுவார்.
- அத்தஸ்கியாவின் முக்கியத்துவத்தை விபரிப்பார்
- அத்தஸ்கியாவின் நோக்கத்தை விளக்கிக் கூறுவார்.
- அத்தஸ்கியாவை ஏற்படுத்துவதற்கான செயற்பாடுகளைக் கடைப்பிடிப்பார்.

**பாடத்தைத் திட்டமிடுவதற்கான அறிவுறுத்தல்கள்:**

படி 1 :

- நிச்சயமாக உடலிலே ஒரு மாமிசத் துண்டுள்ளது. அது சீரடைந்து விட்டால் முழு உடலும் சீரடைந்து விடும். அது கெட்டுவிட்டால் முழு உடலுமே கெட்டுவிடும். அறிந்துகொள்ளுங்கள். அது தான் உள்ளம் (புஹாரி) என்ற ஹதீஸைக் காட்சிப்படுத்தி வாசித்துக் காட்டி கவனயீர்ப்புச் செய்யுங்கள்
- பின்வரும் அம்சங்களை வெளிக்கொணரும் விதமாக அவர்களுடன் கலந்துரையாடுங்கள்:
    - தஸ்கிய்யதுந் நப்ஸ் என்பது உளத் தூய்மையாகும். இஸ்லாம் அனைத்து வணக்க வழிபாடுகளினூடாகவும் தஸ்கிய்யாவையே எதிர்பார்க்கின்றது.
    - அல்குர்ஆனும் ஸுன்னாவும் தஸ்கிய்யதுந் நப்ஸை வலியுறுத்தியுள்ளன. உள்ளத்தை தூய்மையாக வைத்திருப்பதன் மூலம் ஈருலகிலும் வெற்றி பெறலாம்.

படி 2 :

- மாணவர்களை நான்கு குழுக்களாகப் பிரித்து ஒவ்வொரு குழுவுக்கும் குழுத் தேடியாய்வு அறிவுறுத்தல் பத்திரத்தை வழங்குங்கள். கலந்துரையாடிக் கருத்துக்களை வெளிப்படுத்த நெறிப்படுத்துங்கள்.
- மாணவர்களின் குழுச் செயற்பாட்டை அவதானித்து உறுதிப்படுத்துங்கள்.

படி 3 :

- ஒவ்வொரு குழுவிற்கும் தம்முடைய செயற்பாடுகளை முன்வைக்க இடமளியுங்கள்.
- மேலதிகமான விடயங்களையும் தொடர்புபட்ட விடயங்களையும் அடுத்த குழுக்களிடமிருந்து பெற்றுக் கொள்ளுங்கள்
- பின்வரும் விடயங்களை மையப்படுத்திக் கலந்துரையாடுகங்கள்:
    - நப்ஸின் மீதும் அதனை உருவாக்கியவன் மீதும் அதன் நன்மை தீமைகளை அதற்கு அறிவித்தவன் மீதும் சத்தியமாக, எவன் அதனை பரிசுத்தமாக்கிக் கொண்டானோ அவன் நிச்சயமாக வெற்றியடைந்துவிட்டான். எவன் அதனைப் (பாவத்தில்) புதைத்து விட்டானோ அவன் நிச்சமாக நஷ்டமடைந்து விட்டான். (91: 7-10)

- நிச்சயமாக அல்லாஹ் உங்கள் வெளித்தேற்றத்தையோ உடம்பையோ அவதானிக்கமாட்டான். மாறாக அவன் உங்கள் உள்ளங்களையே அவதானிக்கிறான்.
- உள்ளத்தைப் பரிசுத்தப்படுத்துவதற்கு பல வழிகளை இஸ்லாம் காட்டித்தந்துள்ளது. அவற்றுள் அல்லாஹ்வுக்கு இணை கற்பிப்பதிலிருந்து உள்ளத்தை தூய்மைப்படுத்தி தௌஹீதை வாழ்வில் கடைப்பிடித்தல் முதன்மையானது. மற்றும் கடமையாக்கப்பட்ட வணக்க வழிபாடுகள், சுன்னத்தான வணக்க வழிபாடுகள், திக்ர், திலாவதுல் குர்ஆன், இஸ்தி∴பார், தவ்பா, துஆ போன்றவற்றில் ஈடுபடுவதையும் இதில் அடக்கலாம்.
- அறிந்துகொள்ளுங்கள் இறைவனை திக்ர் செய்வதன் ஊடாகவே உள்ளங்கள் அமைதி பெறுகின்றன.
- உளத்தூய்மையைப் பாதிக்கின்றவற்றிலிருந்து விலகி நிற்கும் படி இஸ்லாம் பணித்துள்ளது. இணை வைத்தல், தீய எண்ணம், வீண் சந்தேகம், பொறாமை, கோபம், பெருமை, வஞ்சகம் முதலானவை உளத்தூய்மையைப் பாதிக்கின்றன.
- நெருப்பு விறகை எரிப்பது போல பொறாமை நன்மையை எரித்துவிடுகின்றது (அபூதாவுத்)

**தரவிருத்தி உள்ளீடுகள் :**

- பொது அறிவுறுத்தல்களுக்கேற்ப, பொருத்தமானவற்றைப் பயன்படுத்துங்கள்.

**கணிப்பீடு மதிப்பீட்டுக்கான அறிவுறுத்தல்கள் :**

- கற்றல் பேறுகளை அடிப்படையாகக் கொண்டு மதிப்பீட்டு நியமங்களை உருவாக்கிக் கொள்ளுங்கள்.

குழுத் தேடியாய்வு அறிவுறுத்தல் பத்திரம்

**குழு-01** தஸ்கிய்யதுந் நப்ஸ் என்பதற்கான கருத்தை வரைவிலக்கணப்படுத்துங்கள்

**குழு-02** தஸ்கிய்யாவை வலியுறுத்தும் அல்குர்ஆன் வசனங்களை மொழிபெயர்ப்புடன் தொகுத்து எழுதுங்கள்

**குழு-03** தஸ்கிய்யா வலியுறுத்தும் ஹதீஸ்களை தொகுத்து எழுதுங்கள்.

**குழு-04** தஸ்கிய்யாவை ஏற்படுத்தும் மற்றும் பாதிக்கச் செய்யும் அம்சங்களை வெவ்வேறாக பட்டியற்படுத்துங்கள்.

**வீட்டில் பின்தொடர் செயற்பாடு :**

உளத்தூய்மையை வலுப்படுத்துவதற்கு வீட்டில் மேற்கொள்ளப் பொருத்தமான திட்டமொன்றை தயாரித்து நடைமுறைப்படுத்த வழிப்படுத்துங்கள்.

**தேர்ச்சி 3.0 : தஸ்கியா பற்றி விளங்கி ஆன்மீக ஒழுக்கப் பண்புகளைக் கடைப்பிடித்து ஒழுகுவார்**

**தேர்ச்சி மட்டம் 3.2 : நற்பண்புகள் பற்றிய இஸ்லாமிய கண்ணோட்டத்தை அறிந்து அவற்றைக் கடைப்பிடித்து வருவார்.**

**பாடவேளை : 2**

- நற்பண்புகளுக்கு இஸ்லாம் வழங்கியுள்ள முக்கியத்துவத்தை எடுத்துக் கூறுவார்.
- நற்பண்புகளுக்கான முன்மாதிரியை நபி (ஸல்) அவர்களின் வாழ்விலிருந்து அறிந்து கூறுவார்.
- அன்பு, ஈகை, தியாகம், நாணயம் முதலானவற்றிற்கு இஸ்லாம் வழங்கியுள்ள முக்கியத்துவத்தை அறிந்து கூறுவார்.
- புலன்களைப் பேணி வாழ்வை நெறிப்படுத்திக்கொள்வார்.

**பாடத்தைத் திட்டமிடுவதற்கான அறிவுறுத்தல்கள்:**

படி 1 :

- "நான் நற்பண்புகளைப் பூரணப்படுத்துவதற்கே அனுப்பப்பட்டுள்ளேன்" (அஹ்மத்) என்ற ஹதீஸை முன்வைத்து மாணவர்களை, கவனயீர்ப்புச் செய்யுங்கள்.
- பின்வரும் அம்சங்களை வெளிக்கொணரும் விதமாக அவர்களுடன் கலந்துரையாடுங்கள்.
  - நற்பண்புகள் அக்லாக் எனப்படுகின்றது. அது கட்டாயமாகப் பின்பற்றப்பட வேண்டிய ஒழுக்கங்களின் தொகுதியைக் கொண்டுள்ளது.
  - நற்பண்புகளை அல்குர்ஆன் போதிக்கின்றது. நபி (ஸல்) அவர்களின் வாழ்வு முழுவதும் நற்பண்பாகவே அமைந்திருந்தது.
  - மனித சமூகம் நாகரிகமான வாழ்வை கட்டியெழுப்ப நபி (ஸல்) அவர்களின் முன்மாதிரிகளைப் பின்பற்ற வேண்டும்.

படி 2 :

- மாணவர்களை நான்கு குழுக்களாகப் பிரித்து ஒவ்வொரு குழுவுக்கும் குழுத் தேடியாய்வு அறிவுறுத்தல் பத்திரத்தை வழங்குங்கள்.
- கலந்துரையாடிக் கருத்துக்களை வெளிப்படுத்த நெறிப்படுத்துங்கள்.
- மாணவர்களின் குழுச் செயற்பாட்டை அவதானித்து உறுதிப்படுத்துங்கள்.

படி 3 :

- ஒவ்வொரு குழுவிற்கும் தம்முடைய செயற்பாடுகளை முன்வைக்க இடமளியுங்கள்
- மேலதிகமான விடயங்களையும் தொடர்புபட்ட விடயங்களையும் அடுத்த குழுக்களிடமிருந்து பெற்றக்கொள்ளுங்கள்
- பின்வரும் விடயங்களை மையப்படுத்தி கலந்துரையாடுங்கள்
  - அல்குர்ஆன், நபி (ஸல்) அவர்களை நற்பண்புகளைக் கொண்டவராக அறிமுகப்படுத்துகின்றது.

நிச்சமாக (நபியே) நீர் மகத்தான (உயர்ந்த) பண்புகளைக் கொண்டவராக இருக்கின்றீர் (64: 4)

ஆயிஷா (றழி) அவர்கள் குறிப்பிடும்போது நபிகளாரின் பண்பாடுகள் குர்ஆனாகவே இருந்தது என்றார்கள். (முஸ்லிம்)

நபி (ஸல்) அவர்கள் சிறுவயது முதலே அஸ்ஸாதிக் (உண்மையாளர்), அல்அமீன் நம்பிக்கையாளர் என மக்களால் போற்றப்பட்டார்கள்.

- இறை நம்பிக்கையில் முழுமைபெற்ற மு.ஃ.மின்கள் பண்பாட்டில் சிறந்தவராவர் (அபூ தாவுத்)

  அன்பு, ஈகை, தியாகம், நாணயம் முதலாவற்றிற்கான பல்வேறு முன்மாதிரிகளை நபி (ஸல்) அவர்களின் வாழ்வு கற்றுத்தருகிறது.

- ஒருவருக்கொருவர் கருணை புரிவதிலும், அன்பு செலுத்துவதிலும் இரக்கம் காட்டுவதிலும் உண்மையான இறை நம்பிக்கையாளர்களை ஓர் உடலைப் போன்று நீ காண்பாய். உடலின் ஓர் உறுப்பு சுகவீனமடைந்தால் அதனுடன் மற்ற உறுப்புகளும் (சேர்ந்து கொண்டு) உறங்காமல் விழித்துக் கொண்டிருக்கின்றன. (புகாரி)
- உனக்கு நாணம் இல்லையேல் நாடியதைச் செய்துகொள் என்பதும் மக்கள் முந்தைய இறைத்தூதர்களின் (முது) மொழிகளிலிருந்து அடைந்து கொண்ட ஒன்றுதான்.'' என நபி (ஸல்) அவர்கள் கூறினார்கள். (புகாரி)

**தரவிருத்தி உள்ளீடுகள் :**

- பொது அறிவுறுத்தல்களுக்கேற்ப, பொருத்தமானவற்றைப் பயன்படுத்துங்கள்.

**கணிப்பீடு மதிப்பீட்டுக்கான அறிவுறுத்தல்கள் :**

- கற்றல் பேறுகளை அடிப்படையாகக் கொண்டு மதிப்பீட்டு நியமங்களை உருவாக்கிக் கொள்ளுங்கள்.

**குழுச் செயற்பாட்டின் அறிவுறுத்தல்கள்**

குழு-1 நற்குணங்கள் தொடர்பான அல்குர்ஆன் வசனங்களை எழுதுங்கள்.

குழு-2 நற்குணங்கள் தொடர்பான ஹதீஸ்களை எழுதுங்கள்.

குழு-3 அன்பு ஈகை தியாகம் நாணயம் முதலான நற்குணங்களை வாழ்வில் பின்பற்றி நடப்பதன் அவசியத்தை விளக்குங்கள்.

குழு-4 புலன்களைப் பேணுவதால் கிடைக்கும் நன்மைகளைப் பட்டியல்படுத்துங்கள்.

**வீட்டில் பின்தொடர் செயற்பாடு :**

நற்பண்புகளை மேம்பாடடையச்செய்ய வீட்டுச் சூழலிலும் பாடசாலைச் சூழலிலும் மேற்கொள்ள வேண்டிய நடவடிக்கைகளில் இரண்டை மேற்கொள்வதற்கு வழிப்படுத்துங்கள்.

**தேர்ச்சி 3.0 : தஸ்கியா பற்றி விளங்கி ஆன்மீக ஒழுக்கப் பண்புகளைக் கடைப்பிடித்து ஒழுகுவார்**

**தேர்ச்சி மட்டம் 3.3 : ஆன்மீக மேம்பாட்டுக்கான வழிமுறைகளை குர்ஆன் சுன்னா ஆதாரங்களினூடாக விளங்கி வாழ்வில் கடைப்பிடித்தொழுகுவார்.**

**பாடவேளை : 2**

**கற்றல் பேறுகள் :**

- ஆன்மீக மேம்பாட்டின் முக்கியத்துவத்தை அறிந்து கூறுவார்.
- அல்குர்ஆன், ஹதீஸில் கூறப்பட்டுள்ள ஆன்மீக மேம்பாட்டிற்கான வழிமுறைகளை அறிந்து கடைப்பிடிப்பார்.
- ஆன்மீக மேம்பாட்டிற்கு இக்லாஸ், தவ்பா, வர.:., ஸுஹ்த் என்பன எவ்வாறு உதவுகின்றன என்பதை விளக்கிக் கூறுவார்.
- ஆன்மீகத்தை மேம்பாடடையச் செய்யும் அம்சங்களைப் பின்பற்றியொழுகுவார்.

**பாடத்தைத் திட்டமிடுவதற்கான அறிவுறுத்தல்கள்:**

படி 1 :

- “பேணுதலான முஸ்லிம் எப்போதும் பெரும்பாவத்திற்கு அஞ்சி சிறு பாவத்தை விட்டுவிடுபவனாக இருப்பான் (தபரானி) என்ற ஹதீஸை முன்வைத்து மாணவர்களை கவனயீர்ப்புச் செய்யுங்கள்
- பின்வரும் அம்சங்களை வெளிக்கொணரும் விதமாக அவர்களுடன் கலந்துரையாடுங்கள்
  - ஆன்மாவைப் போசிக்கும் பல்வேறு பண்புகளையும் போதனைகளையும் இஸ்லாம் முன்வைத்துள்ளது.
  - ஸலபுஸ் ஸாலிஹீன்கள் ஆன்மாவைப் பரிபக்குவப்படுத்துவதற்காக இப்பண்புகளையும் போதனைகளையும் கடைப்பிடித்து வந்துள்ளனர்.
  - அவற்றை நாமும் பின்பற்றி எமது ஆன்மாவை தூய்மைப்படுத்திக் கொள்ள வேண்டும்.

படி 2 :

- மாணவர்களை நான்கு குழுக்களாகப் பிரித்து ஒவ்வொரு குழுவுக்கும் குழுத் தேடியாய்வு அறிவுறுத்தல் பத்திரத்தை வழங்குங்கள்.
- கலந்துரையாடிக் கருத்துக்களை வெளிப்படுத்த நெறிப்படுத்துங்கள்.
- மாணவர்களின் குழுச் செயற்பாட்டை அவதானித்து உறுதிப்படுத்துங்கள்.

படி 3 :

- ஒவ்வொரு குழுவிற்கும் தம்முடைய செயற்பாடுகளை முன்வைக்க இடமளியுங்கள்
- மேலதிகமான விடயங்களையும் தொடர்புபட்ட விடயங்களையும் அடுத்த குழுக்களிடமிருந்து பெற்றக்கொள்ளுங்கள்
- பின்வரும் விடயங்களை மையப்படுத்திக் கலந்துரையாடுங்கள்

- ஆன்மாவைப் போசிக்கும் பண்புகள் பல உண்டு.

  அவற்றில் இக்லாஸ், தவ்பா, வரஉ, ஸுஹ்த் என்பன முக்கியமானவையாகும்.

  சந்தேகத்துக்குரியதை விட்டுவிடுவதை, வர∴ என்பது குறிக்கும்.

  உனக்கு சந்தேகம் ஏற்படுத்தக் கூடியதை விட்டுவிட்டுச் சந்தேகம் ஏற்படுத்தாததை பின்பற்றுவாயாக.(அஹ்மத்)

  பேணுதலான முஸ்லிம் எப்போதும் பெரும்பாவத்திற்கு அஞ்சி சிறு பாவத்தை விட்டுவிடுபவனாக இருப்பான் (தபரானி).

- உலகப் பற்றின்மையையே பற்றற்ற வாழ்வு குறிக்கிறது. இறைக் கட்டளையை முற்றாக ஏற்று நடப்பதற்காக உலக ஆசையை உள்ளத்தை விட்டும் நீக்கி மறுமை பற்றிய சிந்தனையுடன் வாழ்வதையே ஸுஹ்த் குறிக்கும். பற்றற்ற வாழ்வை வரவேற்கும் இஸ்லாம் துறவறத்தை அங்கீகரிக்கவில்லை.

  இஸ்லாத்தில் துறவறம் இல்லை - (அஹ்மத்)

  உலக பற்றற்றவனாக இரு. அல்லாஹ் உன்னை நேசிப்பான். மனிதர்களிடம் உள்ளதை விட்டும் தேவையற்றவனாக இரு. மனிதர்கள் உன்னை நேசிப்பார்கள். (இப்னு மாஜா)

- இக்லாஸ் என்பது கலப்பற்ற எண்ணம் என்பதைக் குறிக்கும். உள்ளத்தின் தூய்மையே செயல்களின் வெற்றிக்கு வழிவகுக்கும்.

  செயல்கள் அனைத்தும் எண்ணங்களைப் பொறுத்ததே (புகாரி)

**தரவிருத்தி உள்ளீடுகள் :**

- பொது அறிவுறுத்தல்களுக்கேற்ப, பொருத்தமானவற்றைப் பயன்படுத்துங்கள்.

**கணிப்பீடு மதிப்பீட்டுக்கான அறிவுறுத்தல்கள் :**

- கற்றல் பேறுகளை அடிப்படையாகக் கொண்டு மதிப்பீட்டு நியமங்களை உருவாக்கிக் கொள்ளுங்கள்.

குழுச் செயற்பாட்டின் அறிவுறுத்தல்கள்

குழு-1 இக்லாஸ் என்பதை விளக்கி அது தொடர்பான குர்ஆன் வசனங்களை எழுதுங்கள்.

குழு-2 வர∴ தொடர்பாக விளக்கி அது தொடர்பான சம்பவங்கள் இரண்டை எழுதுங்கள்.

குழு-3 பற்றின்மையை வாழ்வில் பின்பற்றி நடப்பதன் அவசியத்தை விளக்குங்கள்.

குழு-4 செயல்கள் அனைத்தும் எண்ணங்களைப் பெறுத்ததே என்பதை விளக்குங்கள்.

**வீட்டில் பின்தொடர் செயற்பாடு :**

பேணுதல், உளத்தூய்மை, பற்றின்மை என்பவற்றை வலியுறுத்தும் வகையில் வீட்டுச் சூழலில் மேற்கொள்ளக் கூடிய நடவடிக்கைகளை பட்டியல்படுத்த வழிப்படுத்துங்கள்.

தேர்ச்சி 4.0 : இஸ்லாத்தின் மூலாதாரங்கள் பற்றிய தெளிவான அறிவைப் பெற்று அதனடிப்படையில் வாழ்க்கை முறையை நெறிப்படுத்திக் கொள்வார்.

தேர்ச்சி மட்டம் 4.1 : வஹியின் முக்கியத்துவத்தை விளங்கி அதனை எடுத்துக் கூறுவார்.

பாடவேளை : 2

**கற்றல் பேறுகள்:**

- வஹி என்பதன் வரைவிலக்கணத்தை அறிந்து கூறுவார்.
- மனித அறிவுக்கும் வஹிக்குமிடையிலான வேறுபாடுகளை இனங்கண்டு கூறுவார்.
- வஹியின் முக்கியத்துவத்தை அறிந்து அதன் போதனைகளை பின்பற்றிப் ஒழுகுவார்.
- ஈருலக வாழ்வின் வெற்றிக்கும் வஹியே அடிப்படையாக அமையும் என்பதை நிறுவிக் காட்டுவார்.
- வஹி அருளப்பட்ட முறைகளையும் அதன் வகைகளையும் தொகுத்துக் கூறுவார்.

**பாடத்தைத் திட்டமிடுவதற்கான அறிவுறுத்தல்கள்:**

படி 1 :

- "மனிதர்களே! உங்கள் இறைவனிடமிருந்து நிச்சயமாக ஒரு நல்லுபதேசம் வந்திருக்கிறது. உங்கள் இதயங்களிலுள்ள நோய்களுக்கு அது சஞ்சீவி ஆகும். மேலும் அது விசுவாசம் கொண்டோருக்கு நேர்வழிகாட்டியாகவும் ஓர் அருளாகவும் இருக்கிறது." (10: 57) என்ற அல்குர்ஆன் வசனத்தை ஒரு மாணவனைக் கொண்டு வாசிக்கச் செய்து ஏனையவர்களை செவிமடுக்கச் செய்யுங்கள்.
- அது பற்றி மாணவர்களிடம் கருத்துப் பரிமாறுங்கள்.
- பின்வரும் விடயங்களை மையப்படுத்திக் கலந்துரையாடுங்கள்.
  - இறை தூதர்களுக்கு அல்லாஹ்வினால் வழங்கப்பட்ட வேதவெளிப்பாடே வஹியாகும். மனித அறிவிலிருந்து அது வித்தியாசப்படுகிறது. மனிதனது அடிப்படையான வினாக்களுக்கு அது விடை பகர்கின்றது. பல்வேறு வழிமுறைகளில் இறை தூதர்களுக்கு வஹி வழங்கப்பட்டுள்ளது. வஹி இரண்டு வகைகளாகப் பிரித்து நோக்கப்படுகின்றது.

படி 2 :

- மாணவர்களை நான்கு குழுக்களாகப் பிரித்து ஒவ்வொரு குழுவுக்கும் குழுத் தேடியாய்வு அறிவுறுத்தல் பத்திரத்தை வழங்குங்கள்.
- கலந்துரையாடிக் கருத்துக்களை வெளிப்படுத்த நெறிப்படுத்துங்கள்.
- மாணவர்களின் குழுச் செயற்பாட்டை அவதானித்து உறுதிப்படுத்துங்கள்.

படி 3 :

- ஒவ்வொரு குழுவும் தமது அறிக்கையைச் சமர்ப்பிக்க சந்தர்ப்பம் வழங்குங்கள்.
- குறைநிரப்புச் செய்து விரிவுபடுத்துவதற்கு முதலில் அதே குழுவினருக்குச் சந்தர்ப்பமளியுங்கள்.

- ஏனைய குழுக்களின் ஆக்கபூர்வமான கருத்துக்களையும் வினவிப் பெறுங்கள்.
- பின்வரும் விடயங்களை மையப்படுத்தி மீளாய்வு செய்யுங்கள்:
    - மனித சிந்தனைக்கு அப்பாற்பட்ட நித்தியனாகிய அல்லாஹ்வின் பேச்சே வஹியாகும்.
    - ஒவ்வொரு சிருஷ்டிக்கும் அதனதன் பண்பு, தொழிற்பாடு ஆகியவற்றுக் கேற்ப வஹி கிடைப்பினும் இறைதூதர்களுக்கு அது மிக உயர்ந்த நிலையில் அல்லாஹ்வின் வேத வாக்காக அருளப்படுகின்றது.
    - மனிதன் யார்? பிரபஞ்சம் மற்றும் அதன் பின்னாலுள்ள இரகசியம் என்ன? அதன் ஆரம்பம், முடிவு எவ்வாறானது? மனித வாழ்வின் இலட்சியம் என்ன? மனிதன் இறுதியில் எங்கு போய் சேரப்போகின்றான் போன்ற வினாக்களுக்கு வஹி மாத்திரமே சரியான பதிலை வழங்க முடியும்.
    - நேரடியாக வஹி அருளப்படல், திரைக்குப் பின்னால் இருந்து வஹி அருளப்படல், ஒரு மலக்கு மூலமாக வஹி அருளப்படல் என வஹி பல்வேறு முறைகளில் அருளப்படுவதுண்டு.
    - வஹி மத்லுவ், வஹி கைரு மத்லுவ் என இரண்டு வகையாக வஹி வகைப்படுத்தப்படுகின்றது.

**தரவிருத்தி உள்ளீடுகள் :**

- பொது அறிவுறுத்தல்களுக்கேற்ப, பொருத்தமானவற்றைப் பயன்படுத்துங்கள்.

**கணிப்பீடு மதிப்பீட்டுக்கான அறிவுறுத்தல்கள் :**

- கற்றல் பேறுகளை அடிப்படையாகக் கொண்டு மதிப்பீட்டு நியமங்களை உருவாக்கிக் கொள்ளுங்கள்.

**குழுத் தேடியாய்வு அறிவுறுத்தல் பத்திரம்:**

**குழு-01** வஹி மூலம் பெறப்படும் அறிவு, புலனறிவு, பகுத்தறிவு என்பவற்றின் மூலம் பெறப்படும் அறிவிலிருந்து எவ்வாறு வேறுபடுகின்றது என்பதை எழுதுங்கள்.

**குழு-02** வஹியின் மூலம் மாத்திரமே சரியான தீர்வு வழங்க முடியும் என்பதை ஆதாரங்களுடன் எழுதுங்கள்.

**குழு-03** வஹி அருளப்பட்டபோது நபி (ஸல்) அவர்களிடம் வெளிப்பட்ட மாற்றங்களை உதாரணங்களுடன் எழுதுங்கள்.

**குழு-04** நபிமார்களுக்கு வஹி அருளப்படும் முறைகளை உதாரணங்களுடன் எழுதுங்கள்.

**வீட்டில் பின்தொடர் செயற்பாடு :**

நபி (ஸல்) அவர்களுக்கு வஹி அருளப்பட்ட முதல் சந்தர்ப்பத்தைப் பெற்றோருடன் பகிர்ந்து கொண்டு பெற்றோரின் கருத்துக்களை எழுத வழிப்படுத்துங்கள்.

**தேர்ச்சி 4.0 : இஸ்லாத்தின் மூலாதாரங்கள் பற்றிய தெளிவான அறிவைப் பெற்று அதனடிப்படையில் வாழ்க்கை முறையை நெறிப்படுத்திக் கொள்வார்.**

**தேர்ச்சி மட்டம் 4.2 : அல்-குர்ஆன் அருளப்பட்டு தொகுக்கப்பட்ட வரலாற்றை விளக்கிக் கூறுவார்.**

**பாடவேளை : 3**

**கற்றல் பேறுகள்:**

- வானுலகிலிருந்து நபி (ஸல்) அவர்கள் வரை அல்குர்ஆன் அருளப்பட்ட படித்தரங்களை அறிந்து கூறுவார்.
- அல்குர்ஆன் நபி (ஸல்) அவர்களுக்கு பகுதி பகுதியாக அருளப்பட்டதற்கான காரணங்களை அறிந்து விளக்குவார்.
- நபி (ஸல்) அவர்கள் காலத்தில் குர்ஆன் பாதுகாக்கப்பட்ட முறையை அறிந்து கூறுவார்.
- அல்குர்ஆன் தொகுப்பில் அபூபக்ர் (ரழி), உஸ்மான் (ரழி) ஆகியோர் காலப்பகுதியில் ஏற்பட்ட மாற்றங்களை, வித்தியாசங்களை அறிந்து கூறுவார்.

**பாடத்தைத் திட்டமிடுவதற்கான அறிவுறுத்தல்கள்:**

படி 1 :
- “நிச்சயமாக நாமே அல்குர்ஆனை இறக்கி வைத்தோம். நாமே அதனைப் பாதுகாப்போம்.” என்ற அல்குர்ஆன் வசனத்தை ஒரு மாணவனைக் கொண்டு வாசிக்கச் செய்து ஏனையவர்களைச் செவிமடுக்கச் செய்யுங்கள்.
- அதுபற்றி வினவிக் கருத்துப் பரிமாறுங்கள்.
- பின்வரும் விடயங்களை மையப்படுத்திக் கலந்துரையாடுங்கள்.
    - அல்-குர்ஆன் பல படித்தரங்களில் அருளப்பட்ட வேதமாகும். அதன் பாதுகாப்பிற்கு அல்லாஹ் உத்தரவாதம் அளித்துள்ளான். அல்குர்ஆன் பல்வேறு வழிமுறைகளில் பாதுகாக்கப்பட்டு வருகின்றது. அது உலக மக்களுக்கு வழிகாட்டுவதற்காக அருளப்பட்டுள்ளது.

படி 2 :
- மாணவர்களை நான்கு குழுக்களாகப் பிரித்து ஒவ்வொரு குழுவுக்கும் குழுத் தேடியாய்வு அறிவுறுத்தல் பத்திரத்தை வழங்குங்கள்.
- கலந்துரையாடிக் கருத்துக்களை வெளிப்படுத்த நெறிப்படுத்துங்கள்.
- மாணவர்களின் குழுச் செயற்பாட்டை அவதானித்து உறுதிப்படுத்துங்கள்.

படி 3 :
- ஒவ்வொரு குழுவும் தாம் கலந்துரையாடியவற்றை சமர்ப்பிக்க சந்தர்ப்பம் வழங்குங்கள்.
- குறைநிரப்புச் செய்து விரிவுபடுத்துவதற்கு முதலில் அதே குழுவினருக்குச் சந்தர்ப்பமளியுங்கள்.
- ஏனைய குழுக்களின் ஆக்கபூர்வமான கருத்துக்களையும் வினவிப் பெறுங்கள்.
    - பின்வரும் விடயங்களை உள்ளடக்கி கலந்துரையாடுங்கள்:

- அல்குர்ஆன் லவ்ஹுல் மஹ்பூழில் முழுமையாகப் பதியப்பட்டது. லவ்ஹுல் மஹ்பூழிலிருந்து கீழ்வானத்திற்கு முழுமையாக இறக்கி வைக்கப்பட்டது.

- கி.பி. 610 ஆம் ஆண்டு முதல் முஹம்மத் (ஸல்) அவர்களுக்கு 23 வருட காலமாக அது அருளப்பட்டு பூரணப்படுத்தப்பட்டது.
- அல்குர்ஆன் நபி (ஸல்) அவர்களுக்கு பகுதி பகுதியாகவே அருளப்பட்டது.
- அல்குர்ஆன் நபி (ஸல்) காலத்தில் மனனம், எழுதுதல் மூலம் பாதுகாக்கப்பட்டது.
- அபூபக்ர் (ரழி) காலத்தில் நூலுருப்படுத்திப் பாதுகாக்கப்பட்டது.
- உஸ்மான் (ரழி) காலத்தில் ஓதுவதில் மக்களை ஒன்றுதிரட்டியும் பல பிரதிகளாக பிரதி பண்ணியும் பாதுகாக்கப்பட்டது.
- அல்குர்ஆன், பொதுவாக எல்லாக் காலங்களிலும் மனனமிடப்பட்டும், எழுதப்பட்டும், வாழ்வில் நடைமுறைப்படுத்தப்பட்டும் பாதுகாக்கப்பட்டு வருகின்றது.

**தரவிருத்தி உள்ளீடுகள் :**

- பொது அறிவுறுத்தல்களுக்கேற்ப, பொருத்தமானவற்றைப் பயன்படுத்துங்கள்.

**கணிப்பீடு மதிப்பீட்டுக்கான அறிவுறுத்தல்கள் :**

- கற்றல் பேறுகளை அடிப்படையாகக் கொண்டு மதிப்பீட்டு நியமங்களை உருவாக்கிக் கொள்ளுங்கள்.

**குழுத்தேடியாய்வு அறிவுறுத்தல் பத்திரம்:**

**குழு-01** அல்குர்ஆன் அருளப்பட்ட படித்தரங்களை அறிந்து எழுதுங்கள்.

**குழு-02** நபி (ஸல்) அவர்கள் காலத்தில் குர்ஆனைப் பாதுகாப்பதற்கு மேற்கொள்ளப்பட்ட முயற்சிகளைத் தொகுத்து எழுதுங்கள்.

**குழு-03** அபூபக்ர் (ரழி) காலப்பகுதியில் அல்குர்ஆனை நூலுருப்படுத்த வேண்டிய தேவை ஏற்பட்டமைக்கான காரணங்களைத் தொகுத்து எழுதுங்கள்.

**குழு-04** உஸ்மான் (ரழி) காலப்பகுதியில் மக்களை குர்ஆன் ஓதுவதில் ஒன்றுபடுத்த வேண்டிய தேவை ஏற்பட்டமைக்கான காரணங்களைக் கலந்துரையாடி எழுதுங்கள்.

**வீட்டில் பின்தொடர் செயற்பாடு :**

வீட்டிலுள்ள அல்குர்ஆன் பிரதியின் பதிப்புத் தொடர்பான தகவல்களைத் திரட்டி அவற்றைப் பதிந்துகொள்ள ஆலோசனை வழங்குங்கள்.

**தேர்ச்சி 4.0 : இஸ்லாத்தின் மூலாதாரங்கள் பற்றிய தெளிவான அறிவைப்பெற்று அதனடிப்படையில் வாழ்க்கை முறையை நெறிப்படுத்திக் கொள்வார்.**

**தேர்ச்சி மட்டம் 4.3 : ஸுன்னாவின் முக்கியத்துவத்தை விளங்கி ஆதாரங்களுடன் முன்வைப்பார்.**

**பாடவேளை : 2**

**கற்றல் பேறுகள்:**

- ஸுன்னாவை அறிந்து அதன் அவசியத்தை ஆதாரங்களோடு முன்வைப்பார்.
- இஸ்லாத்தை அமுல்படுத்த ஸுன்னா அவசியம் என்பதை ஏற்றுக் கொள்வார்.
- ஸுன்னாவின் முக்கியத்துவத்தை உணர்ந்து வாழ்வில் கடைப்பிடிப்பார்.
- அல்குர்ஆனுக்கும், அஸ்ஸுன்னாவுக்குமிடையிலான தொடர்புகளை எடுத்துக் காட்டுவார்.

**பாடத்தைத் திட்டமிடுவதற்கான அறிவுறுத்தல்கள்:**

படி 1 :
- “நபியே நீர் கூறும் : நீங்கள் அல்லாஹ்வை நேசிப்பீர்களானால், என்னைப் பின்பற்றுங்கள், அல்லாஹ் உங்களை நேசிப்பான், உங்கள் பாவங்களை மன்னிப்பான், மேலும், அல்லாஹ் மன்னிப்பவனாகவும் மிக்க கருணையுடையவனாகவும் இருக்கிறான்.” (3:31)

  என்ற அல்குர்ஆன் வசனத்தை ஒரு மாணவனைக் கொண்டு வாசிக்கச் செய்யுங்கள். ஏனையோரை செவிமடுக்கச் செய்யுங்கள். அதுபற்றிக் கேட்டு கருத்துப் பரிமாறுங்கள்.
- பின்வரும் விடயங்களை மையப்படுத்திக் கலந்துரையாடுங்கள்.
  - இஸ்லாத்தின் அடிப்படை மூலாதாரங்களில் ஸுன்னாவும் ஒன்றாகும்.
  - ஸுன்னா என்பது நபி (ஸல்) அவர்களது வாழ்க்கை வழிமுறையாகும். அல்குர்ஆனும் ஸுன்னாவும் ஸுன்னாவின் முக்கியத்துவத்தை எடுத்துக் கூறுகின்றன.
  - ஸுன்னாவின் தேவை, அதன் முக்கியத்துவத்தை மேலும் வலியுறுத்துகின்றது.
  - ஸஹாபாக்கள், தாபிஈன்கள், தபஉத்தாபிஈன்கள், இமாம்கள் இது விடயத்தில் காட்டிய ஈடுபாடுகளும் அதன் முக்கியத்துவத்தைக் காட்டுகின்றன.

படி 2 :
- மாணவர்களை நான்கு குழுக்களாகப் பிரித்து ஒவ்வொரு குழுவுக்கும் குழுத் தேடியாய்வு அறிவுறுத்தல் பத்திரத்தை வழங்குங்கள். கலந்துரையாடிக் கருத்துக்களை வெளிப்படுத்த நெறிப்படுத்துங்கள்.
- மாணவர்களின் குழுச் செயற்பாட்டை அவதானித்து உறுதிப்படுத்துங்கள்.

படி 3 :
- ஒவ்வொரு குழுவுக்கும் தமது அறிக்கையை சமர்ப்பிக்கச் சந்தர்ப்பம் வழங்குங்கள். குறைநிரப்புச் செய்து விரிவுபடுத்துவதற்கு முதலில் அதே குழுவுக்குச் சந்தர்ப்பம் வழங்குங்கள்.
- ஏனைய குழுக்களின் ஆக்கபூர்வமான கருத்துக்களை வினவிப் பெறுங்கள்.
- பின்வரும் விடயங்களை மையப்படுத்திக் கலந்துரையாடுங்கள்:

- நபி (ஸல்) அவர்களது சொல், செயல், அங்கீகாரம், அவரது பண்புகள், வர்ணனைகள் என்பன ஸுன்னா, ஹதீஸ் எனும் பதங்களால் குறிக்கப்படுகின்றன.
- ஸுன்னாவின் முக்கித்துவத்தை குர்ஆன் கூறுகின்றது. ''(நம்முடைய) தூதர் உங்களுக்கு கொடுத்ததை நீங்கள் (மனமொப்பி) எடுத்துக் கொள்ளுங்கள். அவர் எதனை உங்களுக்குத் தடுத்துக் கொண்டாரோ அதிலிருந்து நீங்கள் விலகிக் கொள்ளுங்கள்'' (59:7)
- சுன்னாவின் முக்கியத்துவத்தை ஸுன்னா கூறுகின்றது. ''நான் உங்களிடத்தில் இரண்டு விடயங்களை விட்டுச் செல்கின்றேன். அவ்விரண்டையும் நீங்கள் பின்பற்றியொழுகும் காலமெல்லாம் வழி தவறமாட்டீர்கள். அவை அல்குர்ஆனும் எனது வழிமுறையான ஸுன்னாவுமாகும்.'' (முவத்தா)
- அல்குர்ஆனைப் புரிந்து கொள்ள ஸுன்னா அவசியப்படுவதால் அது முக்கியத்துவமடைகின்றது. உதாரணம்: தொழும்படி அல்குர்ஆன் கூறுகிறது. தொழும் முறையை ஸுன்னா எடுத்துக் காட்டுகிறது.
- ஸஹாபாக்கள் ஹதீஸ்களை கற்க, பாதுகாக்க, பரப்ப, பின்பற்ற காட்டிய ஈடுபாடும் ஆர்வமும் ஹதீஸின் முக்கியத்துவத்தை எடுத்துக் காட்டுகின்றது.
- இமாம்கள் ஹதீஸ்களைத் திரட்டி, தொகுத்து நூலுருப்படுத்துவதற்கு மேற்கொண்ட முயற்சிகளும், ஹதீஸின் தூய்மையைப் பாதுகாக்க மேற்கொண்ட முயற்சிகளும் ஸுன்னாவின் முக்கித்துவத்தை எடுத்துக் காட்டுகின்றது.
- இஸ்லாமிய வாழ்க்கை முறைக்கான செயல்வடிவத்தை ஸுன்னா காட்டித்தருகின்றது என்ற வகையில் முக்கியத்துவமடைகின்றது.

**தரவிருத்தி உள்ளீடுகள் :**

- பொது அறிவுறுத்தல்களுக்கேற்ப, பொருத்தமானவற்றைப் பயன்படுத்துங்கள்.

**கணிப்பீடு மதிப்பீட்டுக்கான அறிவுறுத்தல்கள் :**

- கற்றல் பேறுகளை அடிப்படையாகக் கொண்டு மதிப்பீட்டு நியமங்களை உருவாக்கிக் கொள்ளுங்கள்.

**குழுத் தேடியாய்வு அறிவுறுத்தல் பத்திரம்:**

**குழு-01:** ஹதீஸின் முக்கியத்துவத்தை கூறும் இரண்டு குர்ஆன் வசனங்களை எழுதுங்கள்.

**குழு-02:** ஹதீஸின் முக்கியத்துவத்தைக் கூறும் இரண்டு ஹதீஸ்களை எழுதுங்கள்.

**குழு-03:** அல்குர்ஆனை விளங்கிக்கொள்ள ஸுன்னா பயன்படும் முறைக்கு இரண்டு உதாரணங்களைத் தேடி எழுதுங்கள்.

**குழு-04:** இஸ்லாமிய வாழ்வு முறையின் செயல்வடிவத்திற்கு ஹதீஸ் அவசியம் என்பதற்கு இரண்டு உதாரணங்களை எழுதுங்கள்.

**வீட்டில் பின்தொடர் செயற்பாடு :**

தமது அன்றாட நடவடிக்கையின் போது ஹதீஸ் ஆதாரங்களைத் தேடிய சந்தர்ப்பங்களைப் பெற்றோருடன் கலந்துரையாடி அவற்றை பதிந்து கொள்ள வழிப்படுத்துங்கள்.

**தேர்ச்சி 4.0 :** **இஸ்லாத்தின் மூலாதாரங்கள் பற்றிய தெளிவான அறிவைப்பெற்று அதனடிப்படையில் வாழ்க்கை முறையை நெறிப்படுத்திக் கொள்வார்.**

**தேர்ச்சி மட்டம் 4.4 :** **துணை மூலாதாரங்களான இஜ்மா, கியாஸின் பயன்பாட்டை விளக்கிக் கூறுவார்.**

**பாடவேளை :** 2

**கற்றல் பேறுகள் :**

- நவீன பிரச்சினைகளைத் தீர்ப்பதற்கு இஜ்திஹாத் தேவைப்படுகிறது என்பதை அறிந்து கூறுவார்.
- இஜ்திஹாத் செயற்பாட்டினூடாகவே இஜ்மா, கியாஸ் தோன்றின என்பதை விளக்கிக் கூறுவார்.
- இஜ்மா, கியாஸ் அடிப்படையில் பெறப்பட்ட தீர்வுகளை அறிந்து ஏனையோருக்கு எடுத்துக் கூறுவார்.
- இஜ்மா, கியாஸின் முக்கித்துவத்தை உணர்ந்து வாழ்வில் கடைப்பிடிப்பார்.
- இஜ்மாவுக்கும் கியாஸுக்குமிடையிலான வேறுபாடுகளை எடுத்துக் காட்டுவார்.

**பாடத்தைத் திட்டமிடுவதற்கான அறிவுறுத்தல்கள்:**

படி 1 :

- நவீன காலத்தில் தோன்றுகின்ற சில பிரச்சினைகளை மாணவர்களிடத்தில் வினவி அவை பற்றிய குர்ஆன், ஹதீஸ் என்பவற்றின் நிலைப்பாடுகளை எவ்வாறு அறிந்து கொள்வது என்ற வினாவை எழுப்பி மாணவர்களிடத்தில் வினவி சிந்தனைக் கிளறலை ஏற்படுத்தி மாணவர்களை கவனயீர்ப்புச் செய்யுங்கள்
- பின்வரும் அம்சங்களை வெளிக்கொணரும் விதமாக அவர்களுடன் கலந்துரையாடுங்கள்
  - இஜ்மாவும் கியாஸும் இஜ்திஹாத் மூலம் பெறப்பட்ட மூலாதாரங்களாகும். குர்ஆன், ஸுன்னாவின் அடிப்படைகளை வைத்தே இவை பெறப்படுகின்றன.
  - இஜ்மா என்பது முஜ்தஹிதுகள் ஏகோபித்துக் கூறிய தீர்ப்புகளாகும்.
  - கியாஸ் என்பது சட்டம் குறிப்பிடப்பட்ட ஒரு விடயத்தை சட்டம் குறிப்பிடப்படாத ஒரு விடயத்துடன் பொதுத் தன்மையைக் கருத்திற்கொண்டு இணைத்துவிடலைக் குறிக்கின்றது.
  - நவீன பிரச்சினைகளைத் தீர்ப்பதற்கு துணை மூலாதாரங்கள் உதவுகின்றன.

படி 2 :

- மாணவர்களை நான்கு குழுக்களாகப் பிரித்து ஒவ்வொரு குழுவுக்கும் குழுத் தேடியாய்வு அறிவுறுத்தல் பத்திரத்தை வழங்குங்கள். கலந்துரையாடிக் கருத்துக்களை வெளிப்படுத்த நெறிப்படுத்துங்கள்.
- மாணவர்களின் குழுச் செயற்பாட்டை அவதானித்து உறுதிப்படுத்துங்கள்.

படி 3 :

- ஒவ்வொரு குழுவும் தாம் கலந்துரையாடியவற்றைச் சமர்ப்பிக்கச் சந்தர்ப்பம் வழங்குங்கள்.

- மேலதிகமான விடயங்களையும் தொடர்புபட்ட ஏனைய விடயங்களையும் அடுத்த குழுக்களிடமிருந்து பெற்றுக்கொள்ளுங்கள்.
- பின்வரும் விடயங்களை மையப்படுத்திக் கலந்துரையாடுங்கள்.
  - அல்குர்ஆனும் ஸுன்னாவும் திட்டமாக தீர்வு கூறாத பிரச்சினைகளுக்கு இஜ்திஹாதின் மூலம் தீர்வுகள் பெறப்படுகின்றன.
  - அல்குர்ஆனின் (14:115) (2:143) (4:83) போன்ற வசனங்களும் "எனது சமுகத்தினர் தவறான விடயங்களில் ஒன்றுபடமாட்டார்கள்" (திர்மிதி) என்ற ஹதீஸும் இஜ்மாவுக்கு ஆதாரமாக உள்ளன.
  - அல்குர்ஆனின் (47:10) (45:21) (38:28) (39:9) போன்ற வசனங்களும் அல்லாஹ்வுக்கு நிறைவேற்ற வேண்டிய கடனை உலகக் கடனுக்கு ஒப்பிட்டு நபி (ஸல்) அவர்கள் கூறிய ஹதீஸும் கியாஸை அங்கீகரிக்கின்றன.
  - கியாஸ் இடம்பெறுவதற்கு அஸ்ல், பரஉ, இல்லத், ஹுகும் எனும் நான்கு ருகூன்கள் உள்ளன.
  - இஜ்மா கூட்டுமுயற்சியாகவே அமையும், கியாஸ் கூட்டாகவும் தனியாகவும் இடம்பெற முடியும்.
  - இஜ்மா ஸரீஹ், இஜ்மா ஸுகூத்தி என இஜ்மா இரண்டு வகையாக நோக்கப்படுகிறது.
  - கியாஸ் அவ்லா, முஸாவி, அத்னா என மூன்று வகைகளாக பிரித்து நோக்கப்படுகின்றது.
  - மஸ்லஹா முர்ஸலா, உர்பு, இஸ்திஸ்ஹாப், இஸ்திஹ்ஸான், கவ்லுஸ் ஸஹாபி, ஷராஇ, ஸாபிகா என வேறு பல துணை மூலாதாரங்களும் காணப்படுகின்றன.

**தரவிருத்தி உள்ளீடுகள் :**

- பொது அறிவுறுத்தல்களுக்கேற்ப, பொருத்தமானவற்றைப் பயன்படுத்துங்கள்.

**கணிப்பீடு மதிப்பீட்டுக்கான அறிவுறுத்தல்கள் :**

- கற்றல் பேறுகளை அடிப்படையாகக் கொண்டு மதிப்பீட்டு நியமங்களை உருவாக்கிக் கொள்ளுங்கள்.

## குழுச் செயற்பாட்டின் அறிவுறுத்தல்கள்

**குழு-01** இஜ்மாவுக்குரிய வரைவிலக்கணத்தைக் குறிப்பிட்டு அதற்குரிய குர்ஆன், ஹதீஸ் ஆதாரங்கள் ஒவ்வொன்றை எழுதுங்கள்.

**குழு-02** கியாஸுக்குரிய வரைவிலக்கணத்தைக் குறிப்பிட்டு அதற்குரிய குர்ஆன், ஹதீஸ் ஆதாரங்கள் ஒவ்வொன்றை எழுதுங்கள்.

**குழு-03** கியாஸின் ருகுன்களைக் குறிப்பிடுங்கள்.

**குழு-04** இஜ்மா, கியாஸ் மூலம் பெறப்பட்ட முடிவுகளுக்கு இவ்விரண்டு உதாரணங்கள் தருக.

**வீட்டில் பின்தொடர் செயற்பாடு :**

இஜ்மா அல்லது கியாஸின் மூலம் பெறப்பட்ட மார்க்க தீர்ப்புகளை பெற்றோரின் உதவியுடன் தொகுக்க வழிப்படுத்துங்கள்.

**தேர்ச்சி 5.0 : நபி (ஸல்) அவர்களதும் குலபாஉர் ராஷிதீன்களதும் வாழ்க்கை முறையை விளங்குவதோடு இலங்கை முஸ்லிம்களின் வரலாற்றையும் அவர்களின் தேசிய பங்களிப்புக்களையும் விரிவாக விளங்கி மற்றவர்களுக்கு எடுத்துக் கூறுவார்.**

**தேர்ச்சி மட்டம் 5.1 : இஸ்லாத்துக்கு முற்பட்ட கால சமூகத்தின் வரலாற்றை விளக்கிக் கூறுவார்.**

**பாடவேளை : 2**

**கற்றல் பேறுகள்:**

- இஸ்லாத்துக்கு முந்திய அறபு நாட்டின் சமூக நிலையை எடுத்துக் கூறுவார்.
- இஸ்லாத்துக்கு முந்திய அறபு நாட்டின் சமய நிலையை பிந்திய நிலையோடு ஒப்பிட்டுக் கூறுவார்.
- இஸ்லாத்துக்கு முந்திய அறபு நாட்டின் குடும்ப அமைப்பை இஸ்லாத்துடன் ஒப்பிட்டுக் கூறுவார்.
- இஸ்லாத்துக்கு முந்திய அறபு நாட்டில் வழங்கிய அறபு மொழி பற்றி உரையாற்றுவார்.

**பாடத்தைத் திட்டமிடுவதற்கான அறிவுறுத்தல்கள்:**

**படி 1** :

- மனிதர்களே, உங்கள் அனைவரையும் நிச்சயமாக ஒரே ஆண், ஒரே பெண்ணிலிருந்துதான் படைத்தோம். பின்னர் ஒருவர் மற்றவரை அறிந்து கொள்ளும் பொருட்டு உங்களைக் கிளைகளாகவும் கோத்திரங்களாகவும் ஆக்கினோம். (ஆதலால் உங்களிலொருவர் மற்றொருவரை விட மேலானவர் என்று பெருமை பாராட்டிக் கொள்வதற்கில்லை) எனினும் உங்களில் எவர் இறையச்சமுடையவராக இருக்கின்றாரோ அவர்தான் அல்லாஹ்விடத்தில் நிச்சயமாக கண்ணியமானவர். நிச்சயமாக அல்லாஹ் (அனைத்தையும்) நன்கறிந்தவனாகவும் நன்கு தெரிந்தவனாகவும் இருக்கிறான். (49:13) என்ற அல்குர்ஆன் வசனத்தையும், அதன் பொருளையும் தாமாக முன்வரும் மாணவனைக் கொண்டு வாசிக்கச் செய்யுங்கள். ஏனையோரைச் செவிமடுக்க வழிப்படுத்துங்கள்.
- பின்வரும் விடயங்களை மையப்படுத்திக் கலந்துரையாடுங்கள்:
    - இஸ்லாத்துக்கு முற்பட்ட காலம் ஜாஹிலிய்யாக் காலம் எனப்படுகிறது.
    - ஜாஹிலிய்யாக் கால மக்கள் நீண்ட காலமாக நுபுவ்வத் கிடைக்காத நிலையில் வாழ்ந்தனர்.
    - அவர்களில் பெரும்பாலானோர் எழுத வாசிக்கத் தெரியாத உம்மிகளாக இருந்தனர்.
    - அவர்களின் தனிப்பட்ட, குடும்ப, சமூக நிலைகளில் அறியாமை பிரதிபலித்தது.

- க.்.பா இருந்தபோதும், இப்றாஹிம் (அலை) அவர்கள் நினைவுறுத்தப்பட்டபோதும் இஸ்லாமிய அடிப்படை காணப்படவில்லை.

படி 2 :
- மாணவர்களை நான்கு குழுக்களாகப் பிரித்து ஒவ்வொரு குழுவுக்கும் குழுத் தேடியாய்வு அறிவுறுத்தல் பத்திரத்தை வழங்குங்கள்.
- கலந்துரையாடிக் கருத்துக்களை வெளிப்படுத்த நெறிப்படுத்துங்கள்.
- மாணவர்களின் குழுச் செயற்பாட்டை அவதானித்து உறுதிப்படுத்துங்கள்.

படி 3 :
- ஒவ்வொரு குழுவுக்கும் குழுச் செயற்பாடுகளை முன்வைக்கச் சந்தர்ப்பமளியுங்கள்.
- குழுவின் ஏனைய உறுப்பினர்களின் கருத்துக்களை முன்வைக்க வாய்ப்பளியுங்கள்.
- ஏனைய குழுக்களின் போஷிக்கத்தக்க கருத்துக்களை முன்வைக்க வாய்ப்பளியுங்கள். குறை நிரப்புச் செய்து வழிகாட்டுங்கள்.
- பின்வரும் விடயங்களை மையப்படுத்திக் கலந்துரையாடுங்கள்:
  - இஸ்லாத்துக்கு முந்திய அறபுச் சமூகம் கோத்திரங்களாகப் பிரிந்திருந்தது. ஷெய்குமார் கோத்திரங்களுக்கு தலைமை தாங்கி வழி நடாத்தினர்.
  - கோத்திரங்களுக்கிடையில் தொடரான போராட்டங்கள், யுத்தங்கள் இடம்பெற்றன.
  - சுதந்திர வேட்கை, எளிமை, வீரம், வாக்குமீறாமை, விருந்தோம்பல் போன்ற நற்பண்புகளும் அவர்களிடம் காணப்பட்டன.
  - சூது, வட்டி, வழிப்பறி, விபசாரம், மதுஅருந்துதல், மூடநம்பிக்கைகள் என துர்நடத்தைகளும் மலிந்திருந்தன.
  - அவர்கள் குறிப்பிட்ட சமயம் எதனையும் பின்பற்றவில்லை. சிலை வணக்கம், க.்.பாவை தரிசித்தல் போன்ற சடங்குகள் மட்டுமே காணப்பட்டன. யூத, கிறிஸ்தவ, மஜூஸிய மக்கள் அரபு நாட்டின் எல்லைப் பிரதேசங்களில் குறைவாக வாழ்ந்தனர்.
  - அரேபியரிடம் மொழிப்பற்று காணப்பட்டது. கவிஞர்களுக்கு உயர் அந்தஸ்து வழங்கப்பட்டது.
  - பெரும்பாலும் பெண்கள் உரிமையிழந்த நிலையில் அடங்கி வாழ்ந்தனர்.
  - குடும்ப அமைப்பிற்கான எந்த ஒழுங்குகளும் காணப்படவில்லை. பல்வேறுபட்ட ஒழுங்கற்ற மணமுறைகள் காணப்பட்டன.
  - பெரும்பாலும் மந்தை மேய்த்தே வாழ்வு நடாத்தினர். மக்காவில் வியாபாரிகள் காணப்பட்டனர்.

**தரவிருத்தி உள்ளீடுகள் :**

- பொது அறிவுறுத்தல்களுக்கேற்ப, பொருத்தமானவற்றைப் பயன்படுத்துங்கள்.

**கணிப்பீடு மதிப்பீட்டுக்கான அறிவுறுத்தல்கள் :**

- கற்றல் பேறுகளை அடிப்படையாகக் கொண்டு மதிப்பீட்டு நியமங்களை உருவாக்கிக் கொள்ளுங்கள்.

**குழுத்தேடியாய்வு அறிவுறுத்தல் பத்திரம்:**

**குழு-01** இஸ்லாத்துக்கு முற்பட்ட கால அறபு நாட்டின் சமய நிலையை நூல்கள் மூலம் அறிந்து முக்கிய அம்சங்களைப் பட்டியற்படுத்துங்கள்.

**குழு-02** இஸ்லாத்துக்கு முற்பட்ட காலத்தில் அறபு நாட்டின் குடும்ப நிலையை இஸ்லாமிய குடும்ப அமைப்போடு ஒப்பிட்டு அட்டவணை ஒன்றைத் தயாரியுங்கள்.

**குழு-03** இஸ்லாத்துக்கு முற்பட்ட காலத்தில் அறபு மொழிக்கு வழங்கப்பட்ட முக்கியத்துவத்தை இஸ்லாத்துக்கு பின்னர் வழங்கப்பட்ட முக்கித்துவத்துடன் ஒப்பிட்டு அறிக்கை தயாரியுங்கள்.

**குழு-04** இஸ்லாத்துக்கு முற்பட்ட கால அறபு நாட்டின் கோத்திர அமைப்பின் சமூக செல்வாக்கை விளக்கும் அம்சங்களைப் பட்டியலிடுங்கள்.

**வீட்டில் பின்தொடர் செயற்பாடு :**

இன்றைய குடும்ப சமூக வாழ்வில் நிகழ்கின்ற ஜாஹிலிய்யா பண்புகள் சிலவற்றை பெற்றோரிடம் கேட்டறிந்து எழுதிக்கொள்ள ஆலோசனை வழங்குங்கள்.

**தேர்ச்சி 5.0 : நபி (ஸல்) அவர்களதும் குலபாஉர்ராஷிதீன்களதும் வாழ்க்கை முறையை விளங்குவதோடு இலங்கை முஸ்லிம்களின் வரலாற்றையும் அவர்களின் தேசிய பங்களிப்புக்களையும் விரிவாக விளங்கி மற்றவர்களுக்கு எடுத்துக் கூறுவார்.**

**தேர்ச்சி மட்டம் 5.2 : இஸ்லாத்தின் வருகையால் ஏற்பட்ட சமூக மாற்றத்தை எடுத்துக் காட்டுவார்.**

**பாடவேளை : 2**

- சமூக மாற்றம் இன்றியமையாதது என்பதை உணர்ந்து கூறுவார்.
- சமூக மாற்றம் இடம்பெறும் வழிமுறைகளை எடுத்துக்காட்டுவார்.
- இஸ்லாம் எவ்வாறு சமூக மாற்றத்தை ஏற்படுத்தியது என்பதை பட்டியல்படுத்துவார்.

**பாடத்தைத் திட்டமிடுவதற்கான அறிவுறுத்தல்கள்:**

**படி 1** :

- இஸ்லாத்தின் ஏற்புடன் தமது சமூக நடவடிக்கைகளிலும், உறவுகளிலும் சட்ட வரம்புகளுக்குட்படாத போக்குகளிலிருந்து அராபியர் மாற்றமுறவேண்டியதாயிற்று. ஷரீஆவின் வரம்புகளுக்குட்பட்டனவாக அவர்களுடைய வாழ்வின் அனைத்து அம்சங்களும் மாற்றியடைக்கப்பட வேண்டுவனவாயின. ஒழுக்க நெறிகள், பழக்க வழக்கங்கள், உறக்கமும் துயிலெழுதலும், உண்ணலும் அருந்துதலும், திருமணமும் மணவிலக்கும், வாங்கலும் விற்றலும் இத்தியாதி அனைத்துமே.

  மனிதர்களைக் கட்டுப்படுத்துவன அவர்களது பழக்கவழக்கங்களே. பழைய பழக்க வழக்கங்களை கைவிட்டு விடுவதும், புதிய பழக்கவழக்கங்களைக் கைக்கொள்வதும் இலகுவான கருமங்களல்ல. என்றாலும் இஸ்லாத்தை ஏற்றுக் கொண்டவர்களின் இதயத்துள் இஸ்லாம் ஏற்படுத்தி வைத்த மகோன்னதமான தாக்கங்களின் காரணமாக இஸ்லாத்துக்கு முந்திய அத்தனை தன்மைகளும் களைந்து விடுதலும், இஸ்லாமிய நெறியை அதன் அனைத்துப் பெறுமானங்களுடனும் ஏற்றுக் கொள்வதும் அவர்களுக்குச் சிரமமான கருமங்களாக இருக்கவில்லை. ஏக இறையோனை மட்டுமே வணங்கும் நெறியின் பாற்பட்ட அவர்கள் தமது சமூக, பொருளாதார நடவடிக்கைகள் அனைத்தையும் இறைவன் விதி செய்த பிரமாணங்களின்படியே கொண்டு நடத்தலானார்கள். ஏனெனில் இஸ்லாத்தில் வணக்கம் என்பது அனைத்துக் கருமங்களும் இறைவனுக்காக ஆற்றப்படுவதாக அமைவதையே குறித்தது.

  (மூலம் : இறைதூதர் காலத்து மதீனா சமூகம்)

  மேலுள்ள உரைப் பகுதியை ஒரு மாணவர் மூலம் உரத்து வாசிக்கச் செய்து ஏனைய மாணவர் செவிமடுக்க சந்தர்ப்பமளியுங்கள்.

- பின்வரும் விடயங்களை மையப்படுத்திக் கலந்துரையாடுங்கள்:
  - இஸ்லாம் அறிமுகமாகும்போது அறபு நாட்டில் ஒழுங்கமைக்கப்பட்ட ஒரு சமூக அமைப்புக் காணப்படவில்லை.

- கோத்திர அமைப்பிலான பிளவுற்ற சமூகக் குழுக்களே காணப்பட்டன.
- நபித்துவ வழிகாட்டல்களோ சீர்திருத்தப் பணிகளோ இடம் பெற்றிருக்கவில்லை.
- ஜாஹிலிய்யாப் பண்புகளே பெரும்பாலான மக்களிடம் உறைந்துபோய் காணப்பட்டன.
- இவற்றைக் களைவதற்காக இறைவழிகாட்டல் தேவைப்பட்டிருந்தது
- முஹம்மத் (ஸல்) அவர்களின் வருகை அந்தப் பணியை ஆரம்பித்தது.

படி 2 :

- மாணவர்களை நான்கு குழுக்களாகப் பிரித்து ஒவ்வொரு குழுவுக்கும் குழுத் தேடியாய்வு அறிவுறுத்தல் பத்திரத்தை வழங்குங்கள்.
- கலந்துரையாடிக் கருத்துக்களை வெளிப்படுத்த நெறிப்படுத்துங்கள்.
- மாணவர்களின் குழுச் செயற்பாட்டை அவதானித்து உறுதிப்படுத்துங்கள்.

படி 3 :

- ஒவ்வொரு குழுவுக்கும் குழுச்செயற்பாடுகளை முன்வைக்கச் சந்தர்ப்பமளியுங்கள்.
- ஏனைய குழுக்களுக்கும் தமது போஷிக்கத்தக்க கருத்துக்களை முன்வைக்க வாய்ப்பளியுங்கள்.
- குறை நிரப்புச் செய்து வழிகாட்டுங்கள்.
- பின்வரும் விடயங்களை மையப்படுத்திக் கலந்துரையாடுங்கள்:
  - நபி (ஸல்) அவர்கள் முதலில் தனிநபர்களை மாற்றத்துக்குட் படுத்தினார்கள்.
  - நம்பிக்கை, நன்னடத்தை, சமூக அபிமானம் கொண்ட தனிநபர்கள் உருவானார்கள்.
  - மக்கா சூழல் இஸ்லாம் எதிர்பார்க்கும் சமூகக் கட்டமைப்புக்கு சாதகமாக அமையாததால் மதீனாவுக்கு ஹிஜ்ரத் சென்றார்கள்.
  - அது சமூக மாற்றத்திற்கு வாய்ப்பான களமாக அமைந்தது.
  - விவசாய சமூகம், முஹாஜிரீன்களின் வருகை, யூத சமூகம், மதீனா மக்களின் பண்புகள் சமூக மாற்றத்துக்குச் சாதகமாக அமைந்தன.
  - நம்பிக்கைக் கோட்பாட்டின் அடிப்படையில் சமூக மாற்றம் படிப்படியாகக் கட்டியெழுப்பப்பட்டது.
  - சமூக மாற்றத்திற்கு வஹி வழிகாட்டியது.
  - தலைமைத்துவத்திற்கு கட்டுப்படல், சுதந்திரம், சமத்துவம், சகோதரத்துவம் என்பன மஸ்ஜிதின் மூலமாக செயன்முறையில் காண்பிக்கப்பட்டு சமூக மாற்றத்திற்கு வழிகோலப்பட்டது.

- கோத்திர உறவுக்கு அப்பால் கொள்கை உறவின் மூலம் சமூக மாற்றம் எதிர்பார்க்கப்பட்டது.
- சமூகக் கடமைகளும், வஹிமூலம் கிடைக்கப்பெற்ற ஏவல் விலக்கல்களும் சமூக மாற்றத்தை ஏற்படுத்தின.
- அரசுக்கூடாக திட்டமிடப்பட்டும், நடைமுறைப்படுத்தப்பட்டும், மேற்பார்வை செய்யப்பட்டும் சமூக மாற்றம் நிலைநிறுத்தப்பட்டது.

**தரவிருத்தி உள்ளீடுகள் :**

- பொது அறிவுறுத்தல்களுக்கேற்ப, பொருத்தமானவற்றைப் பயன்படுத்துங்கள்.

**கணிப்பீடு மதிப்பீட்டுக்கான அறிவுறுத்தல்கள் :**

- கற்றல் பேறுகளை அடிப்படையாகக் கொண்டு மதிப்பீட்டு நியமங்களை உருவாக்கிக் கொள்ளுங்கள்.

**குழுத் தேடியாய்வு அறிவுறுத்தல் பத்திரம்:**

**குழு-01** இஸ்லாம் சமூக மாற்றத்தை ஏற்படுத்துமுன், அறபு நாட்டில் காணப்பட்ட சமூக நிலையை சுருக்கமாக எடுத்துக் காட்டும் வகையில் ஒரு நாடகத்தைத் தயாரியுங்கள்.

**குழு-02** மக்காவில் சமூக மாற்றம் எவ்வாறு இடம்பெற்றது என்பதை தனிநபர்களை மையப்படுத்தி உதாரணங்களுடன் எழுதிக் காட்சிப்படுத்துங்கள்

**குழு-03** மதீனாவில் சமூக மாற்றம் இடம்பெற்ற முறையினை அல்குர்ஆன் ஆயத்துக்களினூடாக பட்டியற்படுத்துங்கள்.

**குழு-04** உமது பிரதேசத்தில் சமூக மாற்றம் இடம்பெற வேண்டுமா என்பதற்கான காரணங்களைப் பத்திரிகைச் செய்திகளை ஆதாரமாக எடுத்துக் காட்டி ஒரு கையேட்டைத் தயாரியுங்கள்.

**வீட்டில் பின்தொடர் செயற்பாடு :**

வீட்டுச் சூழலை இஸ்லாமிய பண்பாடுகளுடையதாக மற்றுவதற்கு ஒரு செயற்றிட்டத்தை திட்டமிட்டு அதனை நடைமுறைப்படுத்த வழிப்படுத்துங்கள்.

**தேர்ச்சி 5.0 : நபி (ஸல்) அவர்களதும் குலபாஉர்ராஷிதீன்களதும் வாழ்க்கை முறையை விளங்குவதோடு இலங்கை முஸ்லிம்களின் வரலாற்றையும் அவர்களின் தேசிய பங்களிப்புக்களையும் விரிவாக விளங்கி மற்றவர்களுக்கு எடுத்துக் கூறுவார்.**

**தேர்ச்சி மட்டம் 5.3 : மக்கா, மதீனா காலகட்ட த.ஃ.வா வரலாற்றையும் எதிர் நோக்கிய சவால்களையும் விளக்கிக் கூறுவார்.**

**பாடவேளை : 2**

**கற்றல் பேறுகள்:**

- நபி (ஸல்) அவர்களின் த.ஃ.வா முறையினை விளக்கிக் கூறுவார்.
- நபி (ஸல்) அவர்களும் ஆரம்ப கட்ட முஸ்லிம்களும் த.ஃ.வாவில் எதிர்நோக்கிய சவால்களை இனம்கண்டு விளக்குவார்.
- மக்கா த.ஃ.வாவிலிருந்து மதீனா த.ஃ.வா வேறுபடும் முறையினை தர்க்க ரீதியாக முன்வைப்பார்.
- நபி (ஸல்) அவர்களின் போர்க்கால அனுபவங்களைப் படிப்பினையாகக் கொள்வார்.
- நபி (ஸல்) அவர்கள் செய்த உடன்படிக்கைகளின் மாதிரிகளை முன்மாதிரியாகக் கொண்டு நடப்பார்.

**பாடத்தைத் திட்டமிடுவதற்கான அறிவுறுத்தல்கள்:**

படி 1 :

- ஒரு காலத்தில் பாரசீகர் தார்மீக நிலையில் மிகக்கீழ் நிலையை அடைவர். அப்போது அரேபியாவில் ஒரு மனிதர் பிறப்பார். அவரைப்பின்பற்றுவோர் பாரசீகரின் சிம்மாசனத்தையும், ஆட்சியையும், மதத்தையும், ஏனையவற்றையும் கவிழ்த்துவிடுவார்கள். பலம் வாய்ந்த, பிடிவாதம் கொண்ட பாரசீகர் தோற்கடிக்கப்படுவர். (நபி இப்றாஹிம் அவர்களால்) கட்டப்பட்ட ஆலயத்தில் இடம் பெற்றுள்ள விக்கிரகங்கள் ஒழிக்கப்பட்டு அவ்வாலயம் பரிசுத்தப்படுத்தப்படும். அனேகர் அவ்வில்லத்தை நோக்கி (முகம் பார்த்து) வணக்கம் புரிவர். அவரைப் பின்பற்றுவோர் பாரசீகத்திலுள்ள தூஸ், பல்க் போன்ற நகரங்களையும் கைப்பற்றுவார்கள். பாரசீக ராணிகளும் ஏனையோரும் அவற்றைப் பின்பற்றுவர். (நூல்: டஸாத்தீர் – எண்-14)

  மேலுள்ள உரைப் பகுதியை ஒரு மாணவர் மூலம் உரத்து வாசிக்கச் செய்து ஏனைய மாணவர் செவிமடுக்கச் சந்தர்ப்பமளியுங்கள்.

- பின்வரும் விடயங்களை மையப்படுத்தி கலந்துரையாடுங்கள்
  - த.ஃ.வா நபி (ஸல்) அவர்களின் பணிகளில் பிரதானமானது.
  - அது ஆரம்ப கட்டத்தில் சோதனையாக அமைந்தது.
  - மக்கா வாழ்க்கைப் பகுதியில் 3 வருடங்கள் இரகசியமாகவும் 10 வருடங்கள் பகிரங்கமாகவும் த.ஃ.வா செய்யப்பட்டது.
  - தனிநபர்களை உருவாக்குவதே இக்கால கட்ட த.ஃ.வாவின் முக்கிய இலக்காகக் காணப்பட்டது.

- நபி (ஸல்) அவர்களும் தனி நபர்களும் பல சவால்களை எதிர் கொண்டார்கள்.
- ஹிஜ்ரத்துக்குப்பின் மதீனா கட்டம் ஆரம்பமாகிறது.
- மதீனாக்கட்டத்தில் பகிரங்கப்பிரச்சாரமும், எதிர்ப்பு நடவடிக்கைகளும் இடம்பெற்றன.
- மதீனா முஸ்லிம்களின் தலைமையகமாக மாறியது.

படி 2 :
- மாணவர்களை நான்கு குழுக்களாகப் பிரித்து ஒவ்வொரு குழுவுக்கும் குழுத் தேடியாய்வு அறிவுறுத்தல் பத்திரத்தை வழங்குங்கள்.
- கலந்துரையாடிக் கருத்துக்களை வெளிப்படுத்த நெறிப்படுத்துங்கள்.
- மாணவர்களின் குழுச் செயற்பாட்டை அவதானித்து உறுதிப்படுத்துங்கள்.

படி 3 :
- ஒவ்வொரு குழுவுக்கும் குழுச்செயற்பாடுகளை முன்வைக்க சந்தர்ப்பமளியுங்கள்.
- ஏனைய குழுக்களும் தமது கருத்துக்களை முன்வைக்கச் வாய்ப்பளியுங்கள்.
- குறை நிரப்புச் செய்து வழிகாட்டுங்கள்.
- பின்வரும் விடயங்களை மையப்படுத்திக் கலந்துரையாடுங்கள்:

  - மக்கா த.்.வா 13 வருடங்களையும் மதீனா த.்.வா 10 வருடங்களையும் கொண்டது. மக்காவில் தாருல் அர்கமும், மதீனாவில் மஸ்ஜிதுல் நபவியும் த.்.வா மையங்களாக அமைந்திருந்தன.
  - மக்கா கட்டத்தில் நபியவர்களை தூசித்தும், நோவினை செய்தும் சமரச முயற்சியிலீடுபட்டும், முஸ்லிம்களை கொடுமைப்படுத்தியும் த.்.வாவை தடுக்க முயன்றனர். நபியவர்களின் கோத்திரம் சமூகப்பகிஷ்கரிப்புக்கு உட்படுத்தப்பட்டது. இவ்வேளை நபியவர்களும் முஸ்லிம்களும் பொறுமையைக் கைக்கொண்டனர். முஸ்லிம்கள் இருமுறை ஹபஷாவுக்கு ஹிஜ்ரத் சென்றனர். நபி (ஸல்) அவர்கள் தாயிபுக்கு ஹிஜ்ரத் சென்றார்கள்.
  - மதீனாவிலிருந்து வந்த யாத்திரீகர்களுடன் இரண்டு உறுதி மொழிகள் (பைஅத்துல் அக்பா) செய்யப்பட்டன. நபி (ஸல்) அவர்களும் முஸ்லிம்களும் மதீனாவுக்கு ஹிஜ்ரத் செய்தனர்.
  - ஹிஜ்ரத்தின்பின் மதீனா, முஸ்லிம்களின் தலைமையகமாக மாறியது. சமூகப்பணிகளுக்கு மஸ்ஜிதுன் நபவி தலைமை வகித்தது. சமூகத்தை உருவாக்குவதிலும், பாதுகாப்பதிலும் அதிக கவனம் செலுத்தப்பட்டது. குறைஷிகளும் யூதர்களும் போர்களை ஆரம்பித்தனர். சமரசத்துக்காக உடன்படிக்கைகள் செய்து கொள்ளப்பட்டன. க.்.பத்துலாஹ் முஸ்லிம்களின் கட்டுப்பாட்டில் வந்தது. அறபு நாட்டுக்கு வெளியே த.்.வா இடம்பெற ஆரம்பித்தது.
  - ஹஜ்ஜதுல் விதாவோடு நபியவர்களின் த.்.வாப்பணி முடிவுறுகிறது.

**தரவிருத்தி உள்ளீடுகள் :**

- பொது அறிவுறுத்தல்களுக்கேற்ப, பொருத்தமானவற்றைப் பயன்படுத்துங்கள்.

**கணிப்பீடு மதிப்பீட்டுக்கான அறிவுறுத்தல்கள் :**

- கற்றல் பேறுகளை அடிப்படையாகக் கொண்டு மதிப்பீட்டு நியமங்களை உருவாக்கிக் கொள்ளுங்கள்.

**குழுத் தேடியாய்வு அறிவுறுத்தல் பத்திரம்:**

**குழு-01** நபி (ஸல்) அவர்களின் மக்கா காலகட்ட த.ஃவாவில் எதிர்நோக்கிய சவால்ளைக் கண்டறிந்து அதற்கான காரணங்களைத் தொகுத்துக் காட்சிப்படுத்துங்கள்.

**குழு-02** நபி (ஸல்) அவர்கள் மக்காவில் ஏற்பட்ட சவால்களை எவ்வாறு எதிர்கொண்டார்கள் என்பதையும் அதனைத் தடுக்க நபி அவர்கள் கையாண்ட வழிமுறைகளையும் சுட்டிக்காட்டும் வகையில் ஒரு கருத்தரங்கை நடத்துங்கள்.

**குழு-03** மதீனாவில் நபி (ஸல்) அவர்கள் எதிர்நோக்கிய சவால்கள் மக்கா சவால்களிலிருந்து வேறுபடும் முறையினை உதாரணங்களுடன் எடுத்துக்காட்டி சுவர்ப்பத்திரிகை ஒன்றைத் தயாரியுங்கள்.

**குழு-04** மதீனாவில் நபி (ஸல்) அவர்கள் எதிர்நோக்கிய சவால்கள் எவ்வாறு முறியடிக்கப்பட்டன என்பதை நிகழ்வுகளுக்கூடாக எடுத்துக்காட்டி அதிலிருந்து நாம் பெறும் படிப்பினைகளை மையப்படுத்தி ஓர் உரைச்சித்திரம் எழுதுங்கள்.

**வீட்டில் பின்தொடர் செயற்பாடு :**

பிரதேசத்தில் இடம்பெறும் த.ஃவா அமைப்புக்களையும் அவற்றின் செயற்பாடுகளையும் பெற்றோரின் உதவியுடன் தேடியறிந்து எழுத வழிப்படுத்துங்கள்.

**தேர்ச்சி 5.0 : நபி (ஸல்) அவர்களதும் குலபாஉர்ராஷிதீன்களதும் வாழ்க்கை முறையை விளங்குவதோடு இலங்கை முஸ்லிம்களின் வரலாற்றையும் அவர்களின் தேசிய பங்களிப்புக்களையும் விரிவாக விளங்கி மற்றவர்களுக்கு எடுத்துக் கூறுவார்.**

**தேர்ச்சி மட்டம் 5.4 : ஸீறாவின் முக்கித்துவத்தை விளங்கி எடுத்துக் காட்டுவார்.**

**பாடவேளை : 2**

**கற்றல் பேறுகள்:**

- ஸீறாவின் முக்கியத்துவத்தை எடுத்துக் கூறுவார்.
- ஸீறா ஒரு தனிக்கலை என்பதை நிரூபித்துக் காட்டுவார்.
- ஸீறாவின் முன்மாதிரிகளைப் படிக்க வேண்டியதன் முக்கியத்துவத்தை விபரிப்பார்.
- ஸீறாவை பல்வேறு கண்ணோட்டங்களில் எடுத்துக் கூறுவார்.

**பாடத்தைத் திட்டமிடுவதற்கான அறிவுறுத்தல்கள்:**

படி 1 :

- நபி (ஸல்) அவர்களல்லாத மகான்கள், சீர்திருத்தவாதிகள், தலைவர்கள் முதலானோரின் வாழ்க்கைச் சரிதைகள் எழுதப்படுகின்றன, ஆராயப்படுகின்றன. அவர்களின் வாழ்வு காலத்தோடும் அவர்கள் எதிர்கொண்ட சவால்களோடும் சுருக்கிக் கொள்ளப்பட்டுள்ளன.

  ஆனால் நபி (ஸல்) அவர்களின் ஸீறாவில், குர்ஆன் அவரை மனிதரில் தோன்றிய இறை தூதர் என்பதை நிரூபிப்பதாய் உள்ளது. புத்துயிர்ப்புவாதமும் இறைவெளிப்பாடும் அவர் போதனைகளில் வெளிப்படுகின்றன. விண்ணும் மண்ணும் அவர்களது வாழ்வில் இணைகின்றன. அவர் அறிவின் பகுதியாகவும் இருக்கிறார். முழுமையாகவும் இருக்கிறார். காணும் உலகும் கட்புலனாகாத உலகும் அவரின் தரிசனமாகின்றன. இப்பேரண்டத்தின் முழு முதலோடு அவரது அறிவும் ஆன்மாவும் தொடர்புறுவதாய் இருக்கின்றது. இதனை அவரது ஸீறா, இடையறாது வரலாற்றில் தோன்றிய எல்லா எழுதுகோல்களுக்கும் வாரி வழங்கிக் கொண்டேயிருக்கின்றது. அரசு உருவாக்கம், பல்வேறு இனக்குழுக்களை ஒழுங்குபடுத்தல், சமூகமயமாக்குதல், புதிய பண்பாட்டை கட்டியெழுப்புதல் என்ற வகையிலும் முஹம்மத் (ஸல்) அவர்களின் மார்க்கம் தனித்துவமாகத் திகழ்கின்றது. இஸ்லாத்துக்கான அமைப்பிலும் அவரது ஸீறாவில் ஒரு முழுமைத்துவமுடையதாகவே காணப்படுகின்றது. (மூலம்: புன்னகைக்கும் நபிகள்)

  மேலேயுள்ள உரைப்பகுதியை ஒரு மாணவர் மூலம் உரத்து வாசிக்கச் செய்யுங்கள். எல்லா மாணவர்களும் செவிமடுக்க சந்தர்ப்பமளியுங்கள்.

- பின்வரும் விடயங்களை மையப்படுத்திக் கலந்துரையாடுங்கள்:
  - ஸீறா என்பது நபி (ஸல்) அவர்களின் சரிதையைக் குறிக்கும்.
  - ஸீறா அன்று முதல் இன்று வரை பாதுகாக்கப்பட்டு வருகின்றது. இது ஒரு தனிநபர் சரிதை மட்டுமன்றி, ஒரு கொள்கையின் நடைமுறை வடிவமாகவும் உள்ளது.
  - அதனைக் கற்பது முஸ்லிம்களின் கடமையாகும்.

படி 2 : • மாணவர்களை நான்கு குழுக்களாகப் பிரித்து ஒவ்வொரு குழுவுக்கும் குழுத் தேடியாய்வு அறிவுறுத்தல் பத்திரத்தை வழங்குங்கள்.

• கலந்துரையாடிக் கருத்துக்களை வெளிப்படுத்த நெறிப்படுத்துங்கள்.

• மாணவர்களின் குழுச் செயற்பாட்டை அவதானித்து உறுதிப்படுத்துங்கள்.

படி 3 : • ஒவ்வொரு குழுவுக்கும் குழுச்செயற்பாடுகளை முன்வைக்கச் சந்தர்ப்பமளியுங்கள்.

• ஏனைய குழுக்களும் தமது கருத்துக்களை முன்வைக்க வாய்ப்பளியுங்கள். குறை நிரப்புச் செய்து வழிகாட்டுங்கள்.

• பின்வரும் விடயங்களை மையப்படுத்திக் கலந்துரையாடுங்கள்:

  • ஸீறா நபியவர்களின் சரிதைக்கான ஒரு தனியான கலை அல்லது இலக்கியமாகும். அதற்கான ஒழுங்குகளும் விதிகளும் உள்ளன.
  • ஸீறாவுக்கு உயிரோட்டமான ஒரு வரலாறு உண்டு. அது மொழி, பிரதேச, கால எல்லையைத் தாண்டியது. அது இஸ்லாத்தின் அடிப்படை மூலாதாரங்களின் ஊடகமாகும். அதனைக் கற்பதும், அதன் வழிகாட்டல்களைப் பின்பற்றுவதும் ஒவ்வொரு முஸ்லிமினதும் கடமையாகும்.
  • ஸீறாவை முஸ்லிம்கள் மட்டுமன்றி முஸ்லிமல்லாதவர்களும் படிக்கின்றனர், பாராட்டுகின்றனர்.
  • ஸீறா தனிநபர் வரலாறாக மட்டுமன்றி குடும்ப, சமூக, தேசிய வாழ்வுக்கான வழிகாட்டலாகவும் அமைந்துள்ளது.

**தரவிருத்தி உள்ளீடுகள் :**

• பொது அறிவுறுத்தல்களுக்கேற்ப, பொருத்தமானவற்றைப் பயன்படுத்துங்கள்.

**கணிப்பீடு மதிப்பீட்டுக்கான அறிவுறுத்தல்கள் :**

• கற்றல் பேறுகளை அடிப்படையாகக் கொண்டு மதிப்பீட்டு நியமங்களை உருவாக்கிக் கொள்ளுங்கள்.

**குழுத் தேடியாய்வு அறிவுறுத்தல் பத்திரம்:**

குழு-01 தமிழ் மொழியில் வெளியான ஸீறா நூல்களின் பட்டியல் ஒன்றைத் தயாரியுங்கள்.

குழு-02 சிறுவர்கள் பயன்படுத்தக்கூடிய ஸீறா நூல்கள், இறுவட்டுக்களின் பட்டியலொன்றைத் தயாரித்து எழுதுங்கள்.

குழு-03 நபி (ஸல்) அவர்களின் ஸீறாவைப்படித்து அவர்களைப் பாராட்டிய முஸ்லிம் அல்லாதவர்களின் பெயர்ப் பட்டியலொன்றைத் தயாரியுங்கள்.

குழு-04 நபி (ஸல்) அவர்களின் வாழ்வில் இடம்பெற்ற முக்கிய நிகழ்ச்சிகளை கி.பி. அல்லது ஹிஜ்ரி ஆண்டு குறிப்பிட்டுப் பட்டியற்படுத்துங்கள்.

**வீட்டில் பின்தொடர் செயற்பாடு :**

நபி (ஸல்) அவர்களின் ஸீறாவின் தித்திப்பான ஒரு பகுதியை எழுதி வீட்டில் காட்சிப்படுத்த நெறிப்படுத்துங்கள்.

**தேர்ச்சி 6.0 : பொருளீட்டல் தொடர்பாக இஸ்லாமிய போதனைகளையும் குடும்ப வாழ்வு தொடர்பாக இஸ்லாமிய கருத்தையும் விளங்கி அவற்றை வாழ்வில் முறையாகக் கடைப்பிடித்து வருவார்.**

**தேர்ச்சி மட்டம் 6.1.1 : உழைப்பின் முக்கியத்துவத்தை அறிந்து இஸ்லாத்தின் வழிமுறையில் அவற்றை நடைமுறைப்படுத்துவார்.**

**பாடவேளை : 2**

**கற்றல் பேறுகள்:**

- இஸ்லாம் பொருளியல் துறைக்கு வழிகாட்டும் பாங்கை விளக்கிக் கூறுவார்
- இஸ்லாமிய பொருளாதரம் பற்றிப் பேசும் அல்குர்ஆன் வசனங்கள், ஹதீஸ்களை அறிந்து கூறுவார்.
- இஸ்லாமிய பொருளாதாரத்தின் சிறப்பியல்புகளை இனங்கண்டு முன்வைப்பார்.
- இஸ்லாமிய பொருளீட்டலின் வரையறைகளை அறிந்து ஒப்புவிப்பார்.

**பாடத்தைத் திட்டமிடுவதற்கான அறிவுறுத்தல்கள்:**

படி 1 :

- “அவன்தான் உங்களுக்குப் பூமியை விரிப்பாக ஆக்கி வைத்தான். எனவே, அதன் பல கோணங்களுக்கும் சென்று அவன் உங்களுக்கு அளித்திருப்பவற்றை புசிப்பீர்களாக!” (67: 15) என்ற அல்குர்ஆன் வசனத்தை அழகாக ஓதும் மாணவன் ஒருவனைக் கொண்டு ஓதச் செய்து அதன் பொருளையும் வாசிக்கச் செய்யுங்கள்.
- இவ்வசனத்தின் மூலம் இஸ்லாம் பொருளீட்டலுக்குக் கொடுத்துள்ள முக்கியத்துவம் குறித்து மாணவர்களின் கருத்துக்களைக் கேட்டறியுங்கள்.
- பின்வரும் அம்சங்களை மையப்படுத்திக் கலந்துரையாடுங்கள்.
    - மனிதனது அடிப்படைத் தேவைகளை நிறைவுசெய்து கொள்வதற்கான ஒழுங்குகளை ஏற்படுத்தித் தந்துள்ள இஸ்லாம் வாழ்வாதாரத்திற்கு பொருளீட்டுமாறு வலியுறுத்துகிறது.
    - பொருளாதாரத் துறைக்கான சிறப்பான வழிகாட்டல்களையும் முன்வைத்துள்ளது.
    - ஒரு மனிதன் தனது வாழ்வாதாரத்திற்காக, தனது பொறுப்பில் உள்ளவர்களுக்காக பொருளீட்டுவது கடமையாகும் என இஸ்லாம் சொல்கிறது.
    - பொருளீட்டலுக்காக வியாபாரம், விவசாயம், கைத்தொழில், சேவைத் தொழில் போன்ற எவற்றில் ஈடுபட்டாலும் இஸ்லாம் விதித்துள்ள ஒழுங்குமுறையைக் கையாளுதல் அவசியமாகும்.
    - இஸ்லாமிய பொருளாதாரம் பல சிறப்பம்சங்களைக் கொண்டுள்ளது.

படி 2 :

- மாணவர்களை நான்கு குழுக்களாகப் பிரித்து ஒவ்வொரு குழுவுக்கும் குழுத் தேடியாய்வு அறிவுறுத்தல் பத்திரத்தை வழங்குங்கள்.
- கலந்துரையாடிக் கருத்துக்களை வெளிப்படுத்த நெறிப்படுத்துங்கள்.

- மாணவர்களின் குழுச் செயற்பாட்டை அவதானித்து உறுதிப்படுத்துங்கள்.

படி 3 :
- கலந்துரையாடிப் பெற்ற கருத்துக்களை வகுப்பில் சமர்ப்பிக்க ஒவ்வொரு குழுவுக்கும் இடமளியுங்கள்.
- குறை நிரப்புச் செய்து விரிவுபடுத்துவதற்கு அதே குழுவுக்கு முதலில் வாய்ப்பளியுங்கள்.
- ஏனைய குழுக்களின் போஷிக்கத்தக்க கருத்துக்களையும் வினவிப் பெறுங்கள்.
- பின்வரும் விடயங்களை உள்ளடக்கி மீளாய்வு செய்யுங்கள்:
  - மனிதன் அல்லாஹ்வின் பிரதிநிதியாக இருப்பதனால் அவன் வாழ்வதற்குத் தேவையான வசதிகளை அல்லாஹ் இப்பிரபஞ்சத்தில் ஏற்படுத்தி வைத்துள்ளான். மனிதன் தனக்குரிய வாழ்வாதாரங்களைத் தேடிப் பெறும் முயற்சியே பொருளீட்டல் எனப்படுகிறது.
  - அல்குர்ஆனும் ஸுன்னாவும் பொருளியலுக்கான போதனைகளை முன்வைத்துள்ளன.

    "மேலும் வானங்களிலும் பூமியிலும் உள்ளவை அனைத்தும் அல்லாஹ்வுக்கு உரியன." (53: 31)

    "ஒருவர் தனது கையால் உழைத்து உண்பதை விடச் சிறந்த உணவை ஒருபோதும் உண்ண முடியாது. தாவூத் நபி அவர்கள் தங்களின் கையால் உழைத்து உண்பவர்களாகவே இருந்தனர்." (அல்புகாரி)

    "ஜுமுஆ தொழுகை முடிந்தவுடன் பூமியில் பரந்து சென்று அல்லாஹ்வின் அருளைத் தேடிப் பெற்றுக் கொள்ளுங்கள்." (62:10)
  - பொருளீட்டலில் ஹலாலான முறைகளையும் ஹராமான முறைகளையும் இஸ்லாம் மிகத் தெளிவாகவே வேறுபடுத்திக் காட்டியுள்ளது.

    "(ஹலாலான) நல்ல பொருட்களிலிருந்து உண்ணுங்கள். நற்கிரியைகள் புரியுங்கள்." (23: 51)

    "ஹராத்தை உட்கொண்டு வளர்ந்த எந்த உடம்பும் சுவனம் நுழையாது. ஹராத்தை உட்கொண்டு வளர்ந்த உடலனைத்தும் நரகத்துக்கே தகுதியானவை." (திர்மிதி)
  - இஸ்லாமிய பொருளாதாரத்தின் சிறப்பம்சங்களாவன:
  - இஸ்லாமிய பொருளாதாரம் அல்லாஹ்விடமிருந்து பெறப்பட்ட தெய்வீகத்தன்மை கொண்டது.
  - இஸ்லாம் கூறும் பொருளாதார ஒழுங்குகள் இயற்கைக்கும் மனித இயல்புகளுக்கும் ஏற்றதாகவே உள்ளன.
  - ஒழுக்கம், பண்பாடு, சமூக நீதி என்பவற்றைக் கருத்திற் கொண்டே இஸ்லாம் பொருளீட்டலுக்கு வழிகாட்டுகின்றது.
  - இஸ்லாமிய பொருளாதார முறை ஆன்மீக, லௌகீக தேவைகளைக் கவனத்திற் கொண்டது.
  - இஸ்லாமிய பொருளாதார நடவடிக்கை இபாதத்தாகக் கருதப்படுகிறது.

**தரவிருத்தி உள்ளீடுகள் :**

- பொது அறிவுறுத்தல்களுக்கேற்ப, பொருத்தமானவற்றைப் பயன்படுத்துங்கள்.

**கணிப்பீடு மதிப்பீட்டுக்கான அறிவுறுத்தல்கள் :**

- கற்றல் பேறுகளை அடிப்படையாகக் கொண்டு மதிப்பீட்டு நியமங்களை உருவாக்கிக் கொள்ளுங்கள்.

**குழுத் தேடி ஆய்வுப் பத்திரம்:**

**குழு-01** பின்வரும் அல்குர்ஆன் வசனங்களை தர்ஜமதுல்குர்ஆனில் தேடி அவற்றின் மொழிபெயர்ப்பை எழுதுங்கள்.

(70: 24-25), (17: 26-27), (4: 32), (2: 188)

**குழு-02** கீழே தரப்பட்டுள்ள ஹதீஸ்களை நன்கு வாசித்து அவை சொல்லும் இஸ்லாமிய பொருளாதாரம் பற்றிய சிறப்பம்சங்களைக் கண்டறிந்து எழுதுங்கள்.

- "நயவஞ்சகனின் அடையாளம் மூன்றாகும்: பேசினால் பொய்யுரைப்பான், வாக்களித்தால் மாறு செய்வான், நம்பினால் மோசடி செய்வான்." (புகாரி, முஸ்லிம்)
- "உங்களில் ஒருவன் கயிற்றை எடுத்துத் தன்னுடைய முதுகில் விறகுக் கட்டைச் சுமந்து விற்று வாழ்வது மக்களிடம் யாசகம் கேட்பதை விடச் சிறந்ததாகும். இதன் மூலம் அல்லாஹ் அவனுக்கு இழிவு ஏற்படாமல் தடுத்து விடுவான். மக்கள் அவனுக்குக் கொடுக்கவும் செய்யலாம் அல்லது மறுக்கவும் செய்யலாம்." (புகாரி)
- அல்லாஹ் கூறியதாக நபி (ஸல்) அவர்கள் கூறினார்கள்: "மூன்று நபர்களுக்கெதிராக நான் மறுமையில் வாதிடுவேன்.

  என் பெயரால் சத்தியம் செய்து பின்பு மோசடி செய்தவன்.

  சுதந்திரமான ஒருவனை அடிமை எனக் கூறி விற்று அதன் மூலம் பெறப்பட்ட கிரயத்தைச் சாப்பிட்டவன்.

  தனது வேலைக்கு கூலிக்காரர் ஒருவரை அமர்த்தி அவரிடம் முழுமையாக வேலை வாங்கிக் கொண்டு அவருக்குக் கூலி கொடுக்காதவன்." (அல்புகாரி)

**குழு- 03** ஹலாலான உழைப்பின் முக்கியத்துவம் பற்றி கலந்துரையாடி ஓர் உரையைத் தயார்செய்யுங்கள்.

**குழு- 04** உழைப்பில் ஹராமைத் தவிர்ந்து ஹலாலைப் பேணுவதன் அவசியத்தை வலியுறுத்தும் விதமாக ஒரு விளம்பரத்தைத் தயார் செய்யுங்கள்.

**வீட்டில் பின்தொடர் செயற்பாடு :**

பெற்றோரின் வருமானம் மற்றும் தாய் தந்தையரது உழைப்புத் தொடர்பாக கலந்துரையாடி அவற்றை எழுதி வர வழிப்படுத்துங்கள்.

**தேர்ச்சி 6.0 : பொருளீட்டல் தொடர்பாக இஸ்லாமிய போதனைகளையும் குடும்ப வாழ்வு தொடர்பாக இஸ்லாமிய கருத்தையும் விளங்கி அவற்றை வாழ்வில் முறையாகக் கடைப்பிடித்து வருவார்.**

**தேர்ச்சி மட்டம் 6.1.2 : உழைப்பின் முக்கியத்துவத்தை அறிந்து இஸ்லாத்தின் வழிமுறையில் அவற்றை நடைமுறைப்படுத்துவார்.**

**பாடவேளை : 2**

**கற்றல் பேறுகள்:**

- உழைப்பின் முக்கியத்துவத்தை அறிந்து விளக்கிக் கூறுவார்
- உழைப்பின் சிறப்பை குர்ஆன், ஹதீஸ் ஆதாரங்களுடன் விபரிப்பார்.
- உழைத்து வாழ வேண்டுமென்ற உணர்வைப் பெற்றுச் செயற்படுவார்.
- எச்சந்தர்ப்பத்திலும் யாசகம் கேட்டு வாழக் கூடாது என்ற உணர்வோடு வாழ்ந்து காட்டுவார்.

**பாடத்தைத் திட்டமிடுவதற்கான அறிவுறுத்தல்கள்:**

படி 1 :
- ஸூறா ஜும்ஆவின் 10 ஆம் வசனத்தை தாமாக முன்வரும் மாணவனைக் கொண்டு ஓதச் செய்யுங்கள். அதன் மொழிபெயர்ப்பை வாசிக்கச் செய்யுங்கள்.
- வாசிக்கப்பட்ட வசனத்திலிருந்து இஸ்லாம் உழைப்புக்கு கொடுத்துள்ள முக்கியத்துவம், சிறப்புக் குறித்து மாணவர்களின் கருத்துக்களைக் கேட்டறியுங்கள்.
- பின்வரும் அம்சங்களை மையப்படுத்திக் கலந்துரையாடுங்கள்.
  - உழைத்து வாழுமாறு இஸ்லாம் வலியுறுத்துகிறது.
  - உழைப்பின் முக்கியத்துவம் குறித்து அல்குர்ஆனும் ஸுன்னாவும் வலியுறுத்துகின்றன.
  - ஒரு முஸ்லிம் பிறரிடம் கையேந்தாது சுயமரியாதையுடனும் கௌரவத்துடனும் வாழ வேண்டுமென இஸ்லாம் வலியுறுத்துகிறது.
  - உழைப்பவர்களை நபி (ஸல்) அவர்கள் கௌரவப்படுத்தியுள்ளார்கள்.
  - இஸ்லாம் உழைப்பை ஓர் இபாதத்தாகக் கருதுகிறது.

படி 2 :
- மாணவர்களை நான்கு குழுக்களாகப் பிரித்து ஒவ்வொரு குழுவுக்கும் குழுத் தேடியாய்வு அறிவுறுத்தல் பத்திரத்தை வழங்குங்கள். கலந்துரையாடிக் கருத்துக்களை வெளிப்படுத்த நெறிப்படுத்துங்கள்.
- மாணவர்களின் குழுச் செயற்பாட்டை அவதானித்து உறுதிப்படுத்துங்கள்.

படி 3 :
- கலந்துரையாடிப் பெற்ற கருத்துக்களை வகுப்பில் சமர்ப்பிக்க ஒவ்வொரு குழுவுக்கும் இடமளியுங்கள்.
- குறை நிரப்புச் செய்து விரிவுபடுத்துவதற்கு அதே குழுவுக்கு முதலில் வாய்ப்பளியுங்கள்.

- ஏனைய குழுக்களின் போஷிக்கத்தக்க கருத்துக்களையும் வினவிப் பெறுங்கள்.
- பின்வரும் விடயங்களை உள்ளடக்கி மீளாய்வு செய்யுங்கள்:
    - (ஜுமுஆ) தொழுகை முடிந்ததும் பூமியில் பரந்து சென்று உழைத்து வாழுமாறு அல்குர்ஆன் போதிக்கிறது.
    - "ஒருவர் தம் கையால் உழைத்து உண்பதை விடச் சிறந்த உணவை ஒருபோதும் உண்ண முடியாது. தாவூத் நபி அவர்கள் தங்களின் கையால் உழைத்து உண்பவர்களாகவே இருந்தனர்." (புகாரி)
    - நபி (ஸல்) அவர்கள் வியாபாரம், மந்தை மேய்த்தல் போன்ற தொழில்களைச் செய்துள்ளார்கள்.
    - இறைதூதர்கள், கலீபாக்கள், ஸஹாபிகள் தமது கரங்களாலேயே உழைத்து வாழ்க்கை நடத்தினார்கள்.
    - உழைத்து உண்ணும் உணவே நீங்கள் சாப்பிடுகின்ற உணவில் மிகச் சிறந்ததாகும்.
    - ஒரு முஸ்லிம் உழைக்காமல் யாசகம் கேட்பதை இஸ்லாம் வன்மையாகக் கண்டித்திருக்கிறது.
    - "ஒருவன் ஒரு கயிற்றை எடுத்துக் கொண்டு தன்னுடைய முதுகில் விறகுக் கட்டைச் சுமந்து விற்று வாழ்வது மக்களிடம் யாசகம் கேட்பதை விடச் சிறந்ததாகும். இதன் மூலம் அல்லாஹ் அவனுக்கு இழிவு ஏற்படாமல் தடுத்து விடுவான். மக்கள் அவனுக்குக் கொடுக்கவும் செய்யலாம் அல்லது மறுக்கவும் செய்யலாம்." (புகாரி)

**தரவிருத்தி உள்ளீடுகள் :**

- பொது அறிவுறுத்தல்களுக்கேற்ப, பொருத்தமானவற்றைப் பயன்படுத்துங்கள்.

**கணிப்பீடு மதிப்பீட்டுக்கான அறிவுறுத்தல்கள் :**

- கற்றல் பேறுகளை அடிப்படையாகக் கொண்டு மதிப்பீட்டு நியமங்களை உருவாக்கிக் கொள்ளுங்கள்.

**குழுத் தேடி ஆய்வுப் பத்திரம்**

**குழு-01** ரியாழுஸ் ஸாலிஹீனின் உதவியுடன் உழைப்பின் முக்கியத்துவம் பற்றிய நான்கு ஹதீஸ்களை எழுதுங்கள்.

**குழு-02** 'உழைப்பு உயர்வு தரும்' எனும் கருப்பொருளில் உரையாடல் ஒன்றைத் தயாரியுங்கள்.

**குழு-03** இஸ்லாத்தில் உழைப்பு ஓர் இபாதத்தாகக் கருதப்படுகின்றது எனும் கூற்றை நிறுவும் வகையில் சிறு கட்டுரை ஒன்றை எழுதுங்கள்.

**குழு-04** நபிமார்கள் செய்த தொழில்களைப் பட்டியற்படுத்துங்கள்.

**வீட்டில் பின்தொடர் செயற்பாடு :**

தந்தையின் உழைப்புப் பற்றிகட கலந்துரையாடி அது தொடர்பான ஒரு விளக்கத்தை எழுதி வர அறிவுறுத்தங்கள்.

**தேர்ச்சி 6.0 : பொருளீட்டல் தொடர்பாக இஸ்லாமிய போதனைகளையும் குடும்ப வாழ்வு தொடர்பாக இஸ்லாமிய கருத்தையும் விளங்கி அவற்றை வாழ்வில் முறையாகக் கடைப்பிடித்து வருவார்.**

**தேர்ச்சி மட்டம் 6.1.3 : உழைப்பின் முக்கியத்துவத்தை அறிந்து இஸ்லாத்தின் வழிமுறையில் அவற்றை நடைமுறைப்படுத்துவார்.**

**பாடவேளை : 2**

- இஸ்லாமிய வியாபாரம் பற்றி அறிந்து விளக்கிக் கூறுவார்.
- நேர்மையான வியாபாரிகளுக்கு மறுமையில் கிடைக்கும் பாக்கியங்கள் பற்றி அறிந்து மற்றவர்களுக்கு எடுத்துக் காட்டுவார்.
- கொடுக்கல்- வாங்கலில் நேர்மையைக் கடைப்பிடித்து ஒழுகி வருவார்.
- வியாபாரத்தில் ஹலால்- ஹராம் பேண வேண்டும் என்பதை அறிந்து உணர்ந்து நாளாந்த வாழ்வில் செயற்படுத்துவார்.

**பாடத்தைத் திட்டமிடுவதற்கான அறிவுறுத்தல்கள்:**

படி 1 :
- "உண்மையான நம்பிக்கையான வியாபாரி நபிமார்கள், உண்மை யாளர்கள், ஷஹீத்களுடன் இருப்பார்." (திர்மிதி) என்ற ஹதீஸை முன்வைத்து மாணவர்களுடன் கலந்துரையாடுங்கள்.
- வியாபாரம் குறித்து மாணவர்கள் தெரிந்து வைத்திருக்கும் கருத்துக்களை வினவிப் பெறுங்கள்.
- பின்வரும் அம்சங்களை மையப்படுத்திக் கலந்துரையாடுங்கள்.
    - பொருளீட்டல் முயற்சியில் வியாபாரம் ஒரு சிறந்த முறையாகும்.
    - இஸ்லாத்தில் வியாபரத்திற்கு தனியிடம் கொடுக்கப்பட்டுள்ளது.
    - வியாபாரம் பற்றி அல்குர்ஆனிலும் ஸுன்னாவிலும் விதந்துரைக்கப்பட்டுள்ளது. நபி (ஸல்) அவர்கள் வியாபாரம் செய்துள்ளார்கள். நபிமார்கள், கலீபாக்கள், ஸஹாபிகள் வியாபாரத்தில் ஈடுபட்டுள்ளனர் வியாபாரத்தில் கடைப்பிடிக்க வேண்டிய நடைமுறைகள் பல உள்ளன.
    - நேர்மையான வியாபாரிகள் மறுமையில் நபிமார்களுடன் இருப்பார்கள்.

படி 2 :
- மாணவர்களை நான்கு குழுக்களாகப் பிரித்து ஒவ்வொரு குழுவுக்கும் குழுத் தேடியாய்வு அறிவுறுத்தல் பத்திரத்தை வழங்குங்கள்.
- கலந்துரையாடிக் கருத்துக்களை வெளிப்படுத்த நெறிப்படுத்துங்கள்.
- மாணவர்களின் குழுச் செயற்பாட்டை அவதானித்து உறுதிப்படுத்துங்கள்.

படி 3 :
- கலந்துரையாடிப் பெற்ற கருத்துக்களை வகுப்பில் சமர்ப்பிக்க ஒவ்வொரு குழுவுக்கும் இடமளியுங்கள்.
- குறை நிரப்புச் செய்து விரிவுபடுத்துவதற்கு அதே குழுவுக்கு முதலில் வாய்ப்பளியுங்கள்.
- ஏனைய குழுக்களின் ஆக்கபூர்வமான கருத்துக்களையும் வினவிப் பெறுங்கள்.

- பின்வரும் விடயங்களை உள்ளடக்கி மீளாய்வு செய்யுங்கள்:
  - இஸ்லாமிய வியாபாரத்தின் அடிப்படைகள் மூன்றாகும். அவை: 1. ஈஜாப்- கபூல், 2. வாங்குவோர்- விற்போர், 3. வியாபாரப் பண்டம்
  - "மேலும் அல்லாஹ் வியாபரத்தை அனுமதித்து வட்டியைத் தடை செய்துள்ளான்." (2: 275)
  - "உழைப்பில் சிறந்தது கைத்தொழிலும் நேர்மையான வியாபாரமுமாகும்." (அஹ்மத்)
  - இஸ்லாம் நேர்மையான வியாபாரத்தையே வலியுறுத்துகிறது. நம்பிக்கையான வியாபாரி பற்றி நபி (ஸல்) புகழ்ந்து பேசினார்கள்.
  - "விற்றாலும் வாங்கினாலும் மீளக் கேட்டாலும் தாராளத்தன்மையுடன் நடந்து கொள்ளும் மனிதனுக்கு அல்லாஹ் அருள் புரிவானாக!" (புகாரி)
  - வியாபாரத்தில் பொய், மோசடி, ஏமாற்று, கலப்படம் செய்வோர் பற்றி அல்குர்ஆனும் ஹதீஸும் கடுமையாக எச்சரிக்கின்றன.
  - "(அளவையிலும் நிறையிலும் மோசடி செய்து) குறைக்கக் கூடியவர் களுக்கு கேடு உண்டாவதாக!" (83: 01)
  - "நிச்சயமாக வியாபாரிகள் மறுமை நாளில் பாவிகளாக எழுப்பப்படுவர். அல்லாஹ்வைப் பயந்து நன்முறையில் உண்மையுடன் நடந்து கொண்டோரைத் தவிர." (ஹாகிம்)
  - "(பொய்) சத்தியம் செய்வது பொருளை (சுலபமாக) விற்பனை செய்ய உதவும். ஆனால், அது பரக்கத்தை (அருள்வளம்) அழித்துவிடும்!"

**தரவிருத்தி உள்ளீடுகள் :**

- பொது அறிவுறுத்தல்களுக்கேற்ப, பொருத்தமானவற்றைப் பயன்படுத்துங்கள்.

**கணிப்பீடு மதிப்பீட்டுக்கான அறிவுறுத்தல்கள் :**

- கற்றல் பேறுகளை அடிப்படையாகக் கொண்டு மதிப்பீட்டு நியமங்களை உருவாக்கிக் கொள்ளுங்கள்.

**குழுத் தேடி ஆய்வுப் பத்திரம்:**

**குழு-01** வியாபாரம் தொடர்பான அல்குர்ஆன் வசனங்கள் நான்கை எழுதுங்கள்.

**குழு-02** ரியாழுஸ் ஸாலிஹீனின் உதவியுடன் வியாபாரம் தொடர்பான நான்கு ஹதீஸ்களை தொகுத்து எழுதுங்கள்.

**குழு-03** இஸ்லாத்தில் வியாபாரத்தின் சிறப்பை விளக்கும் வகையில் நண்பர் ஒருவருக்கு 250 சொற்களுக்கு மேற்படாமல் கடிதம் ஒன்றை கூட்டாகத் தயாரித்து எழுதுங்கள்.

**குழு-04** நேர்மையான வியாபாரி, மோசடி செய்யும் வியாபாரியை விட மேலானவன் என்பதைத் தெளிவுபடுத்தும் வகையில் நாடகம் ஒன்றை எழுதிக் காட்டுங்கள்.

**வீட்டில் பின்தொடர் செயற்பாடு :**

உழைப்பின் முக்கியத்துவம் தொடர்பாக ஹதீஸ்கள் மூன்றினைத் தெரிந்தெடுத்து அவை தொடர்பாக பெற்றோருடன் கலந்துரையாடித் தகவல்களைக் குறித்துக் கொள்ளுங்கள்.

**தேர்ச்சி 6.0 : பொருளீட்டல் தொடர்பாக இஸ்லாமிய போதனைகளையும் குடும்ப வாழ்வு தொடர்பாக இஸ்லாமிய கருத்தையும் விளங்கி அவற்றை வாழ்வில் முறையாகக் கடைப்பிடித்து வருவார்.**

**தேர்ச்சி மட்டம் 6.1.4 : உழைப்பின் முக்கியத்துவத்தை அறிந்து இஸ்லாத்தின் வழிமுறையில் அவற்றை நடைமுறைப்படுத்துவார்.**

**பாடவேளை : 2**

**கற்றல் பேறுகள்:**

- விவசாயம் மற்றும் கைத்தொழிலுக்கு இஸ்லாம் கொடுத்துள்ள முக்கியத்துவம் பற்றி அறிந்து விளக்கிக் கூறுவார்.
- நபிமார்கள் விவசாயம், கைத்தொழில் நடவடிக்கைகளில் ஈடுபட்டுள்ளனர் என்பதை அறிந்து அவற்றை பட்டியற்படுத்துவார்
- விவசாயம், கைத்தொழில் ஆகியவற்றில் ஈடுபடுவதனால் ஏற்படும் பயன்களை எடுத்துக் கூறுவார்.
- தொழில்களையும் தொழிலாளர்களையும் மதித்து நடப்பார்.

**பாடத்தைத் திட்டமிடுவதற்கான அறிவுறுத்தல்கள்:**

படி 1 :

- இணைப்பு 1 இலுள்ள சம்பவத்தை தாமாக முன்வரும் மாணவனைக் கொண்டு வாசிக்கச் செய்யுங்கள். ஏனையோரைச் செவிமடுக்கச் செய்யுங்கள்.
- விவசாயம், கைத்தொழில் குறித்து மாணவர்கள் தெரிந்து வைத்திருக்கும் கருத்துக்களை வினவிப் பெறுங்கள்.
- பின்வரும் விடயங்களை மையப்படுத்திக் கலந்துரையாடுங்கள்:
    - மனிதன் தனது பொருளாதாரத் தேவைகளை நிறைவுசெய்ய விவசாயம் மற்றும் கைத்தொழிலில் ஈடுபடுவதை இஸ்லாம் ஊக்குவிக்கிறது.
    - நபிமார்கள் விவசாயம், கைத்தொழில் நடவடிக்கைகளில் ஈடுபட்டு உழைத்துள்ளனர்.
    - ஸஹாபாக்கள் விவசாயம், கைத்தொழில் நடவடிக்கைகளில் ஈடுபட்டுள்ளனர்.
    - அல்குர்ஆனும் ஹதீஸும் விவசாயம் மற்றும் கைத்தொழில் பற்றி பேசுகின்றன.
    - விவசாயத்திற்கு பொருத்தமான நிலத்தை தரிசாக விடாமல் அதை உற்பத்திக்குப் பயன்படுத்த வேண்டும்.

படி 2 :

- மாணவர்களை நான்கு குழுக்களாகப் பிரித்து ஒவ்வொரு குழுவுக்கும் குழுத் தேடியாய்வு அறிவுறுத்தல் பத்திரத்தை வழங்குங்கள்.
- கலந்துரையாடிக் கருத்துக்களை வெளிப்படுத்த நெறிப்படுத்துங்கள்.
- மாணவர்களின் குழுச் செயற்பாட்டை அவதானித்து உறுதிப்படுத்துங்கள்.

படி 3 : • கலந்துரையாடிப் பெற்ற கருத்துக்களை வகுப்பில் சமர்ப்பிக்க ஒவ்வொரு குழுவுக்கும் இடமளியுங்கள்.

• குறை நிரப்புச் செய்து விரிவுபடுத்துவதற்கு அதே குழுவுக்கு முதலில் வாய்ப்பளியுங்கள்.

• ஏனைய குழுக்களின் ஆக்கபூர்வமான கருத்துக்களையும் வினவிப் பெறுங்கள்.

• பின்வரும் விடயங்களை உள்ளடக்கி மீளாய்வு செய்யுங்கள்:

  - விவசாயம் ஒரு நாட்டின் பொருளாதார வளர்ச்சியில் முதுகெலும்பாகத் திகழ்கிறது.
  - விவசாயத்தில் ஈடுபடும்போது நிலம் பயன்படுத்தப்படுவதுடன் அதன் மூலம் மனிதர்கள் பயனடைவது மட்டுமன்றி பறவைகள், மிருகங்கள், வேறு உயிரினங்களும் பயனடைகின்றன. இதன் மூலம் விவசாயிகளுக்கு நன்மை கிடைக்கின்றன.
  - “ஒரு முஸ்லிம் விவசாயம் செய்கிறார் அல்லது செடிகளை நடுகிறார். (அது வளர்ந்து பலனளித்து) அதிலிருந்து பறவைகள் அல்லது மனிதர்கள் அல்லது பிராணிகள் ஏதாவது சாப்பிட்டால் அந்த மனிதருடைய கணக்கில் அது ஸதகாவாக (தர்மமாக) கணிக்கப்படுகிறது.” (முஸ்லிம்)
  - “நீங்கள் பயிரிடுவதைச் சிந்தித்தீர்களா? நீங்கள் அதை முளைக்கச் செய்கிறீர்களா? அல்லது நாம் அதை முளைக்கச் செய்கின்றோமா? (56: 63, 64)
  - நபிமார்களான ஆதம் (அலை), இப்ராஹீம் (அலை), லூத் (அலை), யஸ.ஃ. (அலை) ஆகியோர் விவசாயத்தில் ஈடுபட்டனர்.
  - “வியாபாரம் சிறந்த உழைப்பாகும். என்னைப் பொறுத்தவரை மிகவும் சிறந்த சம்பாத்தியம் விவசாயமாகும். ஏனெனில், அது தவக்குலுக்கு மிகவும் நெருக்கமானதாகும்” என இமாம் ஷாபி (ரஹிமஹுல்லாஹ்) அவர்கள் குறிப்பிடுகின்றார்கள்.
  - இரும்பு, கைத்தொழில் துறையில் முக்கிய மூலப்பொருளாகும். இரும்பு என்ற பெயரில் ஓர் அத்தியாயத்தையே இறக்கி வைத்த அல்லாஹ், அதன் மகிமையையும் பயனையும் கூறி மனிதனுக்கு இரும்பைப் பயன்படுத்துமாறும், அதன் மூலம் கைத்தொழிலில் ஈடுபடுமாறும் அல்லாஹ் குறிப்பிடுகின்றான்.
  - வேட்டையாடுதல், மீன்பிடித்தல், முத்துக் குளித்தல் போன்ற கைத்தொழில்கள் பற்றியும் அல்குர்ஆன் பேசுகின்றது.
  - நபிமார்களான தாவூத் (அலை), ஸகரிய்யா (அலை), நூஹ் (அலை) ஆகியோர் கைத்தொழிலில் ஈடுபட்டனர்.
  - “உழைப்பில் சிறந்தது கைத்தொழிலும் நேர்மையான வியாபாரமுமாகும்.” (அஹமத்) என நபி (ஸல்) அவர்கள் கூறியுள்ளார்கள்

**இணைப்பு -1**

## தகவல் கோவை - ஹதீஸ்

ஒரு முறை நபி (ஸல்) அவர்கள் ஒரு கிராமவாசியைப் பார்த்து பின்வரும் சம்பவத்தைக் கூறினார்கள்: சுவனவாசிகளில் ஒருவர் தனது இறைவனிடம் விவசாயத்தில் ஈடுபட அனுமதி கோருவார். அப்போது அல்லாஹ் அவரிடம் “நீ விரும்பிய நிலையில் இப்போது வாழ்ந்து கொண்டிருக்கவில்லையா?” என்ற கேட்பான். அதற்கு அவர், “ஆம் (நான் விரும்பியவாறு இன்பமாகவே வாழ்ந்து கொண்டிருக்கின்றேன்). ஆனாலும் நான் நிலத்தை உழுது பயிரிட விரும்புகின்றேன்” என்று கூறுவார். அல்லாஹ்வும் அவருக்கு அனுமதியளிப்பான். அந்த மனிதன் (சுவர்க்கத்தின் சிறப்பான நிலத்தில்) விதைகளைத் தூவி விடுவார். கண் இமைக்கும் நேரத்திற்குள் அந்தப் பயிர் வளர்ந்து முற்றி அறுவடைக்குத் தயராகிவிடும். முளைகளைப் போல் விளைந்து குவிந்துவிடும். அப்போது அல்லாஹ், “ஆதமின் மகனே, எடுத்துக் கொள். உன்னை எதுவுமே திருப்திப்படுத்தாது” என்று கூறுவான். (புகாரி)

**தரவிருத்தி உள்ளீடுகள் :**

- பொது அறிவுறுத்தல்களுக்கேற்ப பொருத்தமானவற்றைப் பயன்படுத்துங்கள்.

**கணிப்பீடு மதிப்பீட்டுக்கான அறிவுறுத்தல்கள் :**

- கற்றல் பேறுகளை அடிப்படையாகக் கொண்டு மதிப்பீட்டு நியமங்களை உருவாக்கிக் கொள்ளுங்கள்.

**குழுத் தேடி ஆய்வுப் பத்திரம்**

**குழு-01** விவசாயம் தொடர்பாக வந்துள்ள ஹதீஸ்களை திரட்டி அவற்றின் படிப்பினைகளை எழுதுங்கள்.

**குழு-02** பின்வரும் அல்குர்ஆன் வசனங்களை தர்ஜமதுல் குர்ஆனில் தேடி குர்ஆன் வசனத்தையும் அதன் மொழிபெயர்ப்பையும் எழுதுங்கள்.

(56: 63, 64) (34: 10) (34: 11)

**குழு-03** துல்கர்னைன் என்பவர் பெரும் அணைகட்டொன்றைக் கட்டியதாக ஸுரதுல் க.ஃ.பில் அல்லாஹுத் தஆலா குறிப்படுகின்றான். குறித்த அந்த நிகழ்வு பற்றிப் பேசும் அல்குர்ஆன் வசனத்தை ஸுரதுல் க.ஃ.பில் தேடிப் பார்த்து எழுதுங்கள்.

**குழு-04** பொருளீட்டல் தொடர்பாக ஐந்து ஹதீஸ்களை தேடி எழுதுங்கள்.

**வீட்டில் பின்தொடர் செயற்பாடு :**

கைத்தொழில்/ வியாபாரம் மூலம் முன்னேற்றம் அடைந்துள்ள ஒருவரை சந்தித்து அவரது உழைப்புத் தொடர்பாக கலந்துரையாடி வாழ்வில் அவர் அந்நிலமையை அடைவதற்குக் காரணமாக அமைந்த அம்சங்களைக் கேட்டறிந்து அவற்றை தொகுக்க வழிப்படுத்துங்கள்.

**தேர்ச்சி 6.0 : பொருளீட்டல் தொடர்பாக இஸ்லாமிய போதனைகளையும் குடும்ப வாழ்வு தொடர்பாக இஸ்லாமிய கருத்தையும் விளங்கி அவற்றை வாழ்வில் முறையாகக் கடைப்பிடித்து வருவார்.**

**தேர்ச்சி மட்டம் 6.1.5 : உழைப்பின் முக்கியத்துவத்தை அறிந்து இஸ்லாத்தின் வழிமுறையில் அவற்றை நடைமுறைப்படுத்துவார்.**

**பாடவேளை : 2**

**கற்றல் பேறுகள்:**

- பல்வேறு சேவைத் தொழில்கள் பற்றி அறிந்து அவற்றை பட்டியற்படுத்துவார்.
- சேவைத் தொழிலில் அமானிதம் பேண வேண்டுமென்பதை ஏற்றுப் பின்பற்றுவார்.
- சேவைத் தொழிலில் ஈடுபடுவோர் தாம் வகித்த பொறுப்புக்கள், பதவிகள் குறித்து மறுமையில் அல்லாஹ்விடம் பதில் சொல்ல வேண்டும் என்பதை உணர்ந்து செயற்பட வேண்டும் என்ற உணர்வைப் பெற்று நடப்பார்.
- சேவைத் தொழிலில் ஈடுபடுவோரை மதித்து நடப்பார்.

**பாடத்தைத் திட்டமிடுவதற்கான அறிவுறுத்தல்கள்:**

படி 1 :

- ஒரு முறை நபி (ஸல்) அவர்களிடம் நாட்டுப்புற அறபி ஒருவர் வந்து “மறுமை நாள் எப்போது வரும்?” எனக் கேட்டார். “அமானிதம் தொலைந்தால் மறுமையை எதிர்பார்” என நபியவர்கள் விடை பகர்ந்தார்கள். அவர் “அமானிதம் தொலைவது எப்படி?” என மீண்டும் வினாத் தொடுக்க “ஒரு பொறுப்பு அதற்குத் தகுதியில்லாதவரிடம் ஒப்படைக்கப்பட்டால் மறுமையை எதிர்பார்” என நபியவர்கள் விளக்கமளித்தார்கள். இந்த ஹதீஸை தாமாக முன்வரும் மாணவனைக் கொண்டு வாசிக்கச் செய்யுங்கள். ஏனையோரை செவிமடுக்கச் செய்யுங்கள்.
- வாசிக்கப்பட்ட ஹதீஸ் எது பற்றி பேசுகிறது என்பதை மாணவர்களிடம் வினவி அவர்களின் கருத்தைப் பெறுங்கள்.
- பின்வரும் விடயங்களை மையப்படுத்திக் கலந்துரையாடுங்கள்:
    - பொருளீட்டல் நடவடிக்கைகளில் வியாபாரம், கைத்தொழில் போன்று சேவைத் தொழிலும் ஒன்றாகும். பல்வேறு வகையான சேவைத் தொழில்கள் காணப்படுகின்றன.
    - வியாபரத்தில் நேர்மை பேணுவது போல் சேவைத் தொழிலில் அமானிதம் பேண வேண்டுமென இஸ்லாம் வலியுறுத்துகிறது.
    - அமானிதம் என்பது அல்லாஹ்வின் கட்டளைக்கிணங்க உலகில் மனிதன் ஆற்ற வேண்டிய பணிகள், சேவைகளைக் குறிக்கின்றது.
    - சேவைத் தொழிலில் ஈடுபடுவோர் தமது அமானிதப் பொறுப்பை உணர்ந்து செயற்பட வேண்டும்.

படி 2 :

- மாணவர்களை நான்கு குழுக்களாகப் பிரித்து ஒவ்வொரு குழுவுக்கும்

குழுத் தேடியாய்வு அறிவுறுத்தல் பத்திரத்தை வழங்குங்கள்.

- கலந்துரையாடிக் கருத்துக்களை வெளிப்படுத்த நெறிப்படுத்துங்கள்.
- மாணவர்களின் குழுச் செயற்பாட்டை அவதானித்து உறுதிப்படுத்துங்கள்.

படி 3 :

- கலந்துரையாடிப் பெற்ற கருத்துக்களை வகுப்பில் சமர்ப்பிக்க ஒவ்வொரு குழுவுக்கும் இடமளியுங்கள்.
- குறை நிரப்புச் செய்து விரிவுபடுத்துவதற்கு அதே குழுவுக்குச் சந்தர்ப்பமளியுங்கள்.
- ஏனைய குழுக்களின் ஆக்கபூர்வமான கருத்துக்களையும் வினவிப் பெறுங்கள்.
- பின்வரும் விடயங்களை உள்ளடக்கி மீளாய்வு செய்யுங்கள்:
  - ஒரு மனிதன் வழங்குகின்ற சேவை மூலம் தனக்குரிய வாழ்வாதாரத்தைப் பெற்றுக் கொள்ளும் முறையே சேவைத் தொழிலாகும்.
  - சேவைத் தொழில் அரசாங்க சேவை, தனியார் சேவை, கல்விச் சேவை, ஆசிரியர் சேவை, மருத்துவ சேவை, தாதிமார் சேவை, இலிகிதர் சேவை, பாதுகாப்புச் சேவை, தொடர்பூடக சேவை, சுகாதார சேவை, போக்குவரத்துச் சேவை, ஆட்சியாளர் சேவை என்று பல வகைப்படும்.
  - சேவைத் தொழிலில் ஈடுபடுவோர் தாம் வகித்த பொறுப்புக்கள், பதவிகள் குறித்து மறுமையில் அல்லாஹ்விடம் பதில் சொல்ல வேண்டும்.
  - மனிதர்களுக்கு வழங்கப்பட்ட பொறுப்புகள் பற்றி அல்லாஹ் மறுமையில் விசாரிப்பான்:
  - "நீங்கள் ஒவ்வொருவரும் பொறுப்புதாரர்கள். உங்களில் ஒவ்வொருவரும் அவரவர் பொறுப்புப் பற்றி விசாரிக்கப்படுவீர்கள்." (புகாரி)
  - பொதுவாக எந்த சேவைத் தொழிலில் ஈடுபடுபவருக்கும் அவரது கடமை நேரம் அவரது சேவைக்குரிய நேரமாகும். அப்போது அவரது உள, உடல், சிந்தனா ரீதியிலான அனைத்து ஆற்றலும் திறமையும் அவரது உத்தியோகப் பணிக்காகவே செலவிடப்பட வேண்டும்.
  - "யூப்ரடீஸ் நதியில் நீர் அருந்தச் செல்லும் ஓர் ஒட்டகைக் குட்டி சங்கடத்திற்குட்பட்டாலும் அதற்கு இந்த உமர் மறுமையில் அல்லாஹ்விடம் பதில் சொல்லியாக வேண்டும்" என உமர் (ரழி) அவர்கள் தனக்கே கூறிக் கொண்டது ஆட்சியாளர்களின் பொறுப்பை, சேவையை உணர்த்துவதற்காகும்.
  - சேவைத் தொழிலில் ஈடுபடுவோர் பின்வரும் விடயங்களில் கூடிய கவனம் செலுத்த வேண்டும்:

- உரிய நேரத்திற்கு சமுகமளித்து தமது கடமையை செவ்வனே நிறைவேற்றுதல்.
- கடமை நேரத்தை துஷ்பிரயோகம் செய்யாதிருத்தல்.
- வழங்கப்பட்டுள்ள பொறுப்பை தன்னால் இயன்றளவு அர்ப்பணிப்புடன் நிறைவேற்றுதல்.

**தரவிருத்தி உள்ளீடுகள் :**

- பொது அறிவுறுத்தல்களுக்கேற்ப, பொருத்தமானவற்றைப் பயன்படுத்துங்கள்.

**கணிப்பீடு மதிப்பீட்டுக்கான அறிவுறுத்தல்கள் :**

- கற்றல் பேறுகளை அடிப்படையாகக் கொண்டு மதிப்பீட்டு நியமங்களை உருவாக்கிக் கொள்ளுங்கள்.

**குழுத் தேடி ஆய்வுப் பத்திரம்**

**குழு-01** ரியாழுஸ் ஸாலிஹீனின் உதவியுடன் பொறுப்புகள் மற்றும் அமானிதம் தொடர்பான ஹதீஸ்களைக் கண்டறிந்து எழுதுங்கள்.

**குழு-02** இஸ்லாம் கல்விக்கு கொடுத்துள்ள முக்கியத்துவத்தை மையமாகக் கொண்டு ஆசிரியர் சேவைத் தொழிலின் சிறப்புக்கள் பற்றி சிறு கட்டுரை ஒன்றை எழுதுங்கள்.

**குழு-03** வைத்திய சேவைத் தொழிலின் முக்கியத்துவம் குறித்து உரையாடல் ஒன்றை எழுதுங்கள்

**வீட்டில் பின்தொடர் செயற்பாடு :**

சேவைத் தொழிலில் ஈடுபட்டிருக்கும் ஒருவரைச் சந்தித்து அவரது தொழில் சமூகத்தில் வழங்கும் சேவை தொடர்பாகக் கலந்துரையாடிப் பெற்றுக்கொண்ட தகவல்களைப் பெற்றோருடன் பரிமாறிக் கொள்ள ஆலோசனை வழங்குங்கள்.

தேர்ச்சி 6.0 : பொருளீட்டல் தொடர்பாக இஸ்லாமிய போதனைகளையும் குடும்ப வாழ்வு தொடர்பாக இஸ்லாமிய கருத்தையும் விளங்கி அவற்றை வாழ்வில் முறையாகக் கடைப்பிடித்து வருவார்.

தேர்ச்சி மட்டம் 6.2 : அஜ்னபி- மஹ்ரமி வரையறைகளைப் பேணி நடப்பார்.

பாடவேளை : 2

**கற்றல் பேறுகள்:**

- அஜ்னபி- மஹ்ரமி வரையறை பற்றி அறிந்து விளக்கிக் கூறுவார்.
- திருமணம் முடிக்க தடை செய்யப்பட்டவர்கள் பற்றிய விபரத்தை விரிவாக முன்வைப்பார்.
- தனி மனித, குடும்ப, சமூக வாழ்வில் அஜ்னபி- மஹ்ரமி வரையறைகள் பேணப்பட வேண்டுமென்பதை உணர்ந்து செயற்படுவார்.
- அஜ்னபி- மஹ்ரமி வரையறை பேணப்படாமையின் பாரதூரத்தை உணர்ந்து செயற்படுவார்.
- அஜ்னபி- மஹ்ரமி வரையறைகளைப் பேணி ஒழுகுவார்.

**பாடத்தைத் திட்டமிடுவதற்கான அறிவுறுத்தல்கள்:**

படி 1 :

- ஒரு தடவை நபி (ஸல்) அவர்கள் 'பெண்களோடு சுதந்திரமாகப் பழகுவதை, பெண்கள் தனிமையில் இருக்கும் இடங்களுக்குச் செல்வதையிட்டு நான் எச்சரிக்கின்றேன்' எனச் சொன்னார்கள். அப்போது அங்கிருந்த ஓர் அன்சாரித் தோழர் 'அல்லாஹ்வின் தூதரே! கணவரின் நெருங்கிய சகோதரன் (அல்லது மனைவியின் நெருங்கிய சகோதரி) போன்றோருடன் பழகுவது பற்றி என்ன கருதுகிறீர்கள்' எனக் கேட்டார். அதற்கு பதிலளித்த நபியவர்கள் (அல்ஹம்வு அல்மவ்த்) 'அவ்வாறு நெருக்கமாகப் பழகுவது மரணத்துக்குச் சமமானது' என்றார்கள். (புகாரி) என்ற ஹதீஸை தாமாக முன்வரும் மாணவனைக் கொண்டு வாசிக்கச் செய்யுங்கள்.
- வாசிக்கப்பட்ட ஹதீஸை மையமாக வைத்து அஜ்னபி- மஹ்ரமி வரையறைகள் பற்றி மாணவர்கள் தெரிந்து வைத்திருக்கும் கருத்துக்களை வினவிப் பெறுங்கள்.
- பின்வரும் விடயங்களை மையப்படுத்திக் கலந்துரையாடுங்கள்.
    - அஜ்னபி- மஹ்ரமி வரையறை குறித்து இஸ்லாம் கூடிய கவனம் செலுத்துகிறது. தனி மனித, குடும்ப, சமூக வாழ்வில் அஜ்னபி- மஹ்ரமி வரையறைகள் பேணப்பட வேண்டுமென இஸ்லாம் வலியுறுத்துகின்றது. திருமணத்திலும் அஜ்னபி- மஹ்ரமி வரையறையை இஸ்லாம் வலியுறுத்துகிறது.
    - அஜ்னபி- மஹ்ரமி வரையறை பேணப்படாமை முறைகேடான ஆண்- பெண் தொடர்புக்கும் மோசமான விளைவுகள் ஏற்படவும் வழிவகுக்கும். அஜ்னபியான ஓர் ஆணும் அஜ்னபியான ஒரு பெண்ணும் தனிமையில் இருப்பதை அல்லது சுதந்திரமாகப் பழகுவதை இஸ்லாம் வன்மையாகக் கண்டிக்கிறது.

- பொதுவாக இன்று எல்லா மட்டங்களிலும் அஜ்னபி- மஹ்ரமி வரையறை பேணப்படுவது மிகவும் குறைவாகவே இருக்கிறது.

படி 2 :
- மாணவர்களை நான்கு குழுக்களாகப் பிரித்து ஒவ்வொரு குழுவுக்கும் குழுத் தேடியாய்வு அறிவுறுத்தல் பத்திரத்தை வழங்குங்கள்.
- கலந்துரையாடிக் கருத்துக்களை வெளிப்படுத்த நெறிப்படுத்துங்கள்.
- மாணவர்களின் குழுச் செயற்பாட்டை அவதானித்து உறுதிப்படுத்துங்கள்.

படி 3 :
- கலந்துரையாடிப் பெற்ற கருத்துக்களை வகுப்பில் சமர்ப்பிக்க ஒவ்வொரு குழுவுக்கும் இடமளியுங்கள்.
- குறை நிரப்புச் செய்து விரிவுபடுத்துவதற்கு அதே குழுவுக்கு முதலில் வாய்ப்பளியுங்கள்.
- ஏனைய குழுக்களின் ஆக்கபூர்வமான கருத்துக்களையும் வினவிப் பெறுங்கள்.
- பின்வரும் விடயங்களை உள்ளடக்கி மீளாய்வு செய்யுங்கள்:
  - திருமணம் முடிக்க அனுமதிக்கப்பட்டவர்கள் 'அஜ்னபி' என்றும் திருமணம் முடிக்க தடை செய்யப்பட்டவர்கள் 'மஹ்ரமி' என்றும் அழைக்கப்படுகின்றனர்.
  - திருமணம் முடிக்க தடை செய்யப்பட்டவர்களை நிரந்தரமாகத் தடை விதிக்கப்பட்டோர், தற்காலிகமாக தடை விதிக்கப்பட்டோர் என்று பிரித்து நோக்க முடியும். அல்குர்ஆனின் கருத்துக்களை மையமாக வைத்து இரத்த உறவின் மூலம் திருமணம் மற்றும் திருமண உறவின் மூலம் மண முடிக்க தடை செய்யப்பட்டவர்கள் பற்றிய விபரத்தை அறிய முடியும்.
  - அல்குர்ஆனின் கருத்துக்களை மையமாக வைத்து பால்குடி உறவின் மூலம் திருமணம் முடிக்க தடை செய்யப்பட்டவர்கள் பற்றிய விபரத்தை அறிய முடியும்.
  - முறைகேடான ஆண்- பெண் தொடர்பு விபசாரத்துக்கு இட்டுச் செல்லும். ஹராத்துக்கு எதுவெல்லாம் இட்டுச் செல்லுமோ அவை அனைத்தும் ஹராம் என்பது இஸ்லாத்தின் நிலைப்பாடாகும்.
  - வகுப்புத் தோழி என்ற பெயரிலோ, உதவியாளர், செயலாளர் என்ற பெயரிலோ எவ்வகையிலும் அஜ்னபியான ஆண்- பெண் தனித்திருப்பதை இஸ்லாம் தடுத்துள்ளது.
  - நபி (ஸல்) அவர்கள் சொன்னார்கள்: "யார் அல்லாஹ்வையும் மறுமை நாளையும் ஈமான் கொண்டிருக்கிறாரோ அவர் ஒரு மஹ்ரமியின் துணையின்றி ஒரு பெண்ணோடு தனித்திருக்கக் கூடாது. அவ்வாறு தனித்திருந்தால் அவர்களோடு மூன்றாமவனாக ஷைத்தான் இருப்பான்." (அஹ்மத்)
  - நபி (ஸல்) அவர்கள் சொன்னார்கள்: "ஒருவர் எந்நிலையிலும் ஓர் அந்நியப் பெண்ணுடன் மஹ்ரமி துணையின்றி தனித்திருக்கலாகாது." (புகாரி, முஸ்லிம்)

- பொதுவாக இன்று அஜ்னபி- மஹ்ரமி வரையறை பொருட்படுத்தப் படாமல் இருப்பதற்கு அஜ்னபி- மஹ்ரமி வரையறை பேணப்படாமையின் பாரதூரம் சமூகத்தில் புரியப்படாமல் இருக்கின்றமை, அஜ்னபி- மஹ்ரமி வரையறை பற்றிய அறிவின்மை, கூட்டுக் குடும்ப அமைப்பு முறை, வறுமை போன்றவற்றை காரணங்களாக அடையாளப்படுத்தலாம்.

**தரவிருத்தி உள்ளீடுகள் :**

- பொது அறிவுறுத்தல்களுக்கேற்ப, பொருத்தமானவற்றைப் பயன்படுத்துங்கள்.

**கணிப்பீடு மதிப்பீட்டுக்கான அறிவுறுத்தல்கள் :**

- கற்றல் பேறுகளை அடிப்படையாகக் கொண்டு மதிப்பீட்டு நியமங்களை உருவாக்கிக் கொள்ளுங்கள்.

**குழுத் தேடி ஆய்வுப் பத்திரம்**

**குழு-01** தர்ஜமதுல் குர்ஆனில் தேடி வாசித்து திருமணம் முடிக்க நிரந்தரமாகத் தடை விதிக்கப்பட்டோரைப் பட்டியற்படுத்துங்கள்.

**குழு-02** திருமணம் முடிக்க தற்காலிகமாகத் தடை விதிக்கப்பட்டோரைப் பட்டியற்படுத்துங்கள்.

**குழு-03** இரத்த உறவு மற்றும் திருமண உறவின் மூலம் திருமணம் முடிக்க தடை செய்யப்பட்டவர்கள் பற்றிய விபரத்தைப் பட்டியற்படுத்துங்கள்.

**குழு-04** அஜ்னபி- மஹ்ரமி வரையறை பேணப்படாமையின் பாரதூரத்தை உணர்த்தும் வகையில் உமது நண்பர் ஒருவருக்கு கடிதம் ஒன்றை எழுதுங்கள்.

**வீட்டில் பின்தொடர் செயற்பாடு :**

குடும்பத்திலுள்ள அஜ்னபியானவர்களை கேட்டறிந்து அவர்களுடன் எவ்வாறு நடந்து கொள்ள வேண்டும் என்பது தொடர்பான வழிகாட்டல்களை பெற்றோர்களிடம் கேட்டறிந்து எழுத வழிப்படுத்துங்கள்.

**தேர்ச்சி 7.0 :** **ஒவ்வோர் அம்சம் தொடர்பாகவும் இஸ்லாத்திற்கென தனியானதொரு பார்வை உண்டென்பதை புரிந்து அதனடிப்படையில் அனைத்தையும் நோக்கித் திறனாய்வர்.**

**தேர்ச்சி மட்டம் 7.1 :** **இளமையின் முக்கியத்துவத்தை விளங்கி இளமையில் நிறைவேற்ற வேண்டிய பணியைத் திறம்படச் செய்து வருவார்.**

**பாடவேளை : 2**

**கற்றல் பேறுகள்:**

- இளமைப் பருவத்தின் முக்கியத்துவத்தை உணர்ந்து அதன்படி செயற்பட்டு வருவார்.
- இளைஞர்களின் பண்புகள், திறமைகள், ஆற்றல்கள் என்பவற்றை அறிந்து கூறுவார்.
- இளமைப் பருவத்தில் ஆற்ற வேண்டிய பணிகளை அறிந்து அதன்படி ஒழுகுவார்.
- மறுமையில் இளமைப் பருவம் தொடர்பாக அல்லாஹ் விசாரிப்பான் என்பதை உணர்ந்து நடப்பார்.

**பாடத்தைத் திட்டமிடுவதற்கான அறிவுறுத்தல்கள்:**

படி 1 :
- இணைப்பு 1 இல் உள்ள கவிதையை வாசித்து அல்லது தாமாக முன்வரும் மாணவனைக் கொண்டு வாசிக்கச்செய்து மாணவர்களை, கவனயீர்ப்புச் செய்யுங்கள்.
- பின்வரும் விடயங்களை மையப்படுத்திக் கலந்துரையாடலில் ஈடுபடுங்கள்:
    - மனித வாழ்வின் முக்கிய பருவம் இளமைப் பருவமாகும்.
    - இப்பருவத்தில் எதனையும் செய்யும் ஆற்றல், துணிவு, வேகம் முதலான விசேட பண்புகள் காணப்படும்.
    - நன்மையோ, தீமையோ எதுவானாலும் உடனடியாக அதனை செய்து விட வேண்டும் என்ற எண்ணம் இப்பருவத்தில் மேலோங்கிக் காணப்படும்.
    - வரலாற்றில் சாதனை படைத்தவர்களில் அதிகமானோர் இளைஞர்களாக இருந்திருக்கின்றனர்.
    - இப்பருவத்தை சரியான முறையில் பயன்படுத்திக் கொள்வதில்தான் வாழ்வின் வெற்றி தங்கியிருக்கிறது.

படி 2 :
- மாணவர்களை நான்கு குழுக்களாகப் பிரித்து ஒவ்வொரு குழுவுக்கும் குழுத் தேடியாய்வு அறிவுறுத்தல் பத்திரத்தை வழங்குங்கள்.
- கலந்துரையாடிக் கருத்துக்களை வெளிப்படுத்த நெறிப்படுத்துங்கள்.
- மாணவர்களின் குழுச் செயற்பாட்டை அவதானித்து உறுதிப்படுத்துங்கள்.

படி 3 : • ஒவ்வொரு குழுவிற்கும் தாம் எழுதியவற்றை முன்வைக்கச் சந்தர்ப்பம் வழங்குங்கள்.

• போஷிக்கத்தக்க கருத்துக்களை அடுத்த குழுக்களிடமிருந்து பெற்றுக் கொள்ளுங்கள்.

• பின்வரும் விடயங்களை வெளிக்கொணரும் வகையில் மீளாய்வு செய்யுங்கள்:

  - குர்ஆன், ஹதீஸ் என்பவற்றில் சிறப்பித்துக் கூறப்பட்டுள்ள பருவம் இளமைப் பருவமாகும்.
  - இஸ்லாமிய வரலாறு நெடுகிலும் இஸ்லாத்தின் எழுச்சிக்காக அதிகம் உழைத்தவர்கள், தியாகம் செய்தவர்கள் இளைஞர்களாக இருந்துள்ளனர்.
  - நபி முஹம்மத் (ஸல்) அவர்கள் இஸ்லாத்தின் தூதை எடுத்துச் சொன்னபோது ஏற்றுக்கொண்டு அங்கீகரித்தவர்களில் அதிகமானோர் இளைஞர்களாவர்.
  - விசேடமாக முஹம்மத் நபி (ஸல்) அவர்களுடைய த.ஃவா வரலாற்றில் இஸ்லாத்தைப் போதித்தல், எதிரிகளைச் சந்தித்தல், யுத்த நடவடிக்கைகள், மக்கள் நல சேவைகள் என அனைத்திலும் முன்னணியில் இருந்தவர்கள் இளைஞர்களாகவே இருந்துள்ளனர்.
  - அலி (ரழி), அர்க்கம் இப்னு அபில் அர்க்கம் (ரழி), முஸ்அப் பின் உமைர் (ரழி), முஆத் பின் ஜபல் (ரழி), உஸாமா பின் ஸைத் (ரழி) போன்றவர்கள் இளைஞர்களுக்கான உதாரண புருஷர்களாக உள்ளனர்.
  - மறுமையில் மனிதனிடம் வினவப்படும் கேள்விகளுள் இளமைப் பருவத்தை எவ்வாறு கழித்தாய் என்பதும் ஒன்றாகும்.

    இப்பருவத்தை இஸ்லாமிய போதனைகளுக்கு ஏற்ப அமைத்துக் கொள்ளாமல் இருப்பது இம்மையிலும் மறுமையிலும் தோல்வியை ஏற்படுத்தும்.

**தரவிருத்தி உள்ளீடுகள் :**

• பொது அறிவுறுத்தல்களுக்கேற்ப, பொருத்தமானவற்றைப் பயன்படுத்துங்கள்.

**கணிப்பீடு மதிப்பீட்டுக்கான அறிவுறுத்தல்கள் :**

• கற்றல் பேறுகளை அடிப்படையாகக் கொண்டு மதிப்பீட்டு நியமங்களை உருவாக்கிக் கொள்ளுங்கள்.

**இணைப்பு -1**

## இளைஞனே!

இளைஞனே!
பாதை தெளிவற்ற பயணங்களாய்...
இதுவரை எம்
முகவரி தெரியா நகர்வுகள்...
நாளைய பொழுதுகளில்
மறைந்து போன கனவுகளாய்
அமைந்து விடாது என்ற தாகம்தான்...
என்னை - உன்னுடன்
பேச வைக்கிறது!...

கனவாய்க் கலைந்து போன
எம் இறந்தகால நகர்வுகளுக்குள்...
எம் இலட்சியமான
எத்தனை எட்டுக்கள்
எமக்காய் சாட்சி கூறும்?...
உன் வாலிபத்தை...
உன் வயதை எப்படிக் கழித்தாய்?...
என்ற எம் இரட்சகனின்
கேள்விக்குப் பதில் கூறுவதாய்
எம் எத்தனை நகர்வுகள்
சாட்சி கூறும்?

கலிமா சொன்ன காரணம் மட்டும்...
முஸ்லிம் என்ற காரணம் மட்டும்...
வாப்பா முஸ்லிம் என்ற காரணம் மட்டும்...
எம்மை சுவனத்தில் நுழைத்து விடுவதில்லை!
எனது ஒவ்வொரு துளி வியர்வையும்...
எனது ஒவ்வோர் எட்டும்...
எதற்காகக் கடந்து போயின?...

எனது நோக்கம் என்ன?
எனது பயணத்தின் அடைவு என்ன?
நான் எங்கிருந்து வந்தேன்?
எனது பாதையின் முடிவு என்ன?
என்ற வினாக்களுக்கு
விடை தேட வேண்டிய பருவம் இதுவல்லவா?

**(ஜம்இய்யா நினைவு மலர் 2005)**

### குழுத் தேடியாய்வு அறிவுத்தல் பத்திரம்

**குழு-01** இளமைப் பருவத்தின் முக்கியத்துவம் தொடர்பாக குறிப்பிடப்பட்டுள்ள குர்ஆன், ஹதீஸ் ஆதாரங்கள் ஐந்தினைத் தொகுத்து எழுதுங்கள்.

**குழு-02** இஸ்லாமிய வரலாற்றில் இடம்பெற்ற இளைஞர்களின் சாதனைகளைக் குறிப்பிடும் இரண்டு சம்பவங்களைத் தேடி எழுதுங்கள்.

**குழு-03** இளமைப் பருவத்தில் எதிர்நோக்கும் முக்கிய பிரச்சினைகளைப் பட்டியல்படுத்தி அவற்றிலிருந்து பாதுகாப்புப் பெறுவதற்கான ஆலோசனைகளையும் முன்வையுங்கள்.

**குழு-04** நாட்டு அபிவிருத்தியில் முஸ்லிம் இளைஞர்களின் பணி என்ற தலைப்பில் 100 சொற்களுக்குள் கட்டுரை ஒன்றை எழுதுங்கள்.

### வீட்டில் பின்தொடர் செயற்பாடு :

பெற்றோரின் உதிவியோடு இஸ்லாமிய வரலாற்றில் சாதனை படைத்த இளைஞரின் வாழ்க்கை வரலாற்றைத் தொகுத்து அதில் தமது வாழ்வுக்கு பின்பற்றத்தக்க போதனைகளை அடையாளம் காண வழிப்படுத்துங்கள்.

| | | |
|---|---|---|
| **தேர்ச்சி 7.0** | : | **ஒவ்வோர் அம்சம் தொடர்பாகவும் இஸ்லாத்திற்கென தனியானதொரு பார்வை உண்டெனப்பதை புரிந்து அதனடிப்படையில் அனைத்தையும் நோக்கித் திறனாய்வர்.** |
| **தேர்ச்சி மட்டம் 7.2** | : | **உடல், உள ஆரோக்கியம் பற்றிய இஸ்லாத்தின் கண்ணோட்டத்தை விளங்கித் தன்னைப் பயிற்றுவித்துக் கொள்வார்.** |
| **பாடவேளை** | : | **2** |

**கற்றல் பேறுகள்:**

- உடல், உள ஆரோக்கியம் பெறுவது எவ்வாறு என்பதை அறிந்து கூறுவார்.
- உடல், உள ஆரோக்கியத்தைக் கெடுக்கும் விடயங்களை இனங்கண்டு அதிலிருந்து தவிர்ந்து நடப்பார்.
- உடலைப் போலவே உள்ளத்தையும் ஆரோக்கியமாக வைத்திருக்க வேண்டும் என்பதை அறிந்து கூறுவார்.
- உடல், உள ஆரோக்கியம் மறுமை வெற்றிக்கு வழியமைக்கும் என்பதை உணர்ந்து ஒழுகுவார்.

**பாடத்தைத் திட்டமிடுவதற்கான அறிவுறுத்தல்கள்:**

படி 1 :

- ஒரு தடவை நபி (ஸல்) அவர்கள் அம்பெறிந்து விளையாடக் கூடிய சிலரை கடந்து சென்றார்கள். ‘‘இஸ்மாயீலின் சந்ததிகளே! அம்பெறியுங்கள். ஏனென்றால் உங்கள் தந்தை அம்பெறிபவராகவே இருந்தார். நீங்களும் எறியுங்கள். நான் இன்ன கூட்டதாருடன் சேர்ந்து கொள்கிறேன்’’ என நபி (ஸல்) அவர்கள் கூறினார்கள். அப்போது அந்த இரண்டு கூட்டத்தினரில் ஒரு கூட்டத்தினர் அம்பெறியாமல் நின்றனர். “நீங்கள் ஏன் அம்பெறியவில்லை?” என்று நபி (ஸல்) அவர்கள் கேட்டார்கள். “நீங்கள் அவர்களது அணியில் இருக்கும்போது நாங்கள் எப்படி அம்பெறிய முடியும்?” என்று கூறினார்கள். அதற்கு நபி (ஸல்) அவர்கள் “அம்பெறியுங்கள். நான் உங்கள் இருவரின் அணியுடனும் இருக்கிறேன்” என்றார்கள்.

  இந்த ஹதீஸை தாமாக முன்வரும் மாணவனைக் கொண்டு வாசிக்கச்செய்து மாணவர்களை கவனயீர்ப்புச் செய்யுங்கள்.

- பின்வரும் விடயங்களை மையப்படுத்திக் கலந்துரையாடலில் ஈடுபடுங்கள்:

  - மனித வாழ்வின் ஆரோக்கியம் என்பது உடல், உள ஆரோக்கியத்தைக் குறிக்கும். இதனையே இஸ்லாம் வரவேற்கிறது. இவை இரண்டும் ஆரோக்கியமாகக் காணப்படும் போதே ஒரு மனிதன் வெற்றியடைகிறான். உடல், உள ஆரோக்கியத்தில் ஏதாவது ஒரு பகுதி விடுபடும்போது அது மனிதனின் செயற்பாடுகளில் பாதிப்பை ஏற்படுத்தும்.
  - ஒரு மனிதனின் கருத்து, சிந்தனை, நடத்தை என்பன சிறப்பாக வெளிப்படுவதற்கு உடல், உள ஆரோக்கியம் சீராக இருப்பது அவசியமாகும். வரலாற்றில் சாதனை படைத்தவர்கள் அனைவரும் உடல், உள ரீதியில் ஆரோக்கியத்தைப் பேணியவர்களாக இருந்துள்ளனர்.

படி 2 :

- மாணவர்களை நான்கு குழுக்களாகப் பிரித்து ஒவ்வொரு குழுவுக்கும் குழுத் தேடியாய்வு அறிவுறுத்தல் பத்திரத்தை வழங்குங்கள். கலந்துரையாடிக் கருத்துக்களை வெளிப்படுத்த நெறிப்படுத்துங்கள்.

படி 3 : 
- ஒவ்வொரு குழுவிற்கும் தாம் எழுதியவற்றை முன்வைக்கச் சந்தர்ப்பம் வழங்குங்கள்.
- போஷிக்கத்தக்க கருத்துக்களை ஏனைய குழுக்களிடமிருந்து பெற்றுக் கொள்ளுங்கள்.
- பின்வரும் விடயங்களை வெளிக்கொணரும் வகையில் மீளாய்வு செய்யுங்கள்:

  - உடல், உள ஆரோக்கியத்ததிற்கு இஸ்லாம் சிறந்த முறையில் வழிகாட்டுதல்களை வழங்கியிருக்கிறது. குர்ஆன் உள்ளத்திற்கு அருளப்பட்டது என்பதனால் அது உள்ளத்திற்கு ஆரோக்கியத்தை அளிக்கிறது.
  - குர்ஆன் ஓதுதல், அல்லாஹ்வை திக்ர் செய்தல் உட்பட ஏனைய வணக்க வழிபாடுகள் என்பன உள்ளத்தையும் உடலையும் பலப்படுத்துகின்றன. ஹலாலான, ஆரோக்கியமான உணவுப் பழக்கத்தைக் கைக்கொள்வதன் ஊடாக உடல் பலமடைகிறது.
  - ஆகுமாக்கப்பட்ட விளையாட்டுக்களில் நபிகளார் ஈடுபட்டுள்ளதுடன், அவற்றை ஆதரித்துள்ளமையும் ஹதீஸ்களில் காணப்படுகின்றன.
  - வீண் ஆசைகள், மனோ இச்சை சார்ந்த செயற்பாடுகள், வீண் விளையாட்டுக்கள் என்பன உடல், உள ஆரோக்கியத்தை பாதிக்கும் என்பதுடன் இஸ்லாம் இவற்றை தடைசெய்துமுள்ளது.
  - நபியவர்கள் தோழர்களை உடலையும் உள்ளத்தையும் சமநிலையில் நெறிப்படுத்தியிருக்கிறார்கள். இதில் ஒரு பகுதி கூடுவதற்கும் மற்றொரு பகுதி குறைவதற்கும் நபியவர்கள் அனுமதிக்கவில்லை.

**தரவிருத்தி உள்ளீடுகள் :**

- பொது அறிவுறுத்தல்களுக்கேற்ப, பொருத்தமானவற்றைப் பயன்படுத்துங்கள்.

**கணிப்பீடு மதிப்பீட்டுக்கான அறிவுறுத்தல்கள் :**

- கற்றல் பேறுகளை அடிப்படையாகக் கொண்டு மதிப்பீட்டு நியமங்களை உருவாக்கிக் கொள்ளுங்கள்.

**குழுத் தேடியாய்வு அறிவுறுத்தல் பத்திரம்**

**குழு-01** உடல், உள ஆரோக்கியத்தை வலியுறுத்தும் இஸ்லாமிய போதனைகள் நான்கை தொகுத்து எழுதுங்கள்.

**குழு-02** உள ஆரோக்கியத்தை பாதிக்கும் நான்கு குணங்களைக் குறிப்பிட்டு அது தொடர்பான ஹதீஸ்களை கண்டுடறிந்து எழுதுங்கள்.

**குழு-03** உடலையும் உள்ளத்தையும் ஆரோக்கியப்படுத்துவதற்கான பத்து ஆலோசகைளை கலந்தாலோசித்துப் பட்டியல்படுத்துங்கள்.

**குழு-04** உடல், உள ஆரோக்கியத்தை பேண வேண்டியதன் அவசியம் தொடர்பாக உரையாடல் ஒன்றை எழுதி, அதனை வகுப்பறையில் முன்வையுங்கள்.

**வீட்டில் பின்தொடர் செயற்பாடு :**

உடல், உள ஆரோக்கியத்தைப் பேணுவதற்காக தாமும் பெற்றோரும் வீட்டில் மேற்கொண்டு வரும் செயற்பாடுகளைப் பட்டியல்படுத்த வழிப்படுத்துங்கள்.

**தேர்ச்சி 7.0 :** **ஒவ்வோர் அம்சம் தொடர்பாகவும் இஸ்லாத்திற்கென தனியானதொரு பார்வை உண்டென்பதை புரிந்து அதனடிப்படையில் அனைத்தையும் நோக்கித் திறனாய்வர்.**

**தேர்ச்சி மட்டம் 7.3 :** **இஸ்லாத்தில் நடுநிலை பேணுவதன் அவசியத்தை விளங்கி வாழ்வில் கடைப்பிடிப்பார்.**

**பாடவேளை : 2**

**கற்றல் பேறுகள்:**

- நடுநிலை பேணுவதன் முக்கியத்துவத்தினை உணர்ந்து அதன்படி செயற்பட்டு வருவார்.
- நடுநிலை பேணுவதன் மூலம் கிடைக்கும் நன்மைகளை அறிந்து கூறுவார்.
- நடு நிலை தவறும்போது ஏற்படும் பாதிப்புக்கள் தொடர்பாகக் அக்கறையுடன் செயற்பட்டு வருவார்.
- இஸ்லாத்தில் நடு நிலை பேணுவது தொடர்பாக குறிப்பிடப்பட்டுள்ள போதனைகளை ஏற்று முன்வைப்பார்.

**பாடத்தைத் திட்டமிடுவதற்கான அறிவுறுத்தல்கள்:**

படி 1 :
- இணைப்பு 1 இல் உள்ள வரலாற்றுச் சம்பவத்தை வாசித்து மாணவர்களைக் கவனயீர்ப்புச் செய்யுங்கள்:
- பின்வரும் விடயங்களை மையப்படுத்திக் கலந்துரையாடலில் ஈடுபடுங்கள்:
  - இஸ்லாம் ஓர் நடுநிலையான மார்க்கம் என்ற அடிப்படையில் இஸ்லாம் அனைத்து விவகாரங்களிலும் நடுநிலை பேணுவதை வலியுறுத்துகிறது.
  - இஸ்லாத்தின் அனைத்து கடமைகளும் போதனைளும் நடுநிலைமை பேணுவதை வலியுறுத்துகின்றன.
  - ஆன்மீகம், அரசியல், சமூக வாழ்வு என அனைத்து பகுதியிலும் நடுநிலை அவசியமாகிறது.
  - நபி (ஸல்) அவர்கள் வாழ்வில் எப்போதும் நடுநிலை பேணி வந்திருக்கிறார்கள்.
  - எமது அன்றாட வாழ்விலும் அனைத்து விடயங்களிலும் நடுநிலையாக இருப்பது அவசியமாகும். நடுநிலை என்ற பண்பு எங்களை விட்டு விலகும்போது எமது தனிப்பட்ட வாழ்விலும் சமூக வாழ்விலும் பல பிரச்சினைகள் தோன்றுவதற்குக் காரணமாக அமைகிறது..

படி 2 :
- மாணவர்களை நான்கு குழுக்களாகப் பிரித்து ஒவ்வொரு குழுவுக்கும் குழுத் தேடியாய்வு அறிவுறுத்தல் பத்திரத்தை வழங்குங்கள்.
- கலந்துரையாடிக் கருத்துக்களை வெளிப்படுத்த நெறிப்படுத்துங்கள்.
- மாணவர்களின் குழுச் செயற்பாட்டை அவதானித்து உறுதிப்படுத்துங்கள்.

படி 3 : 

- ஒவ்வொரு குழுவிற்கும் தாம் எழுதியவற்றை முன்வைக்கச் சந்தர்ப்பம் வழங்குங்கள்.
- ஏனைய குழுக்களிடமிருந்து போஷிக்கத்தக்க கருத்துக்களைப் பெற்றுக் கொள்ளுங்கள்.
- பின்வரும் விடயங்களை வெளிக்கொணரும் வகையில் மீளாய்வு செய்யுங்கள்:
    - இஸ்லாமிய கடமைகள், குடும்ப வாழ்வு, அன்றாட நடவடிக்கைகள் என அனைத்திலும் இஸ்லாம் நடுநிலை பேணுவதை வலியுறுத்துவதோடு நடுநிலை தவறுவதைக் கண்டிக்கிறது. நடுநிலை தவறுதல் தனிமனித வாழ்வு, சமூக வாழ்வு என்பன சீர்குலையக் காரணமாக அமையும்.
    - "நபியே நீர் கூறும் வேதம் அருளப்பட்டவர்களே உங்களது மார்க்கத்தில் உண்மையல்லாததை மிகைப்படக் கூறி வரம்பு மீறாதீர்கள்." (ஸுரதுல் மாயிதா- 77)
    - "உண்ணுங்கள் பருகுங்கள் ஆனால் வீண்விரயம் செய்யாதீர்கள்." (அ.ஃ.ராப்- 31)
    - "உமது தொழுகையில் உமது குரலை மிகவும் உயர்த்த வேண்டாம். மிகத் தாழ்த்தவும் வேண்டாம். இவ்விரண்டுக்குமிடையே மிதமான தொனியைக் கடைப்பிடிக்கவும்." (பனீ இஸ்ராயீல்: 110)
    - "மு.ஃ.மின்களே அவ்வாறே நாம் ஏற்றத்தாழ்வற்ற நடுநிலையான சமுதாயத்தினராக உங்களை ஆக்கினோம்." (ஸுரதுல் பகரா- 143)
    - நடுநிலையை பேணுவது இம்மை, மறுமை வெற்றிக்கு காரணமாய் அமைகிறது.

**(இணைப்பு 1)**

**வரலாற்றுச் சம்பவம்**

இறை தூதர் (ஸல்) அவர்களது காலத்தில் பனீ மக்சூமி என்ற உயர் குலத்தைச் சேர்ந்த ஒரு பெண்மணி திருடி விடுகின்றாள். அவள் குற்றம் சாட்டப்பட்ட நிலையில் இறைதூதர் (ஸல்) அவர்களின் முன்னிலையில் கொண்டு வரப்பட்டாள். அவளுக்கு இஸ்லாமிய ஷரீஅத் சட்டத்தின் அடிப்படையில் தண்டனை வழங்க முடிவெடுக்கப்பட்டது. அவள் மீது தண்டனை நிறைவேற்றப்பட்டால், அது பனீ மக்சூமி குலத்திற்கு மிகப் பெரும் வெட்கமாகவும் அவர்களது குலப் பெருமையை புதைப்பதாகவும், கௌரவம் கெட்டுப் போவதாகவும் ஆகி விடுமே என்று அக்குலத்திலிருந்த பெரியவர்கள் பதற்றமடைந்தார்கள். இது தொடர்பாக நபி (ஸல்) அவர்களிடம் பரிந்துரை செய்வதற்காக உஸாமா பின் ஸைத் (ரழி) அவர்களை அனுப்பிவைத்தார்கள்.

விடயத்தை அறிந்து கொண்ட நபியவர்கள், தனது தோழர்கள் அனைவரையும் ஒன்றுதிரட்டி, "உங்களுக்கு முன்னிருந்தவர்கள் இதன் காரணமாகவே அழிக்கப்பட்டார்கள். அவர்கள் குற்றம் நிரூபிக்கப்பட்டவர்களுக்கு இடையே பாகுபாடு காட்டினார்கள். இருப்பவனுக்கு ஒரு நீதி; இல்லாதவனுக்கு ஒருநீதி; ஆட்சியாளனுக்கு ஒரு நீதி; குடியானவனுக்கு ஒரு நீதி.. என்று நீதி வழங்குவதில் பாகுபாடு காட்டியதன் காரணமாகவே அவர்கள் அழிக்கப்பட்டார்கள்" என்று கூறினார்கள். ''இறைவன் மீது சத்தியமாக..! எனது மகள் பாத்திமாவே இந்தக் குற்றத்தைச் செய்திருந்தாலும், அவளது கரத்தை நான் துண்டித்திருப்பேன்'' என்று சூளுரைத்தார்கள்.

**தரவிருத்தி உள்ளீடுகள் :**

- பொது அறிவுறுத்தல்களுக்கேற்ப, பொருத்தமானவற்றைப் பயன்படுத்துங்கள்.

**கணிப்பீடு மதிப்பீட்டுக்கான அறிவுறுத்தல்கள் :**

- கற்றல் பேறுகளை அடிப்படையாகக் கொண்டு மதிப்பீட்டு நியமங்களை உருவாக்கிக் கொள்ளுங்கள்.

**குழு தேடியாய்வு அறிவுறுத்தல் பத்திரம்**

**குழு-01** குர்ஆன் நடுநிலைப் போக்கை வலியுறுத்தும் வசனங்கள் ஐந்தைத் தொகுத்து எழுதுங்கள்.

**குழு-02** நபிகளாரின் ஸீராவில் நடுநிலை பேணுவதன் அவசியம் தொடர்பாக முன்வைக்கப்பட்டுள்ள ஆதாரங்கள் மூன்றைத் தொகுத்து எழுதுங்கள்.

**குழு-03** நடுநிலை பேணுவதன் மூலம் கிடைக்கும் நன்மைகளைக் கலந்துரையாடிப் பட்டியல்படுத்துங்கள்.

**குழு-04** நடுநிலை தவறும்போது தனிநபருக்கும் சமூகத்திற்கும் ஏற்படும் பாதிப்புக்களைக் கலந்துரையாடி எழுதுங்கள்.

**வீட்டில் பின்தொடர் செயற்பாடு :**

உங்களுடைய குடும்ப உறுப்பினர்கள், அயலவர்களின் செயற்பாடுகளை இஸ்லாத்தின் நடுநிலைக் கோட்பாட்டின் அடிப்படையில் ஒப்பிட்டு எழுதி அவர்களுடன் கலந்துரையாடுங்கள். கலந்துரையாடலின் மூலம் தொகுத்தவற்றை வகுப்பில் சமர்ப்பிக்க சந்தர்ப்பம் அளியுங்கள்.

**தேர்ச்சி 7.0 : ஒவவோர் அம்சம் தொடர்பாகவும் இஸ்லாத்திற்கென தனியானதொரு பார்வை உண்டென்பதை புரிந்து அதனடிப்படையில் அனைத்தையும் நோக்கித் திறனாய்வர்.**

**தேர்ச்சி மட்டம் 7.4 : பிக்ஹுல் அவ்லவிய்யாத் என்ற எண்ணக்கருவை விளங்கி வாழ்வில் ஒழுகிவருவார்.**

**பாடவேளை : 2**

**கற்றல் பேறுகள்:**

- தமது வாழ்வில் முதன்மைப்படுத்த வேண்டிய விடயங்களை அறிந்து கூறுவார்.
- அன்றாட வாழ்வில் அனைத்து விடயங்களும் ஒழுங்குபடுத்தப்பட்டதாக அமைய வேண்டும் என்பதை உணர்ந்து நடப்பார்.
- வாழ்க்கையில் பல்வேறு விடயங்களிலும் முதன்மைப்படுத்தும் ஆற்றலைப் பெற்று அதன்படி செயற்பட்டு வருவார்.
- முதன்மைப்படுத்தல் மூலம் தனிமனித, சமூக நலன்கள் பேணப்படுகிறது என்பதை விளங்கி ஒழுகுவார்.

**பாடத்தைத் திட்டமிடுவதற்கான அறிவுறுத்தல்கள்:**

**படி 1** :
- இணைப்பு 1 இல் உள்ள தகவல் கோவையை வாசித்து அல்லது வாசிக்கவிட்டு மாணவர்களை கவனயீர்ப்புச் செய்யுங்கள்.
- பின்வரும் விடயங்களை மையப்படுத்திக் கலந்துரையாடலில் ஈடுபடுங்கள்.
    - எமது வாழ்வின் அன்றாட நிகழ்வுகளின்போது முன்னுரிமைப்படுத்த வேண்டிய அம்சங்கள் காணப்படுகின்றன.
    - முடிவுகளை எடுக்க முன் எதை முற்படுத்த வேண்டும் என்பது முக்கியமாகும்.
    - எமது வாழ்வின் அனைத்து சந்தர்ப்பங்களிலும் முக்கியமானதைவிட முக்கியமல்லாதவற்றை முதன்மைப்படுத்துவதோ மிக முக்கியமானதைவிட முக்கியமானதை முதன்மைப்டுததுவதோ பொருத்தமற்றதாகும்.
    - சிறிய விடயத்தைப் பெரிதுபடுத்துவதையும் பெரிய விடயம் ஒன்றை சிறிதுபடுத்துவதையும் இஸ்லாம் கண்டிக்கிறது.
    - இவ்வாறு முன்னுரிமைப்படுத்த வேண்டியவற்றை முதன்மைப்படுத்துவது தொடர்பான சட்ட ஒழுங்குகள் “பிக்ஹுல் அவ்லவிய்யாத்” எனப்படுகிறது.

**படி 2** :
- மாணவர்களை நான்கு குழுக்களாகப் பிரியுங்கள்.
- ஒவ்வொரு குழுவிற்கும் தேடியாய்வு அறிவுறுத்தல் பத்திரங்களை வழங்குங்கள்.
- தேவையான எழுது தாள்கள், நிறப் பேனாக்களை ஒவ்வொரு குழுவுக்கும் வழங்குங்கள்.
- மாணவர்களின் குழுச் செயற்பாட்டை அவதானித்து நெறிப்படுத்துங்கள்.
- வகுப்பில் அறிக்கையைச் சமர்ப்பிக்க ஆயத்தமாகுமாறு கூறுங்கள்.

படி 3 :

- ஒவ்வொரு குழுவிற்கும் தாம் எழுதியவற்றை முன்வைக்கச் சந்தர்ப்பம் வழங்குங்கள்.
- போஷிக்கத்தக்க கருத்துக்களை அடுத்த குழுக்களிடமிருந்து பெற்றுக் கொள்ளுங்கள்.
- பின்வரும் விடயங்களை வெளிக்கொணரும் வகையில் மீளாய்வு செய்யுங்கள்:
    - சீரான அளவுகோளின்படி கூட்டாமலும் குறைக்காமலும் உரிய இடத்தில் வைத்து நோக்குவது பிக்ஹுல் அவ்லவிய்யாத் எனப்படுகிறது.
    - சட்டம், செயற்பாடு, பொறுப்பு, பெறுமானம் என்பன ஷரீஆவின் அடிப்படையில் பல்வேறு படித்தரங்களைக் கொண்டுள்ளது.
    - இதனை குர்ஆனும் ஸுன்னாவும் எடுத்துக்காட்டுகின்றன.
    - “இஸ்லாதில் சிறந்த அமல் எது?” என நபியவர்களிடம் வினவப்பட்டபோது, நபியவர்கள் தொழுகையையும் மற்றொரு சந்தர்ப்பத்தில் “இஸ்லாத்திற்காக போராடுவதையும் வேறொரு சந்தர்ப்பத்தில் பெற்றோரை கவனிப்பதையும் குறிப்பிட்டிருக்கிறார்கள்.
    - நபியவர்கள் கஷ்டமான விடயங்களை விட இலகுவான விடயங்களுக்கு முன்னுரிமையளித்துள்ளார்கள்.
    - “இலகுபடுத்துங்கள். சிரமப்படுத்தாதீர்கள். ஆசையூட்டுங்கள் வெறுப்பூட்டாதீர்கள்.” (புகாரி, முஸ்லிம்)
    - “தேவையுள்ள உறவினர்களுக்கு தர்மம் செய்வது ஏனைய ஏழைகளுக்கு தர்மம் செய்வதைவிட மேலானது.”
    - “நாட்களில் வெள்ளிக்கிழமை சிறந்தது. இரவுகளில் லைலதுல் கத்ர் சிறந்தது.”
    - இஸ்லாமிய வரலாற்றில் எதனை முற்படுத்துவது போன்ற பிரச்சினைகள் தோன்றியபோது பிக்ஹுல் அவ்லவிய்யாத் தோன்றியது.

**(இணைப்பு -1)**

**வரலாற்றுச் சம்பவம்**

ஒரு தடவை பிஸ்ர் இப்னு ஹாரித் அவர்களிடம் வந்த ஒருவர், தான் ஹஜ் செய்ய நாடி இருப்பதாகவும் தனக்கு உபதேசிக்கும் படியும் வேண்டிக் கொண்டார். அதற்கு பிஸ்ர் அவர்கள் “உம்மிடம் எவ்வளவு பணம் இருக்கிறது?” என்று கேட்டார்கள். அதற்கு அவர் “இரண்டாயிரம்” என்று கூறவே “உனது ஹஜ்ஜின் மூலம் எதனை அடைய நாடுகிறீர்கள்?” என பிஸ்ர் வினவினார். அதற்கு அவர் “உலகப் பற்றற்ற மனோநிலை அல்லது க.்.பாவின் மீதான வேட்கை அல்லது அல்லாஹ்வின் திருப்பொருத்தம்” என்று பதிலளித்தார். அதற்கு பிஸ்ர் “நீர் உமது வீட்டில் இருந்து கொண்டே இரண்டாயிரம் திர்ஹங்களை செலவழித்து அல்லாஹ்வின் திருப்தியைப் பெற வழிவகை சொல்லவா?” எனக் கேட்டார். அதற்கு அவர் “ஆம்” என்று கூறவே “நீர் தற்போது போய் இந்த இரண்டாயிரம் திர்ஹம்களை பத்துப் பேருக்கு தர்மம் செய்வீராக! கடனை அடைப்பதற்காக கடனாளிக்கு கொடுப்பாயாக. ஓர் ஏழைக்குக் கொடு. அவன் தனது இழந்த செழுமையை மீண்டும் பெறட்டும். குடும்ப

ஏழ்மையைப் போக்க ஒரு குடும்பஸ்தனுக்கு வழங்குவாயாக. ஓர் அநாதையை பராமரிக்கும் ஒருவருக்கு நீர் கொடு. அநாதை அதனால் பயனடைந்து மகிழ்ச்சியடையக் கூடும். இந்த பணத் தொகை அனைத்தையும் ஒரு நபருக்கு உன்னால் கொடுக்க முடியுமாயின் அவ்வாறு செய். ஏனெனில் ஒரு முஸ்லிமுடைய உள்ளத்தில் உன்னால் சந்தோசத்தை தோற்றுவிக்க முடியுமாயின் ஒருவனது துக்கத்தை போக்க முடியுமாயின் துயரத்தை விரட்ட முடியுமாயின் பலவீனனுக்கு கைகொடுத்து உதவ முடியுமாயின் முதல் தடவையாக செய்யப்பட்ட ஹஜ்ஜுக்குப் பிறகு செய்யப்படும் நூறு ஹஜ்ஜைவிட சிறந்ததாகும். எனவே எழுந்து சென்று நாம் கூறியது போல அப்பணத்தை செலவு செய்வீராக அல்லது உமது உள்ளத்தில் உள்ள எண்ணம் யாது என்று சொல்?" என்றார்கள்.

அதற்கு அவர் "ஹஜ்ஜுப் பயணம் தான் எனது உள்ளத்திற்கு மிகவும் விருப்பமாக இருக்கிறது" என்றார். இதனைக் கேட்டு புன்னகை பூத்த பிஸ்ர் அவர்கள் "செல்வமானது அழுக்கான (ஹராமான) வியாபாரம் மூலம் அல்லது சந்தேகத்திற்கிடமான வழிகள் மூலம் திரட்டப்படுமானால் அச் செல்வங்கள் மனோ இச்சைப்படி செலவழிக்க வேண்டும் என்றுதான் உள்ளம் விரும்பும்" என்று இறுதியாக கூறினார்கள்.

**தரவிருத்தி உள்ளீடுகள் :**

- பொது அறிவுறுத்தல்களுக்கேற்ப, பொருத்தமானவற்றைப் பயன்படுத்துங்கள்.

**கணிப்பீடு மதிப்பீட்டுக்கான அறிவுறுத்தல்கள் :**

- கற்றல் பேறுகளை அடிப்படையாகக் கொண்டு மதிப்பீட்டு நியமங்களை உருவாக்கிக் கொள்ளுங்கள்.

**குழுத் தேடியாய்வு அறிவுறுத்தல் பத்திரம்**

**குழு-01** மாணவர்கள் ஒரு தேசிய பரீட்சைக்காக தயாராகும்போது பரீட்சை எழுதுவதற்கு முதல் நாள் கவனிக்க வேண்டிய முக்கியமானவை, அதி முக்கியமானவை போன்ற விடயங்களை வெவ்வேறாகப் பட்டியல்படுத்துங்கள்.

**குழு-02** பாடசாலையில் இஸ்லாமிய தின விழா ஒன்றை நடத்த ஏற்பாடு செய்யும்போது முதன்மைப்படுத்தப்பட வேண்டிய விடயங்களைத் தொகுத்து எழுதுங்கள்.

**குழு-03** முன்னுரிமைப்படுத்தப்பட வேண்டிய விடயங்களை முன்னுரிமைப்படுத்தும்போது ஏற்படும் நன்மைகளைக் கலந்துரையாடி எழுதுங்கள்.

**குழு-04** முன்னுரிமைப்படுத்தப்பட வேண்டிய விடயங்களை முன்னுரிமைப்படுத்தத் தவறும்போது ஏற்படும் பாதிப்புக்களைப் பட்டியல்படுத்துங்கள்.

**வீட்டில் பின்தொடர் செயற்பாடு**

வீட்டில் மிக அண்மையில் இடம்பெற்ற வைபவமொன்றினைக் குறிப்பிட்டு, அதனை ஒழுங்கு செய்யும்போது முன்னுரிமைப்படுத்திய முறையைப் பெற்றாருடன் கலந்துரையாடி எழுத வழிப்படுத்துங்கள்.

**தேர்ச்சி 7.0 : ஒவ்வோர் அம்சம் தொடர்பாகவும் இஸ்லாத்திற்கென தனியானதொரு பார்வை உண்டென்பதை புரிந்து அதனடிப்படையில் அனைத்தையும் நோக்கித் திறனாய்வார்.**

**தேர்ச்சி மட்டம் 7.5 : இஸ்லாம் வழங்கியுள்ள மனித உரிமைகளை ஆதாரங்களுடன் விளக்கிக் கூறுவார்.**

**பாடவேளை : 2**

**கற்றல் பேறுகள்:**

- இஸ்லாமிய நோக்கில் மனித உரிமைகள் அல்லாஹ்வினால் விதிக்கப்பட்டவை என்பதை அறிந்து கூறுவார்.
- மனித உரிமைகளைப் பேண வேண்டியதன் முக்கியத்துவத்தை நபி (ஸல்) அவர்களின் முன்மாதிரிகளிலிருந்து விளக்குவார்.
- உலகிலுள்ள ஒவ்வோர் உயிரினத்திற்கும் உரிமைகள் காணப்படுகின்றன என்பதை உணர்ந்து அதனை மதித்து நடப்பார்.

**பாடத்தைத் திட்டமிடுவதற்கான அறிவுறுத்தல்கள்:**

படி 1 :
- இணைப்பு 1 இலுள்ள தகவல் கோவையினை வாசித்து மாணவர்களை கவனயீர்ப்புச் செய்யுங்கள்.
- பின்வரும் விடயங்களை மையப்படுத்தியதாகக் கலந்துரையாடலில் ஈடுபடுங்கள்:
    - உலகில் உள்ள அனைத்துப் படைப்பினங்களுக்கும் உரிமைகள் காணப்படுகின்றன.
    - இஸ்லாத்தின் கண்ணோட்டத்தில் அனைத்து அதிகாரமும் அல்லாஹ்வுக்குரியன. எனினும், அல்லாஹ்வின் பிரதிநிதி என்ற வகையில் மனிதனுக்குச் சில வரையறைகளுடன் அதிகாரங்களும் உரிமைகளும் அல்லாஹ்வினால் வழங்கப்பட்டுள்ளன.
    - இஸ்லாமிய நோக்கில் மனிதனின் உரிமையை விடவும் கடமைகளுக்கே முன்னுரிமையளிக்கப்படுகிறது.
    - ஒவ்வொரு மனிதனும் தமக்கான உரிமைகளைப் பெற முனைவது போலவே அடுத்தவரின் உரிமைகளை மதித்து நடப்பது கட்டாயமாகும்.
    - ஏனையவர்களின் உரிமைகளை மறுப்பது பாவமாகும்.
    - ஏனையவர்களின் உரிமைகள் மறுக்கப்படும்போது சமூகத்தில் பல்வேறு முரண்பாடுகள் தோன்றும்.

படி 2 :
- மாணவர்களை நான்கு குழுக்களாகப் பிரித்து ஒவ்வொரு குழுவுக்கும் குழுத் தேடியாய்வு அறிவுறுத்தல் பத்திரத்தை வழங்குங்கள்.
- கலந்துரையாடிக் கருத்துக்களை வெளிப்படுத்த நெறிப்படுத்துங்கள்.
- மாணவர்களின் குழுச் செயற்பாட்டை அவதானித்து உறுதிப்படுத்துங்கள்.

படி 3 : • ஒவ்வொரு குழுவிற்கும் தாம் எழுதியவற்றை முன்வைக்கச் சந்தர்ப்பம் வழங்குங்கள்.

- போஷிக்கத்தக்க கருத்துக்களை அடுத்த குழுக்களிடமிருந்து பெற்றுக் கொள்ளுங்கள்.
- பின்வரும் விடயங்களை வெளிக்கொணரும் வகையில் மீளாய்வு செய்யுங்கள்:

  - இஸ்லாமிய நோக்கில் மனித உரிமை என்பது எந்தவொரு சட்டமாக்கும் சபையாலோ, அதிகாரம் படைத்த மனிதனாலோ வழங்கப்பட்டதன்று. அது அல்லாஹ்வினால் வழங்கப்பட்டதாகும்.
  - இவை ஒவ்வொன்றையும் ஒவ்வொரு முஸ்லிமும் ஏற்றுக் கொள்ளவும் உலகிலுள்ள ஒவ்வொரு ஆட்சி அதிகாரமும் நடைமுறைப்படுத்தவும் கடமைப்பட்டுள்ளன.
  - மேற்படி உரிமைகளை மாற்றம் செய்யவோ நீக்கவோ யாருக்கும் அதிகாரம் கிடையாது.
  - இஸ்லாமிய நோக்கில் மனித உரிமைகள் தனி மனிதன், சமூக வாழ்வின் அனைத்துத் துறைகளுடனும் தொடர்புபட்டது.
  - மனித உரிமைகள் என்பது பல்வேறு பகுதிகளை உள்ளடக்கியது:
    - உயிர் வாழும் உரிமை
    - சுதந்திரம் மற்றும் நீதிக்கான உரிமை
    - கருத்து வெளிப்பாட்டிற்கான உரிமை
    - சட்டத்தின் முன் அனைவரும் சமம் என்ற உரிமை
    - பெண்கள் குழந்தைகளுக்கான உரிமைகள்
    - பொருளாதார உரிமைகள்
    - அரசியல் உரிமைகள்
  - ஒவ்வொரு முஸ்லிமும் தாம் உரிமைகளைப் பெற்றுக் கொள்வதற்கு முயற்சிப்பது போலவே தம்முடைய கடமைகளையும் தவறாது செய்தல் அவசியம்.
  - மற்றவர்களின் உரிமைகளை மதித்து நடப்பது அவசியமாகும்.

**(இணைப்பு -1)**

**தகவல் கோவை**

“உமர் (ரழி) அவர்கள் ஜெரூசலத்தில் கிறிஸ்தவர்களுக்கு வழங்கிய சாசனம் பற்றி இங்கு குறிப்பிடுதல் பொருத்தமானதாகும். இச்சாசனம் முஸ்லிம் ஆட்சியாளர்கள் முஸ்லிம் அல்லாத பிரஜைகளின் அடிப்படை உரிமைகள் தொடர்பாகக் கடைப்பிடித்த தாராளக் கொள்கைக்கு மிகச் சிறந்த ஒரு சான்றாக விளங்குகின்றனது.

இச்சாசனம் பின்வருமாறு அமைந்திருந்தது:

"அளவற்ற அருளாளனும் நிகரற்ற அன்புடையோனுமாகிய அல்லாஹ்வின் திருநாமத்தால்.... இந்த சாசனம் அல்லாஹ்வின் அடியானும் விசுவாசிகளின் தலைவருமான உமரினால் ஐலியாவிலுள்ள மக்களுக்கு வழங்கப்படுவதாகும். அவர்களது உயிர்களுக்கும்,

உடைமைகளுக்கும், கோயில்களுக்கும், சிலுவைகளுக்கும் பாதுகாப்பு வழங்கப்படுவதுடன், கிறிஸ்தவ மதத்தை அனுஷ்டிப்பதற்கும் பூரண சுதந்திரம் வழங்கப்படுகிறது. அவர்களது கோயில்கள் அழிக்கப்படமாட்டா. அதிலிருக்கும் அவர்களது சிலுவைகளுக்கு எத்தகைய தீங்கும் விளைவிக்கப்படமாட்டாது. அவர்களது மத விவகாரங்களில் எத்தகைய தலையீடும் இருக்காது. அவர்களுக்கு எத்தகைய தீங்கும் விளைவிக்கப்பட மாட்டாது.

(கலாநிதி எம்.ஏ.எம். சுக்ரி அவர்களின் இஸ்லாமும் மனித உரிமைகளும் என்ற நூலிலிருந்து)

**தரவிருத்தி உள்ளீடுகள் :**

- பொது அறிவுறுத்தல்களுக்கேற்ப, பொருத்தமானவற்றைப் பயன்படுத்துங்கள்.

**கணிப்பீடு மதிப்பீட்டுக்கான அறிவுறுத்தல்கள் :**

- கற்றல் பேறுகளை அடிப்படையாகக் கொண்டு மதிப்பீட்டு நியமங்களை உருவாக்கிக் கொள்ளுங்கள்.

**குழுத் தேடியாய்வு அறிவுறுத்தல் பத்திரம்**

**குழு-01** மனித உரிமை பற்றிய கோட்பாடுகளுக்கு அடிப்படையாக அமையும் அல் குர்ஆன் வசனங்களை மொழிபெயர்ப்புடன் எழுதுங்கள்.

**குழு-02** மனித உரிமைகளை வலியுறுத்தும் ஹதீஸ்கள் நான்கை தொகுத்து எழுதுங்கள்

**குழு-03** உமர் (ரழி) அவர்களுக்கு எதிராக ஒரு சாதாரண பிரஜையான உபை இப்னு கஅப் ஒரு முறைப்பாட்டை செய்திருந்தார். இவ்வழக்கில் பிரதிவாதியாக இருந்த உமர் (ரழி) அவர்களை விசாரணை வழக்கிற்காக சமுகமளித்த போது நீதிபதியாக கடமையாற்றிய செய்த் பின் சாபித் அவர்கள் கலீபா உமர் (ரழி) அவர்களை மரியாதையோடும் கண்ணியத்தோடும் நடத்த ஆரம்பித்தார்கள். இது நீங்கள் இழைக்கும் முதல் அநீதி என நீதிபதியை நோக்கி கூறிய உமர் (ரழி) அவர்கள், உபை இப்னு கஅபிற்கு அண்மையில் சென்று அமர்ந்தார்கள். உமர் (ரழி) அவர்கள் நாட்டின் ஆட்சியாளராக இருந்தும் தமது எதிரிக்குப் பாரபட்சம் காட்டப்படுவதை விரும்பவில்லை.

இச்சம்பவத்தை மையமாக வைத்து சுவர்ப் பத்திரிகைக்கு ஆக்கம் ஒன்றை எழுதுங்கள். அதற்குப் பொருத்தமான தலைப்பொன்றயும் இடுங்கள்.

**குழு-04** மனித உரிமைகளை பேண வேண்டியதன் அவசியத்தை வலியுறுத்தும் துண்டுப் பிரசுரம் ஒன்றைத் தயாரியுங்கள்.

**வீட்டில் பின்தொடர் செயற்பாடு :**

எமது சூழலில் வாழும் மாற்று சமூகத்தவர்களுக்கு நாம் வழங்க வேண்டிய உரிமைகள், கடமைகள் தொடர்பாக நபி (ஸல்) அவர்களின் வழிகாட்டல்களிலிருந்து தொகுத்து எழுத வழிப்படுத்துங்கள்.